

# எதிர்காலத்தின் வடிவம்!

**து**ணிகள் என்ற வார்த்தையை கேட்டதுமே நமது மனதில் பருத்தி, பட்டு, சிஃபான், லேஸ் உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு நெய்யப்பட்ட அழகழகான திரைச்சீலைகள் தான் நினைவுக்கு வரும். மொகஞ்சதாரோ பெண்ணின் சிலை மீது போர்த்தப்பட்டுள்ள துணியாக இருந்தாலும், கிலியோபாட்ரா அணிந்திருந்த அழகான ஆடைகளாக இருந்தாலும், விக்டோரியா அரசியார் காலத்து பால் டான்ஸ் கவுன்களாக இருந்தாலும், நமது அரசியார்களும், இளவரசிகளும் அணிந்திருந்த ஆடைகளாக இருந்தாலும் சரி... ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஆடைகள் எனப்படுபவை தவிர்க்கமுடியாத ஒருங்கிணைந்த அம்சம் ஆகும். இயற்கையான இழைகளான பருத்தி, சணல், பட்டு செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட இழைகளான ரேயான், சிஃபான், மஸ்லின் என ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையான இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகளை மக்கள் அணிந்தனர்.

இந்திய துணி வகைகள் அவற்றின் அழகான வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளுக்காக உலகப் புகழ் பெற்றவை. இந்தியாவின் அளவுக்கு உலகில் வேறு எந்த நாடும் அதன் பன்மயப்பட்ட கலாச்சாரத்திற்கும், பலவகையான துணிப் பாரம்பரியத்திற்கும் இடையே நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கவில்லை. இராஜஸ்தான் மாநிலத்தின் பந்தானியாக இருந்தாலும் சரி, வங்காளத்தின் காந்தாவாக இருந்தாலும் சரி, குஜராத்தின் தஞ்சோயாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டின் காஞ்சிபுரமாக இருந்தாலும் சரி ஒவ்வொரு துணிவகையும் அப்பகுதியின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமாக திகழ்கின்றன. பனாரஸ் பட்டு, ஒதிஷா பட்டு, டஸ்ஸார், மூங்கா, சந்தேரி ஆகிய துணிவகைகள் பிரபலமானவையும், உலகம் முழுவதும் போற்றப்படுபவையுமாகும்.

பருத்தி துணிவகைகளை தயாரிப்பதிலும், அணிவதிலும் இந்தியா தான் எப்போதும் முன்னணியில் உள்ளது. காலம்காலமாக பருத்தி துணி வகைகள் தான் சாதாரண மனிதர்களின் உடைகளாக இருந்து வந்திருக்கின்றன. வேட்டி, குர்தா, புடவைகள், லஹேங்கா என அனைத்து ஆடைகளையும் சாதாரண மக்கள் பருத்தியில் தான் தயாரித்து அணிந்து வந்திருக்கின்றனர். உலகின் மிகப்பெரிய பருத்தி உற்பத்தி நாடாக இந்தியா விளங்கியதால், ஒரு கட்டத்தில் இங்கிலாந்தின் பருத்தி துணித் துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்தது. இதனால் அச்சமடைந்த இங்கிலாந்து அரசு அதன் துணித்துறையை பாதுகாக்கும் நோக்குடன் உலகின் பல்வேறு நாடுகளுக்கு பருத்தி துணிவகைகள் ஏற்றுமதி செய்யப்படுவதை தடுக்க பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. இதனால் இந்தியர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பருத்தி துணிவகைகளை அவர்களே வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டின் இத்தகைய அடக்குமுறைகள் தான் இந்தியாவில் விடுதலை இயக்கம் உருவெடுக்க முக்கியக் காரணங்களாக அமைந்தன. அதனால் தான் இந்திய விடுதலையின் அடையாளமாக காதி உருவெடுத்தது.

காலப்போக்கில் இந்திய மக்களுக்கு, குறிப்பாக ஊரக பெண்களுக்கு மிகப்பெரிய வாழ்வாதாரமாக காதி உருவெடுத்தது. கோடிக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் சக்தி காதிக்கு இருப்பதை உணர்ந்த இந்தியப் பிரதமர், அண்மையில் ‘மன் கி பாத்’ நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது இந்திய இளைஞர்கள் அவர்களின் ஆடைகளில் ஒன்றாவது காதி ஆடையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பிரதமரின் வார்த்தைகளில் கூற வேண்டுமென்றால், ‘‘பாரம்பரிய கைத்தறி பொருட்களுக்கு நான் சரியான இடத்தை அளிக்க வேண்டும்; இந்தியாவிலும், உலகத்திலும் நாகரீக ஆடைகளின் மையமாக காதி ஆடைகளை மாற்ற வேண்டும்’’ என்று கூற வேண்டும்.

*– தொடர்ச்சி 4ஆம் பக்கம்...*

# திட்டம்

## மாதஇதழ்

மலர்: 48
இதழ்: 2

அக்டோபர் 2016
அஸ்வின – கார்த்திக 1938



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**

முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**


கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | : | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | : | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | : | ரூ. 610.00 |


சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை – 600 006.
தொலைபேசி: 2827 2382



❖ இந்தியாவில் கைவினை பொருட்களின் நிலைத்து நிற்கும் தன்மை
– ஸ்மிருதி ஜூபின் இராணி

❖ தொழிலாளர் நலப் பாதுகாப்பு
– அஜய் டம்டா

❖ ஜவுளித் துறையில் வேலை உருவாக்கம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான முயற்சிகள்
– ராஷ்மி வர்மா

❖ இந்தியாவில் கைத்தறிகள்: கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்
– ஜெயா ஜேட்லி

❖ இந்தியாவின் சணல் தொழில் வளர்ச்சி: சட்டப்பாதுகாப்புக்கு அப்பால்...
– சுப்ரதா குப்தா

❖ காதி நவீன இந்தியாவைக் கட்டமைக்க வலுவான அடித்தளம்
– வீ.கே. சக்ஸேனா

❖ இந்தியாவின் துணி, ஆடைகள் ஏற்றுமதிக்கு உருவாகிவரும் சந்தைகள்
– அதிதிதாஸ் ராவுத்

❖ இந்திய நெசவுத் தொழில்: உலக நிலவரம்
– ஆர்.கே.டால்மியா

❖ முடுக்கம் பெறும் இந்திய ஜவுளித்துறை வளர்ச்சி
– டாக்டர் கவிதா குப்தா

❖ ஜவுளித்துறையின் போக்குகள் 2016/17
– அஞ்சு மோடி

❖ இந்தியாவில் ஜவுளித்துறை மேம்பாட்டுக்கான ஒரு உத்தியாக தொழிலகத் தொகுப்பு அணுகுமுறை
– டாக்டர் ஏ.கே.கிருஷ்ணகுமார்



*அடுத்த மாத இதழில்....*
**வரிவிதிப்பு சீர்திருத்தம்**
பற்றிய கட்டுரைகள்

நினைவு தெரிந்த காலத்திலிருந்து இந்தியப் பட்டு வகைகள் உலகப்புகழ் பெற்றவையாக விளங்குகின்றன. இந்தியப் பட்டுக்கும், மஸ்லின் துணிக்கும் உலகம் முழுவதும் பெரும் கிராக்கி இருந்தது. முத்துக்கள், மயில்கள், மசாலாப் பொருட்கள் ஆகியவற்றுடன் பட்டு வகைகளும் இந்தியாவிலிருந்து அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. வடகிழக்கு மாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் பட்டுப்புழு வளர்ப்பு மிகப்பெரிய வேலைவாய்ப்பு தரும் தொழிலாக இருந்தது. ஒரு காலத்தில் பொருட்களை கட்டி அனுப்புவதற்கு பயன்படும் பொருளாக திகழ்ந்த சணல், ஆடை வடிவமைப்பாளர்களின் கற்பனையில் அழகிய ஆடைகளாக உருவெடுத்தன.

உலகின் இரண்டாவது பெரிய துணி ஏற்றுமதியாளராக திகழும் இந்தியாவில், துணித்துறை தான் வேளாண்மைக்கு அடுத்தபடியாக 4.5 கோடி மக்களுக்கு நேரடியாகவும், 6 கோடி மக்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கும் இரண்டாவது பெரிய தொழிலாக திகழ்கிறது. இது இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்திக்கு 4% பங்களிக்கிறது.

உலகின் ஒட்டுமொத்த ஜவுளி வணிகத்தில் இந்தியாவின் பங்கு 5.65% ஆகும். 2015–16 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் துணித்துறையின் பங்கு 14% ஆகும். ஆனாலும், சீனா, வங்கதேசம், ஐரோப்பிய யூனியன், ஹாங்காங், வியட்நாம், இந்தோனேஷியா, அமெரிக்கா, கம்போடியா ஆகிய நாடுகளிடமிருந்து இந்தியா தற்போது கடுமையான போட்டியை சந்தித்து வருகிறது. எனினும், ஜவுளித்துறையில் 100% அந்நிய முதலீடு உள்ளிட்ட அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் ஜவுளித்துறை இந்தியப் பொருளாதாரத்தில் தொடர்ந்து முன்னணியில் நீடிப்பதுடன், உலக ஏற்றுமதியில் புதிய உச்சங்களைத் தொடப்போவதும் உறுதி!

**– முதன்மை ஆசிரியர்**



## பாரதப் பிரதமரின் தேசிய கைத்தறி நாள் செய்தி ஆகஸ்ட் 7, 2016

கைத்தறித்துறைக்கு ஊக்கமளிக்கவும், கைத்தறித் துணிகளை அதிகமாகப் பயன்படுத்தவும் நாம் உறுதி ஏற்போம்.

நமது கைத்தறித்துறை பன்முகத்தன்மை உடையது, சுற்றுச்சூழலுக்கு உகந்தது. எண்ணற்ற வேலை வாய்ப்புகளை வழங்குகிறது.

கைத்தறித் துறையில் பெண்கள் ஏராளமான எண்ணிக்கையில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, கைத்தறி துறையின் வளர்ச்சி பெண்களுக்கு அதிகாரம் அளித்திட உதவும்.

கைத்தறித் துறையில் பருத்தி, பட்டு, கம்பளி, சணல் போன்ற இயற்கை இழைகளே பயன்படுத்தப்படுகின்றன. தாவரச் சாயங்கள், பிறவகை அங்ககப் பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இத்துறை செயல்பாட்டை சுற்றுச்சூழலுக்கு அதிகம் உகந்ததாக மாற்ற முடியும்.

இளைஞர்கள் மின்னணு வர்த்தக முறையை அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, கைத்தறி உற்பத்திப் பொருள்களையும் மின்னணு வர்த்தகத்தில் (e commerce) இடம் பெறச் செய்ய வேண்டும்.

தறிக்கு செல்லும் முன்பாக நடைபெறும் வேலைகளில் சிறுசிறு இயந்திரங்களைப் பயன்படுத்தக்கூடிய விதத்தில் தொழில்நுட்பம் மேம்படவேண்டும்.


சிறு, குறு கைத்தறித் தொழிலகங்களின் நிதித் தேவைகளுக்கு உதவுவதற்காக முத்ரா வங்கியை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இந்த முயற்சி நெசவாளர்களுக்கு நிச்சயமாகப் பயனளிக்கும்.

# இந்தியாவில் கைவினை பொருட்களின் நிலைத்து நிற்கும் தன்மை

– ஸ்மிருதி ஜூபின் இராணி

இந்தியாவின் கைவினை மற்றும் கைத்தறி பொருள்கள் நாட்டில் வளமான பண்பாட்டு பாரம்பரியத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றன. முறைப்படுத்தப்படாத உதிரியாக செயல்படும் அதிக வேலையாட்களைக் கொண்ட குடிசைத் தொழில்களில் தான் கிராமப்புற பகுதிகளிலும், புறநகர் பகுதிகளிலும் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்து நாட்டிற்கு பெருமளவில் அந்நிய செலாவணியும் கிடைக்கும். அதே சமயம், இந்தியாவின் வளமிக்க தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டு பாரம்பரியம் பாதுகாக்கப்படுகிறது.

விவசாயிகள் மற்றும் ஆடு, மாடுகளை வளர்க்கும் ஆயர்பாடி சமூகத்தினர் தங்களுடைய துணை வருமானத்திற்கு துணிகளை நெய்தல் மற்றும் கைவினை பொருட்களை தயாரிக்கும் திறமைகளை நம்பியுள்ளனர். இந்தியாவில் தற்போது சுமார் 2,30,00,000 மக்கள் கைவினைப் பொருட்களையும் நெசவுகளையும் நம்பியுள்ளனர். சமூக பொருளாதார அடிப்படையில் அவர்கள் அடிமட்டத்தில் உள்ளனர். அவர்களால் நாட்டிற்கு கிடைக்கும் ஏற்றுமதி சார்ந்த உயர் வருமானத்தால் அவர்களுடைய அரிய பங்கை நாம் அறிய முடியும். இந்திய கைவினைப் பொருட்கள் உலகெங்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், யுனைடெட் ஆரப் எமிரேட்ஸ், ஜெர்மனி, ஃபிரான்ஸ், தென் அமெரிக்க நாடுகள், இத்தாலி, நெதர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளாகும். இந்திய கலாச்சார வழியில் இந்தியாவின் பண்டைய வளமிக்க பாரம்பரிய கலை வேலைப்பாடுகளையும்,



கைவினைஞர்களையும் அழகான திறமைகளையும் அது வெளிப்படுத்துகிறது.

இந்த தொழிற்துறையின் முக்கிய வலிமையாக அளவற்ற மலிவான தொழிலாளர்களும் உள்ளூரில் கிடைக்கும் பொருட்களும் குறைந்த முதலீடும், உலகெங்கும் பாராட்டப்பட்டுள்ள கைவினைத் திறமைகள் போன்றவைகள் ஆகும். இப்படிப்பட்ட வலிமைகள் இருந்தும் இந்தத் துறை பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மிகக்குறைந்த படிப்பறிவு, நவீன தொழில் நுட்பங்களை அறியாமை, கச்சா பொருட்களை வாங்குவதற்கான நிதி வசதியின்மை, மற்றும் வளமான நிர்வாக அமைப்புகள் இல்லாமை ஆகியவைகளாகும். மேல்மட்ட அளவில் பார்க்கும் போது இந்தத் துறைக்கு இயந்திர மயமாக்கப்பட்ட துறையிலிருந்து பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது. கைத்தறித் துறை, விசைத்தறித் துறையோடும் செயற்கை இழை துணிகளோடும் போட்டியிட வேண்டியுள்ளது. இன்று, கண்ணாடி மற்றும் மெலமைனால் செய்யப்படும் பொருட்களால் சுற்றுசூழலுக்கு உகந்த மெருகிடப்படாத மண் பாத்திரங்கள் மறைந்து விட்டன.

---

**ஸ்மிருதி ஜூபின் இராணி,** மத்திய ஜவுளித்துறை அமைச்சர், இந்திய அரசாங்கம்.

இப்படிப்பட்ட துயர் நிலைகளிலும் இந்தத் துறை ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சி கண்டுள்ளது. கைவினைப் பொருட்கள் துறையில் முதலீடு செய்வதால் கிராமப்புற மக்களின் பொருளாதார, சுற்றுசூழல் மற்றும் சமூக நிலைமைகள் மேம்படுகின்றன. உலகளவில் பயன்படுத்தப்படும் கைவினைப்பொருட்களின் மதிப்பு 2019ஆம் ஆண்டுவாக்கில் அமெரிக்க டாலர்களில் சுமார் 700 பில்லியன் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது; இந்தியாவின் தற்போதைய உலகப் பங்கு இரண்டு சதவிகிதம். இது மேலும் உயர்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதனால், சுற்றுசூழல் பயன்களும் உள்ளன. கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் கரியமில வெளிப்பாடு மிகவும் குறைவாக இருக்கும். அது மட்டுமல்லாமல், உள்ளூரில் கிடைக்கும் பொருட்களும் இயற்கையான மற்றும் இயற்கை சார்ந்த பொருள்களும் பயன்படுத்தப்படுகின்றன. கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் குறைந்த திறன் உள்ளவர்களுக்கும், வீட்டிலுள்ள பெண்களுக்கும், வேலை வாய்ப்புக்கள் உருவாகி அவர்களுடைய குடும்பத்திலும், சமுதாயத்திலும் அவர்களின் அந்தஸ்து உயர்கிறது. இந்தத் துறையை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ள பல வகையான மூலதனங்கள், முதலீடுகள் செய்யப்பட்டு பாரம்பரியமான கைவினை உற்பத்தி பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப் படுவதற்கும், கைவினை கலைஞர்களின் வருவாயை உயர்த்துவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

கைவினை பொருட்கள் தயாரிப்பு பல கட்டங்களில் உருவாவதால் கைவினைக் கலைஞர்களுக்கு தொடர்ந்து உதவி அளிக்க வேண்டும். கைவினைக் கலைஞர்கள் சிறப்பான செயல் திறன் பெறவும், அதனை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ளவும் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் கைத்தறி மேம்பாட்டு கமிஷனரின் கீழ் இயங்கும் நெய்வோர் சேவை மையங்களில் கைத்தறி நெசவாளர்களுக்கு செய்திறன் மேம்பாடு திறமை வளர்ப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவை வழங்கப்பட்டு அவர்களுடைய வருவாய் உயர்த்தப்படுகிறது. அவர்கள் நெய்வதற்கு புதிய வகையான டிசைன்கள் வழங்கப்படுவதோடு மட்டுமல்லாமல், நெய்வதற்கு முன்பும், பின்பும் செய்யப்படும் பலவகையான தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இது மட்டுமல்லாமல், நெய்வோர் சேவை மையங்கள், கைத்தறி நெசவாளர்களை பல வகையான வர்த்தக கண்காட்சிகளுக்கு அனுப்பி வைத்து அங்குள்ள சந்தை நிலைமைகளின் நேரடி அனுபவத்தை வழங்குகின்றன.

குறிப்பிட்ட பகுதிகளில், குறிப்பிட்ட சில பிரபலமான கைத்தறி பொருட்களுக்கு பெயர் பெற்ற தொழில்களுக்கு திறன் மேம்பாடு, புதிய டிசைன்களை வழங்குதல், உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நுகர்வோர் விருப்பத்திற்கு ஏற்ப உற்பத்தியை மாற்றுதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தீவிரமாக ஈடுபடுதல், நெசவாளர்களின் சுகாதாரம் மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை செயல்படுத்த மெகா கைத்தறி பகுதி திட்டம் செயல்பட்டு வருகிறது.

கைத்தறித் துறையில் திறன் மேம்பாட்டையும், தொழில் முனைவை மேம்படுத்தவும் இந்த ஆண்டின் தேசிய கைத்தறி தினத்தின் போது (ஆகஸ்டு 7) ஜவுளித்துறை அமைச்சகம் மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகத்துக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் இந்த இரண்டு அமைச்சகங்களும் சேர்ந்து தகவல் பரிமாற்றம், வளங்களை மேம்படுத்துதல் மற்றும் அமைப்புகளுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தி நெசவாளர் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்வார்கள்.

இரண்டாவதாக, கைவினைப் பொருட்கள் இன்றைய நகர்ப்புற வாழ்வு முறைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட வேண்டும். உலக சந்தைகளில் போட்டியிட ஏதுவாக இந்த பொருட்களின் மதிப்பை வெளிப்படுத்த வேண்டும். சமுதாய மற்றும், வியாபார லட்சியங்களை நவீனமாக்கும் புதிய வியாபார உத்திகளை கையாள வேண்டும். இந்த வகையில், இந்திய கைத்தறியின் மதிப்பு என்ற புதிய திட்டம் ஒரு நல்ல முயற்சியாகும். இது ஆகஸ்டு 7 2015ல் நடைபெற்ற முதலாவது தேசிய கைத்தறி தினத்தன்று இந்திய பிரதமரால் துவக்கப்பட்டது. இந்த முயற்சியின்படி உயர் மதிப்பு கைத்தறி பொருட்களின் பிராண்டுகளை உருவாக்கி அவைகள் பழுதில்லாமல் சுற்று சூழல் மாசுகளை ஏற்படுத்தாமல், அவைகளை தயாரிப்பதில் தரமான கச்சா பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. செய்முறைகள், டிசைன்கள் மற்றும் பிற தரங்கள் சமுதாயம் மற்றும் சுற்றுச்சுழலுக்கு ஏற்பதாக உள்ளது என்று அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளருக்கு இன்றுள்ள மற்றொரு பிரச்சினை நுகர்வோர் விருப் பத்திற்கு ஏற்ப கைத்தறி டிசைன்களை மாற்றியமைக்க வேண்டிய நிலைமையாகும். இந்த பிரச்சினையை அணுகும் வகையில் ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப தேசியக் கழகம் ஒரு பகுதியிலுள்ள பிரபல கலைஞர் களை மற்ற பிற பகுதியில் செயல்படும் நெசவாளர்களோடு இணைத்து டிசைன் களை உருவாக்க செயல் திட்டம் நடத்தி வருகிறது. இதனால், கைத்தறி துறை மாணவர்கள் அந்தத் துறையின் சவால்களை எதிர்கொள்ளவும் அந்தத் துறைக்கு புதிய டிசைன்களையும், தொழில் நுட்பத்தையும், பொருட்களையும் வழங்கி நெசவாளர் களுக்கு உதவ முடியும். இது அல்லாமல், நெசவாளர்களும், கைவினைஞர்களும் நவீன சந்தையின் சவால்களை எதிர்கொள்ளவும் உதவும். சென்னையிலுள்ள ஆடை வடி வமைப்பு தொழில்நுட்ப தேசியக் கழகம் கேரளாவின் கோழிக்கோடு பகுதியிலுள்ள (வடகரா, கொய்லண்டி மற்றும் கோழிக்கோடு உள்ளிட்ட) இரண்டு பண்டைய கைவினைத் தொழில் செய்வோர் அதாவது, கைத்தறி நெசவு மற்றும் பாரம்பரிய படகுகளின் மாதிரி களை தயாரிக்கும் ஊரு என்ற கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கைத்தறி நெசவில் சுமார் 30 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வரு கின்றன. ஊரு படகு மாதிரிகளை தயா ரிக்கும் கைவினைஞர்கள் பேபோர் என்ற பகு தியில் உள்ளனர். தரமான இடு பொருள்கள் கிடைத்து நல்ல விலை கிடைத்தால் சந்தை யில் தொடர்ந்து நிலைத்து நிற்க கைவினைஞர் களுக்கு ஊக்கமளித்தால் அவர்களுடைய தரம் உயர்ந்து நல்ல ஊதியம் கிடைக்கும். நேரடியாக விற்க முடியாமை மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல உள்ள தடைகள் போன்ற சவால்கள் கைவினைஞர்களுக்கு உண்டு. இவர்களின் சந்தை தொடர்புகளும், செயல்படும் பகுதியும் வலுவாக்கப்பட வேண்டும். அதற்கு, தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்த முடியும்.

ஆகவே, வலைதள வர்த்தகம் மூலம் விற் பனையைப் பெருக்குவது ஜவுளி அமைச்ச கத்தின் ஒரு முன்னுரிமையாக உள்ளது. கைத்தறி துணிகளை வலைதளம் மூலம் வெளிப்படையாகவும், போட்டியோடும், சிறந்த முறையிலும் விற்பனை செய்ய பல வலைதள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு புதிய சந்தையை உரு வாக்குவதன் மூலம் கைவினைஞர்களுக்கு சிறந்த வாழ்க்கையை அளிக்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்க முடியும்.

அரசாங்கம், நிதிநிலை நிறுவனங்கள், லாபத்திற்காக செயல்படாத அறிவுசார் அமைப்புகள், தங்களுடைய தனித்தன்மையை வழங்கி இந்த கைவினை பொருட்கள் துறைக்கு பலம் சேர்க்க முடியும். இவர்கள் அனை வருடைய கூட்டு முயற்சியால் கைவினைஞர் களுக்கு பல வகையில் நல்ல ஆதரவு

கிடைக்கும். இதற்கு ஒரு நல்ல உதாரணமாக வடகிழக்கு மேம்பாட்டு நிதி கார்ப்பரேஷனின் நீர்சார் நெசவாளர்களைக் குறிப்பிடலாம். அஸ்ஸாமை சேர்ந்த ஒரு நிறுவனம் அங்கு எக்காலத்திலும் தேங்கி நிற்கும் நீரில் பரந்து கிடைக்கும் பதுமராகம் கொடிகளிலிருந்து பைகள், வீட்டுக்குத் தேவையான அழகு பொருட்கள் போன்றவற்றை தயாரிக்கிறார்கள். தாய்லாந்து மலேசியா போன்ற நாடுகளில் இது போன்ற உற்பத்தியை தழுவியும், அகமதா பாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு கழகத்தின் வடிவமைப்பு உத்திகளோடும் இந்த பொருட் கள் நம் நாட்டில் மட்டுமல்லாமல் நேபாளம், ஜப்பான் போன்ற நாடுகளிலும் நல்ல மதிப்பைப் பெற்றுள்ளன. இதனால் இவற்றை செய்யும் கைவினைஞர்களுக்கு நல்ல பலன் கள் கிடைத்துள்ளன.

இந்திய கைத்தறிகளும், கைவினைப்பொருட் களும் பலதரப்பட்டவை. இந்தியாவின் ஒவ் வொரு பகுதியும் அந்தந்தப் பகுதி பண்பாடு, இட அமைப்பு, பருவநிலை ஆகியவைகளை ஒட்டி தனித்தன்மை வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்கின்றன.

இந்தியாவின் பகுதிசார் பொருட்களில் 143 ஆடை மற்றும் கைவினைப் பொருட்களுக்கு பகுதிசார் குறியீடு கிடைத்துள்ளது. இதில் ஜவுளித்துறையில் இந்தியாவின் மத்திய பகுதி யில் நெய்யப்படும் சந்தேரி என்ற துணி கி.பி. 1305ஆம் ஆண்டிலிருந்தே உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. அது போலவே, கோட்டா துரியா எனப்படும் ஒரு வகை சேலைக்கு பகுதிசார் குறியீடு கிடைத்துள்ளது. இந்த சேலை ராஜஸ்தான் மாநிலத்தின் பரான் மாவட்டத்தின் கைத்தூண் என்ற பகுதியில் பல கிராமங்களில் நெய்யப்படுகிறது. இந்த சேலை பருத்தி மற்றும் பட்டு நூலிழைகளால் பலதரப்பட்ட தொகுப்பை மற்றும் ஊடுகளின் கலவையால் உற்பத்தி செய்யப்படுபவை.

கைத்தேர்ந்த நெசவாளர்களால் இந்தியா வின் பிற பாகங்களில் தயாரிக்கப்டும் அரிய மற்றும் போற்றப்படும் துணிகளாக பகுதிசார் குறியீடு பெறப்பட்டுள்ள ஆடைகளாக பிற சித்தி பெற்ற போச்சம்பள்ளி இகாத், காஞ்சி புரம் பட்டு, ஸ்ரீ காளஹஸ்தி களம்காரி, மாஹேஷ்வர், காந்தா (மேற்கு வங்கத்தில் வீட்டி லேயே நெய்யப்படும் துணிவகை), ஜாம்தனி எனப்படும் பல வடிவங்களில் வரும் பருத்தி துணி, பாலுசாரி மற்றும் மிகவும் பிரபலமான ஒரிஸ்ஸா இகாத் ஆகியவைகளை கூறலாம்.

பகுதிசார் குறியீடுகளைப் பெறுவதால் ஒரு பகுதியில் வாழும் மக்கள் நெசவு செய்யும் கைத்தறி துணிகளுக்கு உரிமை பெறாத பயன்பாட்டிலிருந்து சார்ந்த சட்ட பாது காப்பு கிடைக்கிறது. அந்தந்த பகுதி வாழ் கைவினைஞர்களுக்கு பொதுவான ஏகபோக உற்பத்தி உரிமை கிடைக்கப்பெற்று அவர்கள் தங்களுடைய பாரம்பரிய கலைப்பொருட்களை உற்பத்தி செய்ய பாதுகாப்பு கிடைக்கிறது.

தற்போது, இயந்திரமயமாக்கப்பட்ட மற்றும் ஒரே மாதிரி உற்பத்தி செய்யப்படும் பொருள் களுக்கு போட்டியாக இந்தியாவின் பல திறன் கொண்ட கைவினைப் பொருட்களின் திறமைகள், செய்முறைகள் மற்றும் பரம்பரை அறிவு ஆகியவற்றை பாதுகாப்பது பெரிய சவாலாகும். சரியான சந்தையும், விலையும் கிடைக்காததால் கிராமப்புற இளைஞர்கள் இந்த கைவினைப் பொருட்கள் செய்வதன் மீது வெறுப்படைந்து இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கைவினைஞர்களின் குழந்தை களுக்கு நல்ல கல்வியும், பயிற்சியும் அளித்து சந்தைகளில் ஈடுபட வைத்து தன்மானமான வாழ்க்கைக்கு உரிய ஊதியமளித்தால்தான் அவர்கள் தங்களுடைய குடும்ப சமூக கை வினைத்திறன்களை தொடர்ந்து பயன்படுத்தி ஆண்டாண்டு காலமாக உலக மக்களால் போற்றப்பட்ட அரிய இந்திய கைவினைப் பொருட்களை தயாரிப்பார்கள். ●

# தொழிலாளர் நலப் பாதுகாப்பு

– அஜய் டம்டா

இந்தியாவின் மிகப்பழமையான, மிகப்பெரிய தொழிற்சாலைகளுள் ஒன்று நெசவுத் தொழிற் சாலை. 4000 ஆண்டுகளுக்கு முந்தைய ஹரப்பா நாகரீக காலத்தைச் சேர்ந்த மக்கள் நூல் நூற் பதையும் நெசவு நெய்வதையும் அறிந்திருந் தனர் என்று தொல்பொருள் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. கடந்த 4000 ஆண்டுகளாக குறைவுபடாமல் இருந்துவந்த நெசவுத் தொழில் வளர்ச்சியின் கீர்த்திமிக்க சகாப்தத் தின் தொடர்ச்சியாக இந்தத் தொழில் இன்று பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு இந்தியாவில் வாழ்வளித்து வருகிறது. இலட்சக் கணக்கான பிற தொழிலாளர்களுக்கும் நெசவுத் தொழில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான முயற்சிகள் தொடங்கியிருக்கின்றன. நெசவுத் தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமான வேலைச்சூழலை உருவாக்கித்தருவதற்கு இந்திய அரசாங்கம் முயற்சித்துக் கொண்டு வருகிறது. இதன்மூலம் அவர்கள் தரம்மிக்க உற்பத்திப் பொருள்களை உருவாக்கி நெசவுத்தொழில் ஈடுபட்டிருக்கும் அனைத்துத் தொழிலாளர்களின் நலன்களையும் உறுதி செய்திட இயலும். நெசவுத் தொழிலின் பிரம்மாண்டமான அளவையும், அதிலுள்ள பலவிதமான பிரிவுகளையும் வைத்துப் பார்க்கும்போது பல்வேறு பட்ட திறன்கள் உடைய பல வகைப்பட்ட தொழிலாளர்கள் இதற்குத் தேவைப்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இவர்களின் தேவைகளுக்கு பொருத்தமான வகைகளில் பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் சில திட்டங்கள் பின்வருமாறு:

**1. விசைத்தறிப் பிரிவிற்கான நலத்திட்டங்கள்:**

அ) குழு காப்பீடுத்திட்டம் (GIS)

விசைத்தறி நெசவாளர்கள் சமுதாயத்தின் மிகக்குறைவான வருவாய்ப் பிரிவைச்சேர்ந்தவர் களாகவும், சுகாதாரமற்ற சூழலில் வாழ்பவர் களாகவும் இருந்த காரணத்தால் அவர்களுக்கு எந்தவிதமான ஆயுள் காப்பீடோ, சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்களோ இல்லாமலேயே இருந்துவந்தது. நெசவுத்தொழிலாளர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டம் 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொண்டுவரப்பட்டது. இது 12வது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடர் கிறது. மத்திய அரசின் ஜவுளித்துறை அமைச் சகத்தால் அதனோடு இணைந்துள்ள மும்பை ஜவுளித்துறை ஆணையாளர் அலுவலகத்தின் மூலமாக இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தின் மூலம் நெசவாளர்களுக்கு பின்வரும் பின்வரும் பயன்கள் கிடைக்கின்றன:

அ) இயற்கையான மரணம் சம்பவிக்கும் போது ரூ.60 ஆயிரம்

ஆ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் ரூ. 1,50,000.

இ) விபத்தின் காரணமாக நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ. 15,0000

ஈ) விபத்தின் காரணமாக அரைகுறை பாதிப்பு ஏற்பட்டால் ரூ. 75,000.

காப்பீடு செய்துகொண்டுள்ள நபரின் இரண்டு குழந்தைகளுக்கு 9 முதல் 12ஆம் வகுப்பு வரை ஆண்டுக்கு அதிகபட்சக் கொடையாக ரூ.2400 கல்வி உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். நெசவாளர் செலுத்தி வர வேண்டிய ஆண்டு பிரிமியத் தொகையான 470 ரூபாயில் கல்வி உதவித் திட்டத்திற்கென

---

**அஜய் டம்டா,** ஜவுளித்துறை இணை அமைச்சர், இந்திய அரசாங்கம்.

தனியாக ஆண்டுக்கு 80 ரூபாய் பிரிமியத் தொகையை மட்டும் செலுத்தி வரவெண்டும். மீதமுள்ள பணத்தை இந்திய அரசாங்கம் கொடுத்துவிடும்.

### ஆ) நெசவாளர் மறுவாழ்வு நிதித்திட்டம் *(TWRFS)*

நெசவாலைகள் முழுவதுமாகவோ, பகுதியாகவோ மூடப்பட்டு விட்டால் இந்தத் திட்டத்தின்கீழ் இடைக்கால நிவாரணமாக பணம் தரப்படும்.

இந்தியா முழுவதும் மூடப்பட்டிருக்கும் 98 நெசவாலைகளைச் சேர்ந்த 1,17,751 தொழிலாளர்களுக்கு 319.66 கோடி ரூபாய் அளவுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆகஸ்ட் மாதம் வரையிலான நிலவரமாகும் இது.

### கைத்தறி நெசவாளர்களுக்கு நலத்திட்டங்கள்:

கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கும் இடையே சமூக, பொருளாதார நிலையில் பெரிய வித்தியாசம் ஏதுமில்லை. இந்தியா முழுமையும் நெடுந் தொலைவில் கடைக்கோடியில் உள்ள மலைவாழ் மக்கள் பகுதிகளிலும், தொல் பழங்குடிகள் வசிக்கும் பகுதிகளிலும்கூட கைத்தறி நெசவாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் சமூகப் பாதுகாப்பு நாளுக்கு நாள் சிக்கலாகிக்கொண்டே போவதற்கு இதுவே காரணம். நெசவாளர்கள் பயன்பெறும் விதத்தில் பல்வேறு நலத்திட்டங்களை இந்திய அரசாங்கம் தொடங்கியுள்ளது. அவற்றுள் சில வருமாறு:

### அ) மகாத்மா காந்தி நெசவாளர் காப்புறுதித் திட்டம் *(MGBBY)*

இந்தத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு காப்புறுதிப் பாதுகாப்பு தரப்படுகிறது. காப்புறுதி பெறும் நெசவாளர்களுக்கு பின்வரும் ஆதாயங்கள் கிடைக்கும்:

1. இயற்கை மரணத்தின் போது 60 ஆயிரம் ரூபாய்
2. விபத்தினால் மரணம் நேர்ந்தால் 1,50,000 ரூபாய்
3. விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்பட்டு விட்டால் 1,50,000 ரூபாய்
4. விபத்தினால் அரைகுறை பாதிப்பு ஏற்பட்டால் 75 ஆயிரம் ரூபாய்

### ஆ) உடல்நலக் காப்புறுதித்திட்டம் *(HIS)*

தொழிலாளர் வேலைவாய்ப்பு அமைச்சகத்தில் இருக்கும் ராஷ்டிரீய ஸ்வஸ்த்தய பீம யோஜ்னா (RSBY) திட்டத்தைப் போன்ற வடிவத்தில் உடல்நலக் காப்பீட்டுத்திட்டம் ஒன்றுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு 12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெசவாளர்களுக்காக ஒப்புதல் அளித்தது. தற்போது இந்தத் திட்டத்தை சுகாதார, குடும்பநல அமைச்சகம் கவனித்துக் கொள்கிறது. RSBY திட்டதின் ஆதாயங்களை கைத்தறி நெசவாளர்களுக்கும் அளிக்குமாறு 2016ஆம் ஆண்டு மார்ச் 29 அன்று மத்திய சுகாதார அமைச்சகம் விரிவான வழிகாட்டுதலை வெளியிட்டது. இந்தத் திட்டத்தின்படி மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் கைத்தறி நெசவாளருக்கு 30 ஆயிரம் ரூபாய் காப்புறுதிப் பாதுகாப்பு கிடைக்கும். RSBY திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 19 மாநிலங்களாவன; அஸ்ஸாம், பீகார், சட்டிஸ்கர், குஜராத், இமாசலபிரதேசம், ஜார்க்கண்ட், கர்நாடகா, கேரளா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், திரிபுரா, உத்தரபிரதேசம், உத்தராகண்ட், மேற்குவங்காளம்.

RSBY திட்டம் தமிழ்நாட்டில் அமுல்படுத்தப் படவில்லை. தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவின்படி உடல்நலக் காப்புறுதித்

திட்டம் *(Health Insurance Scheme) RSBY* மாதிரியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் உதவியை மத்திய அரசு அளித்து வருகிறது. புற நோயாளிகளுக்கு 7500 ரூபாய் நிதி உதவி தரப்படுகிறது. இந்தத் திட்டதின்கீழ் அக்டோபர் 1, 2015 வரை 1,44,294 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

*RSBY* பற்றிய பணிமனைகள் ஜவுளி அமைச்சகத்தால் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. இவற்றில் மாநில கைத்தறித்துறை ஆணையர்கள் / இயக்குநர்களுடன் *RSBY* அதிகாரிகளும் பங்கேற்று விவாதித்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் விதம் பற்றிய தெளிவைப் பெறுகின்றனர்.

3. கைவினைப் பிரிவில் பணிபுரியும் நெசவாளர்களுகான நலத்திட்டங்கள்: இந்தியாவின் கைவினைத் தொழில் மிகவும் செழுமையானது. கிராமங்கள், மலைப்பகுதிகள், உள்ளடங்கிய தொலைதூரப் பகுதிகள் என்று அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது. இந்தப் பிரிவினைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதற்கு பல்வேறு நலத்திட்டங்களை மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அவை பின் வருமாறு:

### 1) ராஜிவ்காந்தி ஷில்பி ஸ்வஸ்த்தய பீமயோஜனா:

இந்தத்திட்டம் 2006–07இல் சோதனை அடிப்படையில் அமுலாக்கப்பட்டு 11, 12வது ஐந்தாண்டுத் திட்டங்களின்போது தொடர்ந்தது. கைவினைப் பிரிவில் பணிபுரியும் கலைஞர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு இந்தத்திட்டம் முன் வந்தது. கைவினைக் கலைஞர் 30 ரூபாய் மட்டும் செலுத்தி பதிவுசெய்து கொள்ளவேண்டும். இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவில் 75% பணத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. மீதி 25% செலவினை மாநில அரசுகள் ஏற்க வேண்டும். ஜம்மு–காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள் ஆகியவற்றிற்கு 90% பிரிமியத்தொகையை மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது.

இந்தத்திட்டத்தின்படி கைவினைக்கலைஞரும் அவரது குடும்ப உறுப்பினர்கள் நான்கு பேரும் உடல் நலக்காப்பீட்டின் பயன்களைப் பெறமுடியும். காப்புறுதி செய்து கொண்டுள்ள குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் யாரும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட நேரிட்டால் 30 ஆயிரம் ரூபாய்க்கான காப்புறுதிப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. புறநோயாளியாக சிகிச்சை பெற்றால் 7500 ரூபாய் காப்புறுதிப் பாதுகாப்பு கிட்டும். இந்தத்திட்டம் தற்போது *RSBY* திட்டத்துடன் இணைக்கப்பட்டு விட்டது. 1.4.2017 முதல் இந்தத்திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு சுகாதாரம், குடும்பநல அமைச்சகத்தைச் சாரும். இந்தத் திட்டத்தில் இதுவரை 23,74, 938 கைவினைக்கலைஞர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

### ஆ) ஆம் ஆத்மி பீம யோஜ்னா (AABY)

கைவினைக் கலைஞர்களுக்கு வாழ்நாள் காப்புறுதியை வழங்குவதற்காக 2004–05ஆம் ஆண்டில் ஜன்ஸ்ரீ பீமா யோஜ்னா என்ற திட்டத்தை இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம் செயல்படுத்தியது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு இந்தத் திட்டத்திற்கு 11வது திட்ட காலத்தில் ஒப்புதல் அளித்த போதிலும் செலவின நிதிக்குழு *(EFC)*வின் பரிந்துரைப்படி இந்தத்திட்டத்தின் பெயர் ஆம் ஆத்மி பீம யோஜ்னா என்று மாற்றப்பட்டது. 23, 31, 288 கைவினைஞர்கள் கடந்த 3 நிதியாண்டுகளில் (எ.கா: 2013–14 முதல் 2015–16 வரை) இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர். நடப்பு ஆண்டான 2016–17இல் ஜூன், 2016 வரையிலுமான கணக்காகும் இது. *AABY* திட்டத்தை பிரதம

மந்திரியின் ஜீவன் ஜோதி பீம யோஜ்னா வுடனும், பிரதம மந்திரியின் சுரக்ஷா பீம யோஜ்னாவுடனும் இணைப்பதற்கான கருத்துரு ஒன்று உள்ளது.

**ஏழை கைவினைஞர்களுக்கு பொருளாதார உதவி:**

இந்தத் திட்டத்தின்கீழ் நலிவடைந்த நிலை யில் இருக்கும் கைவினைஞர்களுக்கு பொருளா தார உதவி அளிக்கப்படுகிறது. 60 வயதுக்கும் மேற்பட்ட ஷில்ப் குழு / தேசிய விருது / தேசிய தகுதிச்சான்று / மாநில விருதுகள் பெற்ற ஆண்டுக்கு ரூ. 30 ஆயிரத்துக்கும் குறைவான வருமானம் உள்ள கைவினைஞர்களுக்கு மாதம் தோறும் 3000 ரூபாய் நிதி உதவி தரப் படுகிறது. இந்தத் திட்டத்தின்படி 2014–15, 2015–16 ஆகிய ஆண்டுகளில் 1035 கைவினை ஞர்களுக்கு 164.06 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**4. சணல் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழி லாளர்களுக்கான உதவித் திட்டங்கள்:**

**1) சணல் தொழிலாளர் நலத்திட்டம்: தொழில்கூடங்களில் தூய்மையைப் பேணுதல்:**

சணல் ஆலைகளில் தொழிலாளர்களுக்கு தூய்மையான பணி இடம் அமையப்பெறு வதை இந்தத்திட்டம் நோக்கமாகக் கொண் டுள்ளது. இத்தகைய ஆலைகளில் தூய்மைப் பகுதிகளில் ஆண்கள், பெண்களுக்கென தனித்தனி கழிவறைகள், கை கழுவதற்கான பீங்கான் கிண்ணங்கள் (Wash Basins) போன் றவை அமைந்திருக்கும். தேசிய சணல் வாரி யம் இதற்கான மொத்த செலவில் 90% செலவு அல்லது அதிகபட்சம் 40 லட்ச ரூபாய் வரை யிலும் ஏற்றுக்கொள்ளும்.

**2) சணல் ஆலைத் தொழிலாளர்களுக்கு கல்வி மேம்பாட்டிற்கான உதவித்தொகை:**

இந்தத் திட்டத்தின்படி சணல் ஆலைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, அதிலும் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு கல்வி பயில் வதற்காக உதவித்தொகை வழங்கப்படுகிறது. இடைநிலைக் கல்வியை முடிக்கும் பெண் குழந்தைகளுக்கு 5000 ரூபாயும், மேல்நிலைப் படிப்பு முடிப்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாகத் தரப்படுகிறது.

2015–16 முதல் இந்த உதவி நீடிக்கப்பட்டு பட்டப்படிப்பு முடித்த பெண்களுக்கு 15 ஆயிரமும், முதுநிலைப்பட்டப்படிப்பு முடிப் பவர்களுக்கு 20 ஆயிரமும் வழங்கப்படுகிறது. பொறியியல், தொழில்நுட்பம், நிர்வாகவியல், வணிகக் கணக்கியல் படிப்புகளான CA, CS, ICWAI போன்ற தொழில்படிப்பு படிக்கும் பெண்களுக்கு ஆண்டுக் கல்விக் கட்டணத்தை செலுத்துவதில் உதவுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சணல் ஆலைத் தொழிலாளர்களுக்கான ஆயுள்காப்பீட்டுத் திட்டம்:**

சணல் ஆலைகளில் பணிபுரியும் தாழ்த்தப் பட்ட/மலைவாழ் மக்கள் பிரிவைச் சேர்ந்த தொழி லாளர்களுக்கு தொடக்க நிலையில் 3 ஆண்டுகால செயல்பாட்டில் இருக்கும் (ஆகஸ்ட் 2016 முதல் மார்ச் 2019 வரை) ஆயுள் காப்பீட்டுத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன். 1. பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜ்னா, 2. பிரதம மந்திரி சுரக்ஷா பீம யோஜ்னா.

நெசவாலைத்தொழிலாளர்கள் பயன்பெறும் விதத்தில் கொண்டுவரப்படிருக்கும் திட்டங் களின் செயல்பாட்டை அவ்வப்போது ஜவுளி அமைச்சகம் மேற்பார்வையிடுகிறது. தொழிலாளர்களின் நன்மைக்கு அதிகமான முக்கியத்துவத்தை அளித்து இத்தகைய நலத்திட்டங்களை தொடர்ந்து மேம்படுத்தி வருவதற்கு ஜவுளி அமைச்சகம் உச்சமான முன்னுரிமையை அளித்து வருகிறது. ●

# ஜவுளித் துறையில் வேலை உருவாக்கம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான முயற்சிகள்

– ராஷ்மி வர்மா

*சுருக்கம்:* இந்தியாவின் அதிக மக்கள் தொகை மற்றும் அதிகரித்துவரும் பணி ஆற்றல் ஆகியவை பணி உருவாக்க பிரச்சனையை மையத்திற்குக் கொண்டு வந்துள்ளது. அதிக அள்வில் வேலை வாய்ப்புகளைக் கொண்டுள்ள ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் துறையில் வளர்ந்து வரும் பணி ஆற்றலை ஈர்த்துக் கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன. பின்னடைவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள உலகப் பொருளாதாரத்திலிருந்து விலகி முன்னேறும் வகையில் இந்த பிரத்யேக நிலையின் பயன்களை எடுத்து கொள்ளும் வகையில், அரசு ஆயத்த ஆடைகள் துறைக்கு சிறப்பு சலுகைகளை அளித்திருப்பதுடன் பணி உருவாக்கத்திற்கான திறனுக்கான ஒரு புதுப்பிக்கப்பட்ட முக்கியத்துவத்தை அளித்துள்ளது. இந்த முயற்சிகள் இதர ஜவுளித் துறை கொள்கைகளுடன் அதிக வளர்ச்சி, அதிக ஏற்றுமதி, அதிக பணி உருவாக்கம் மற்றும் அதிக சமுக நகர்வு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இருண்ட உலகளாவிய பொருளாதார சூழ்நிலை மற்றும் இருள் தோய்ந்த உலகலாவிய உணர்வுகளுக்கு மத்தியில் சமீப ஆண்டுகளில் 7% அளவிலான வளர்ச்சியுடன் ஒளி பரவும் ஒரு சில புள்ளிகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. இருந்தபோதிலும் அதிகரித்து வரும் பணித் திறனுக்கு ஈடு கொடுக்கும் வகையில் பணிகளை உருவாக்க முடியுமா என்பதில் புரிந்துகொள்ளக்கூடிய சில கவலைகள் இருக்கத்தான் செய்கின்றன. நவீன உலகின் வரலாறு முழுவதிலும் கொள்கை உருவாக்குபவர்கள் பணிகள் உருவாக்கத்திற்கும் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் ஜவுளித் துறையின் மீதே நம்பிக்கை வைத்திருந்தனர். இந்தியாவும் சமீப மாதங்களில் தனது உள் நாட்டு நோக்கங்களை அடைவதற்கு இந்தத் துறைக்கு பிரத்யேக அந்தஸ்தை அளித்துள்ளது. தற்போதுள்ள பொருளாதார அவ நம்பிக்கையை சரிசெய்வதற்கு இன்று உலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அதே வழியில் இந்தியா அடுத்த கட்ட வளர்ச்சிக்காக ஜவுளிகள் மற்றும் ஆயத்த ஆடைகள் துறையை மையப்படுத்தி செயல்படத் தொடங்கி விட்டது.

## இந்திய ஜவுளித்துறைக்கு புத்துயிர்:

பாரம்பரிய பிரிவுகளில் இருந்த மைய பலம் காரணமாக இந்தியா கடந்த பல நூற்றாண்டுகளாகவே பருத்தி ஜவுளிகள் மற்றும் பட்டுப் பொருட்களின் பெரிய உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இருந்து வருகிறது. ஆனால் காலனியாதிக்கத்தின் போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் திணித்த கொள்கைகள் காரணமாக இந்தியாவின் முன்னணி நிலை பாதிப்பைச் சந்தித்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தத் துறை லட்சக்கணக்கான இந்தியக் குடும்பங்கள் மற்றும் நவீன ஜவுளி ஆலைகளில் பணியாற்ற குடிபெயர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும் பிரதான ஆதாரமாக தன்னை நிருபித்தது. 90களின் தொடக்கத்தில் இந்தியப் பொருளாதாரம் திறந்துவிடப்பட்டது மற்றும் அரசின் சிறப்புக் கண்ணோட்டம் காரணமாக, இந்திய ஜவுளித் துறை மீண்டும் வளர்ச்சிப்பாதையில் வேகமாக பயணித்தது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அதிகரித்த

**ராஷ்மி வர்மா,** செயலாளர், ஜவுளி அமைச்சகம், இந்திய அரசாங்கம்.

செலவுகள் காரணமாக இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் அதிக அளவிலான மற்றும் குறைந்த செலவிலான மனித ஆற்றல், பரந்த இயற்கை ஆதாரங்கள் மற்றும் சாதகமான பொருளாதார கொள்கைகள் காரணமாக ஜவுளிப் பொருட்கள் உற்பத்திக்கான கவரத் தக்க இடமாக உருவெடுத்தது. இந்திய ஜவுளிகள் துறையில் இயற்கையான மற்றும் செயற்கையான இழைகள் போன்ற முலப் பொருட்கள் இருப்பு மற்றும் வேலைக்கான பணித்திறன் இந்தியாவில் போதுமான அளவு உள்ளது. வியட்நாம் மற்றும் வங்கதேசத்தைப் போல் இந்தியா வெறும் ஏற்றுமதியை மட்டும் நம்பி இருக்காமல் இந்தியாவில் உள்நாட்டு நுகர்வும் அதிக அளவில் இருந்தது. இந்தப் பயன்களின் விளைவாக இந்தியா கடந்த ஆண்டுகளில் உலகின் இருண்டாவது பெரிய ஜவுளிகள் ஏற்றுமதியாளராக உருவெடுத்தது. இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு 40 பில்லியன் டாலர்களாகும். இது உலக மொத்த ஜவுளி வர்த்தகத்தில் சுமார் 5 சதவிகிதமாகும். இந்தியாவின் 2.3 டிரில்லியன் டாலர் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஜவுளித் துறையின் பங்களிப்பு 2 சதவிகிதமாக உள்ளது. வேளாண்மைக்கு அடுத்தபடியாக இது இரண் டாவது பெரிய வேலை வாய்ப்பு அளிக்கும் துறையாக உள்ளது. தொழில் உற்பத்தியில் இதன் பங்களிப்பு 10 சதவிகிதமாகவும், நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி மதிப்பில் 12 சதவிகிதமாகவும் உள்ளது.

### இந்தியாவின் மக்கள்தொகை பங்களிப்பு:

128 கோடி மக்கள் தொகையுடன் இந்தியா அதிக மக்கள்தொகை கொண்ட உலகின் இரண்டாவது பெரிய நாடாகத் திகழ்கிறது. இந்தியாவின் மக்கள் தொகையில் சுமார் 66 சதவிகிதம் பேர் அதாவது 85 கோடி பேர் பணியுரியும் வயதுடைய இளைஞர்களாக உள்ளனர். 2030ம் ஆண்டு இறுதியில் இதில் மேலும் 17 கோடி இணையும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த மக்கள் தொகை வளர்ச்சியின் காரணமாக தொழிலாளர்களை அதிகம் கொண்ட ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் துறையில் இந்தியா வளர்சிசியை சந்திக்கும். இந்த மக்கள் தொகை உயர்வின் பலன்களைப் பெற இந்திய ஒவ்வொரு மாதமும் 10 லட்சம் பணிகளை உருவாக்க வேண்டும். எனவே இந்தியா 8 முதல் 10 சதவிகித வளர்ச்சி விகிதத்தில் வளர்ச்சி அடைய வேண்டும். இந்த வளர்ச்சியின் மாதிரி அனைவரையும் உள்ளடக்கியதாகவும் பணி உருவாக்கத்திலும் இருக்க வேண்டும்.

### ஜவுளித் துறையில் வேலை வாய்ப்பு:

ஜவுளித் துறையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு பணி உருவாக்கத்திற்கான மதிப்புகள் மற்றும் வாய்ப்புகள் உள்ளன. இந்தத் துறை தற்போது நேரடியாக 5 கோடி பேருக்கும், இதர 6.7 கோடி பேருக்கு இதன் சார்புத் துறைகளான பருத்தி மற்றும் சணல் விவசாயம், ஆடு வளர்ப்பு, ஜவுளி இயந்திரம் போன்ற துறை களில் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி அமைப்பில் செய்யப்படும் ஒரு கோடி ரூபாய முதலீடு 30 பேருக்கும் ஆயத்த ஆடை உற்பத்தியில் மட்டும் செய்யப்படும் ஒரு கோடி ரூபாய் முதலீடு 7 வேலைகளை உருவாக்குவதும் அடிப்படை விதியாகும். 2011–12 அகில இந்திய ஜவுளி மற்றும் ஆடைகள் துறை ஆய்வின்படி சிறு தொழில் அல்லாத ஆடை நிறுவனம் ஒன்றில் செய்யப்படும் ஒரு கோடி ரூபாய் முதலீடுக்கான வேலைவாய்ப்பு 68 மற்றும் 169க்கு இடையே உள்ளது. வேலைவாய்ப்பு என வரும்போது செய்யப்படும் முதலீடுக்கு மதிப்பு இருப்பதில் ஜவுளித்துறைக்கு இணை எதுவும் இல்லை.

### ஜவுளிகள் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி:

வேலை உருவாக்கம் தவிர இந்தத் துறை பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அரசின் முயற்சிகளுக்கு இசைவாக உள்ளது.

ஆயத்த ஆடைகள் துறையில் உள்ள பணித் திறனில் 70 சதவிகிதம் பேர் பெண்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் துறை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளித்து அவர்களுக்கு நிலையான வருவாயை அளித்து அத்துடன் தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்திக்கொள் வதற்கான வாய்ப்புகளையும் அளிக்கிறது. எனவே இந்தியா போன்ற நாட்டில் வேலை உருவாக்கத்திற்கு ஜவுளித் துறையில் முக்கியத் துவத்துக்கு போட்டியாக வேறு எதுவும் இல்லை. இந்திய மக்கள்தொகையில் பெரும் பான்மையானவர்கள் தரமான கல்வி மற்றும் அடிப்படை வசதிகளை அணுக இயலாத நிலையில் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். ஜவுளித் துறையில் நுழைவு நிலை பணிகளுக்கு பொதுவாக தொழில்நுட்ப திறன்கள் அல்லது கல்விப் பின்னணி தேவையில்லை என்பதால், கிராமப்புற இந்தியாவைச் சேர்ந்த ஒரு நபர் ஜவுளித் துறையில் வேலைக்கு சேரலாம். இவர்களுக்கு 3 முதல் 4 வாரங்கள் மட்டும் பயிற்சி போதுமானதாகும்.

**உலகாவிய துறை கட்டமைப்பு, பணி நேரங்கள்:**

கடந்த முப்பது ஆண்டுகளாகவே உலகளாவிய வணிகத்தில் சீனா சந்தேகத்திற்கு இடமின்றி முன்னிலையில் உள்ளது. குறிப்பாக ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் பிரிவில், சீனா கடந்த 20 ஆண்டுகளாக 40 சதவிகிதத்திற்கும் அதிகமான ஆதிக்கத்தைக் கொண்டுள்ளது. 2009ம் ஆண்டில் ஏற்பட பொருளாதார பின்னடைவுக்குப் பின்னர் வர்த்தகத்தில் சீனாவின் வளர்ச்சி 2014ம் ஆண்டில் 15 சத விகிதத்தில் இருந்து 4 சதவிகிதமாக குறைந்தது. இந்தப் போக்கு எதிர்காலத்திலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சீனா உலகளாவிய ஏற்றுமதி சந்தையில் இருந்து விலகுகிறது. அதிக கூலி மற்றும் உள்நாட்டு சந்தையை நோக்கி அதன் கவனம் திரும் பியதும் இதற்குக் காரணமாகும். உலகளாவிய ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் வர்த்தகத் தில் சீனா விட்டுச் சென்ற இடத்தை இந்தியா நிரப்பும். இதற்காக இந்தியா தனது மூலப் பொருட்கள் மற்றும் மனித ஆற்றல் ஆகிய வற்றைப் பயன்படுத்தும்.

**ஜவுளி சந்தை வளர்ச்சி கணிப்புகள்:**

ஏற்றுமதி அதிகரிப்பதால் ஏற்படும் வளர்ச்சி தவிர மக்களின் வருவாய் அதிகரித்து அதன் காரணமாக மக்களின் வளம் பெருகி இருப்பதும், உடைகளுக்கு அதிக அளவில் மக்கள் செயவிடுவதும் உள்நாட்டு சந்தையில் இரட்டை இலக்க அளவுக்கு வளர்ச்சி எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிகரித்து வரும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு சந்தைப் போக்குகளின் அடிப்படையில், இந்திய ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் சந்தை தற்போதுள்ள 119 பில்லியன் டாலர் என்ற அளவிலிருந்து 2025-26ல் 400 பில்லியன் டாலராகும்.

**பணி உருவாக்கம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான யுக்திகள்:**

ஜவுளித்துறையில் உள்ள இணையற்ற வாய்ப்புகளை கருத்தில் கொண்டும் உலக ளாவிய சந்தையில் அதிகரித்து வரும் வாய்ப்பு களைக் கருத்தில் கொண்டும், வளர்ச்சியை ஏற்படுத்தவும் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் துறையில் அதிக எண்ணிக்கையிலான பணி களை உருவாக்கவும் யுக்தி ஒன்றை அரசு வகுத்துள்ளது. தொழில்நுட்ப மேம்பாடு, உள்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் பாரம் பரியப் பிரிவுகளை வலுப்படுத்துதல் ஆகிய வற்றில் கண்ணோட்டம் செலுத்தும் தற் போதைய திட்டங்களுடன், அரசு திறன் மேம்பாட்டிக்காகவும் சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளது. இந்திய ஆயத்த ஆடைகள் துறையை போட்டி நிறைந்ததாக்கும் வகையில் ஆடைகள் துறைக்கு சிறப்பு சலுகைகள் அளிக்கப்பட்டு இந்தத் துறையில் உள்ள தற் போதைய உறபத்திகான கட்டுப்பாடுகள் ஏற்றுமதி மற்றும் பணி உருவாக்கத்திற்கு ஊக்கமும் அளிக்கப்படுகிறது.

### திறன் பெற்ற மக்கள் சாத்தியமான சுற்றுச் சூழலை உருவாக்குதல்:

பணி உருவக்கம் செய்ய வரும் ஆண்டுகளில் உயர் வளர்ச்சி தேவைப்படுகிறது. இந்த வளர்ச்சியை அடைவதற்கு, உற்பத்திக்கு அதிக அளவிலான முதலீடு தேவைப்படுகிறது. இது இந்தத் துறையின் திறன் பெற்ற தொழிலாளர்களின் தேவையை அதிகரிக்கும். திறன் பெற்ற தொழிலாளர்களின் இந்தத் தேவையை பூர்த்தி செய்ய நாட்ட்டில் திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. ஜவுளித் துறைக்கான ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் திறன் பெற்ற பணி ஆற்றல் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தற்போதுள்ள ஜவுளி பயிற்சி நிறுவனங்கள் பயன்படுத்தப்படுவதுடன் இதில் தனியார் மற்றும் மாநில அரசு முகமைகளும் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 2016 செப்டம்பர் முதல் தேதி அன்று, 7.7 லட்சம் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு 5.6 லட்சம் பேருக்கு பணி அளிக்கப்பட்டுள்ளது. 2016–17ம் ஆண்டில் 15 லட்சம் பேருக்கு இந்த திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசின் கைவினைத்துறை மற்றும் கைத்தறித் துறையின் கீழ் அமைப்பு சாரா துறைகளிலும் பயிற்சி அளிக்க ஊக்குவிக்கப்படுகிறது. ஸ்கில் இந்தியா இயக்கத்தின் கீழும், சிறப்பான மற்றும் விரிவான பயிற்சி கட்டமைப்பு சமீபத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் துறைக்காக இரண்டு துறைசார்ந்த துறைக் கவுன்சிலகள் அமைக்கப்பட்டுள்ளன்.

### ஆடைகள் துறைக்கான சிறப்புத் திட்டம்:

பணி உருவாக்கத்திற்கு அதிக வாய்ப்புகள் உள்ள ஆடைகள் துறைக்கு பல்வேறு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலக ளாவிய சந்தையை அணுகுவதும் இதில் அடங்கும். உற்பத்தியை அதிகரிப்பது, தொழி லாளர் கட்டுப்பாடுகள் நீக்கம் ஆகியவையும் இதில் அடங்கும். ஆடைகள் துறையில் உள்ள சுணக்கங்களை அகற்றி வளர்ச்சியை ஊக்குவிக்க அரசு சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. ஏற்றுமதிக்கான கட்ட மைப்பு, குறிப்பிட்ட காலத்திற்கு வேலை போன்ற தொழிலாளர் சீர்திருத்தங்கள், இந்தத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் விதத்தில் வருமான வரியை எளிதாக்கியிருப் பது உள்ளிட்டவை இதில் அடங்கும். மேலும் புதிதாக பணிக்கு சேரும் தொழிலாளர் களின் முதல் முன்று ஆண்டு ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கான ஒட்டுமொத்த 12 சதவிகித பங்களிப்பையும் அரசே ஏற்கும். 15 ஆயிரத்திற்கும் குறைவாக ஈட்டுவோரின் பங்களிப்பை அவர்கள் செலுத்துவது அவர் களின் விருப்பமாக ஆக்கப்பட்டுள்ளது. ஓவர் டைம் நேரமும் ஒரு காலாண்டுக்கு 50 மணி நேரத்திலிருந்து 100 மணி நேரமாக அதிகரிக் கப்பட்டுள்ளது.

### நிறைவு:

வேலைவாய்ப்பு மற்றும் திறன் பெற்ற மனித ஆற்றல் உயரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் சிறு முதலீடுகளை உள்நாடு மற்றும் அந்நிய நேரடி முதலீடுகளை இந்தத் துறை ஈர்க்கும். இதுதான் நமது பிரதமரின் கண்ணோட்டமாக உள்ளது. இந்தியாவின் மாற்றம் தொடர்பான உரையின் தொடக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய சிங்கப்பூர் துணை பிரதமர் திரு. தர்மன் சண்முகநாதன், “இந்தியா உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொள்ளும் வகையில் சமூக நகர்வு, இலக்குகள் மற்றும் சமூகம் மற்றும் மனித மூலதனத்தில் முதலீடு செயகிறது” என்றார். தனது சமீபத்திய முயற்சிகளின் மூலம் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் துறையில் இந்திய அரசு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் பணிகளை உருவாக்கவும் சமூக மாற்றத்திற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. ●

# இந்தியாவில் கைத்தறிகள்: கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்

– ஜெயா ஜேட்லி

நமது படைப்பாக்க கைத்திறன்கள் மற்றும் இந்தியாவின் அழகியல் வெளிப்பாடுகளினால் நாம் அபரிதமான சிறப்புக் கலைச் செல்வங்களைப் பெற்றுள்ளோம். நாம் அடிக்கடி இவை குறித்து பேசிக் கொள்கிறோம். அதே சமயம் ஒரே மாதிரியான, இயந்திரத்தனமான தீர்வுகளைத் தரும் பிற கலாச்சாரங்களின் மந்தமான தன்மையை நாம் ஆர்வமுடன் பார்த்துக் கொண்டும் இருக்கின்றோம். கலாச்சார ரீதியாக நாம் அந்நியப்பட்டுள்ள தற்கால உலகில் தவறான நம்பிக்கையையும் பாதுகாப்பையும் தேடுவதுதான் இதற்குக் காரணமாகும். நமது கலாச்சாரம் வேர் விட்டுள்ள நமது பாராம்பரிய மரபுகள் தான் நமது நாடு புதிய சூழல்களுக்கும் யதார்த்தங்களுக்கும் மாறுவதில் பெரும் பங்கு வகித்துள்ளன என்பதை நாம் மறந்து விட்டோம். இந்தியர்கள் என்ற நமது சொந்தமான, உண்மையான அடையாளங்களைப் பெறுவதில் இந்தப் பாரம்பரிய மரபுகள் முக்கியமானவை ஆகும்.

### அர்த்தம், அடையாளம் மற்றும் பாணி

இந்தியா ஆன்மீகத்தில் செழித்துள்ள ஒரு நாடு என்று அடிக்கடி விவரிக்கப்படுகின்றது. வரையப்பட்ட மற்றும் அச்சிட்ட வழிபாட்டு கொடிகளில் இருந்து பெறப்பட்ட இந்தியாவின் பெரும்பான்மையான துணிகள் புத்தரின் செய்தியை கிழக்குலகிற்கு எடுத்துச் சென்றன. பளபளக்கும் தங்க இழைகளால் பின்னப்பட்டு புனித சுலோகங்களைக் கொண்ட பட்டுத் துணிகள் கோயில்களில் கல் தெய்வங்களை அலங்கரித்தன. மன்னர்களின் தோள்களை அலங்கரித்தன. இவை புனிதத் தன்மைகளின் அம்சங்களோடு இணைத்துப் பார்க்கப்பட்டன. ஒரு மணப்பெண்ணுக்கான புடவையின் விளிம்புகளில் நீண்ட மகிழ்ச்சியான மணவாழ்க்கைக்கான ஆசிர்வாதம் நெய்யப்பட்டது. காவியப் பாடல்களின் வரிகள் பின்னப்பட்டன.



(சந்தர் பட்டு கைத்தறி சேலையில் சதா சௌபாக்கியவதி என்ற ஆசீர்வாதம் நெய்யப்பட்டுள்ளது)

ஒடிசாவின் இகட் *(IKAT)* கைத்தறி புடவைகளின் முந்தானைகளில் எளிய பஜனைப் பாடல்கள் இடம் பிடித்திருந்தன. இந்தியாவில் எந்த ஒரு தருணத்திலும் ஆசிர்வாதம் என்பது புனிதமானதாக இருக்கிறது. ஒரு இளைஞன் முதன் முதலாகத்தானே சம்பாதித்த வருவாயில் தனது தாய்க்கு கைத்தறிப் புடவையை வாங்குதல் என்பது நன்றி மற்றும் மரியாதை அடிப்படையிலான ஒரு பாரம்பரிய புனிதக் கடமையைச் செய்வதாகவே அமைகிறது.

கலாச்சாரம் மற்றும் ஒரு சமுதாயத்தின் தனிக்குறியீடுகளுக்கு ஏற்ப நெய்யப்படும் அடிப்படை உடைக்கான துணி தவிர்த்த, பிற கையால் நெய்யப்படும் ஆடைகளுக்கு அல்லது அலங்கார ஆடைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அர்த்தமும் நோக்கமும் உள்ளது. இதுதான் இந்திய ஜவுளித்துறைக்குச் சிறப்புத் தன்மையையும் அர்த்தத்தையும் தருகின்றது.

---

**ஜெயா ஜேட்லி,** தஸ்த்காரி ஹாத் சமிதியின் தலைவராக உள்ளார்.



(கைத்தறி நெசவால் உருவாக்கப்பட்ட காஞ்சிபுரம் பட்டு சேலை)

தென்அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியாவில் உள்ள ஒரு சில இனக்குழு சமுதாயங்கள் இப்பொழுதும் விசேஷ தருணங்களில் இத்தகைய துணிகளைத் தயாரித்து பயன்படுத்துகின்றனர். இந்திய மக்கள் செய்வது போன்று பரவலாகவும் தொடர்ந்தும் இப்பகுதிகளில் செய்யப்படுவது இல்லை. நாம் குறிப்பிடத்தக்க உதாரணங்களாக வடகிழக்கு இந்திய மாநிலங்களின் பல வகையான சால்வைகளைக் கூறலாம். ஏனெனில் குறிப்பிட்ட சமுதாயத்தின் சார்புகள் மற்றும் சமூக அந்தஸ்தை இந்த சால்வைகளின் நெசவுகளும் வடிவமைப்புகளும் வெளிப்படுத்தின. அதே போன்று இந்தியாவில் ஒவ்வொரு கைத்தறி நெசவும் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கத் தக்கனவாக உள்ளன.

இந்தியாவில் மொகலாயர்கள் வருவதற்கு முன்பு, ஆடைகள் பெரும்பாலும் தைக்கப்படாதவையாக இருந்தன. மடித்து உடலில் போட்டுக் கொள்ளும் வகையில் நெய்யப்பட்டன. லுங்கிகள், தோத்திகள் வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், தலைப்பாகைகள், மேலுடம்புப் போர்வை, அரையாடை, சல்வை ஆகியவை ஆண்களுக்கானவை. புடவைகள், லுங்கிகள், முடிச்சிட்ட கச்சைகள், முக்காடு, அங்கிகள் மற்றும் ஷால்கள் பெண்களுக்கானவை. இவை கைத்தறிகளால் நெய்யப்பட்ட நீளமான துணிகளில் இருந்து தயாரிக்கப்பட்டு வந்தன. முகலாய அரசர்கள் தையல் கலைஞர் உள்ளிட்ட பலவகையான கைவினைக் கலைஞர்களை இந்தியாவிற்கு அழைத்து வந்தனர். பெர்சியன் ஷெர்வானிகள், பைஜாமாக்கள்,சல்வார்,குர்தா,ஷராரா மற்றும் லெகங்கா ஆகியன பனாரஸ்ஸில் நெய்யப் பட்டன. இவை பட்டுத் துணிகளுக்கான மிகப்பெரிய தேவையை உருவாக்கின. இதே போன்று பெங்காலில் நெய்யப்பட்ட மஸ்லின் துணிகளுக்கு கிராக்கி ஏற்பட்டது. 14ஆம் மற்றும் 15ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா மற்றும் ஐரோப்பாவின் அரசவையினருக்கான ஆடைகள் இந்தத் துணிகளால் தைக்கப்




கர்நாடகாவில் உள்ள பழங்குடியினச் சமுதாயத்தின் சடங்கு சார்ந்த ஸ்கார்ஃப் (கழுத்தைச்சுற்றி அணியும் நீளமான துணி)

பட்டன. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பின்பு மான்செஸ்டர் மற்றும் லாங்கஷைரில் ஜவுளி ஆலைகள் இயந்திரமயமாக்கப்பட்டன. காலனியாதிக்கப் பேரரசு இந்திய கைத்தறி நெசவாளர்களைக் கொடுமையான வரி விதிப்பின் மூலம் நசுக்கி மோசமான நிலைக்கு ஆளாக்கியது. இதில் தகுதி வாய்ந்தவர்கள் தப்பிப் பிழைத்தனர். ஏழையிலும் ஏழைகள், போட்டித் துணிகளின் எல்லைகளுக்கு கீழே இருந்ததால் தப்பித்தனர். இவர்கள் தினசரி பயன்பாட்டுக்காக மிக எளிய பன்னோக்கு ஸ்கார்ஃப் தயாரித்தவர்கள் ஆவர். இது தலையில் போட்டுக் கொள்ளும் துணியாக, துண்டாக, இடுப்பு பெல்ட்டாக, தலைப்பாகையாக, அரைலுங்கியாக, படுக்கை விரிப்பாக, உறையாக பலவிதங்களில் பயன் பட்டது. பராம்பரியச் சடங்குகள் சில தப்பிப் பிழைத்தன. தங்களது திருவிழாக்களில் கன்னத்தில் அலகு குத்துதல், நெருப்பில் நடந்து செல்லுதல் (தீ மிதித்தல்) போன்ற சடங்குகளின் போது தர்மராஜரை வழிபட (யுதிஷ்டிரர்) கர்நாடகாவின் திகல்ரு பழங் குடியினர் சிறப்புத் துணிகளை அணிந்தனர். பறவை முனைப்புக் கூறுகளுடன் கைநெசவில் நெய்யப்பட்ட ஆழ்ந்த சிவப்பு நிறத் தோளணித் துணியைத்தான் அவர்கள் பயன்படுத்தினர்.

### தொடர்ச்சி

இதன் தொடர்ச்சிதான் இந்தியாவில் கைத்தறி பாரம்பரியம் உயிர்ப்புடன் இருக்க உதவியது. முதலாவது, துணியின் இயல்புக்கும் வடிவமைப்புக்கும் புனிதத்தன்மையும் அர்த்தமும் அளிக்கப்பட்டது. இரண்டாவது, அணியும் தனிநபருக்கு ஒரு அடையாள உணர்வைத் தந்தது; ஒரு குறிப்பிட்ட சமுதாயம், பிராந்தியம் அல்லது மதம் ஆகியவற்றைச் சேர்ந்தவர் என்ற அடையாளத்தைத் தந்தது. மூன்றாவது சாதிய அமைப்பின் தொடர்ச்சி ஆகும். இது ஒரே இடத்தில் இருப்பதை உறுதி செய்தது. அதாவது நெசவாளர்கள் வேறு எங்கும் தப்பிச் செல்லாமல் ஒரே இடத்தில் சிக்கவைத்து அவர்களுக்குத் தெரிந்த தொழிலுக் குள்ளேயே அவர்களை இருக்க வைத்தது.



மணிப்பூரின கை நெசவுத் துணி

பரம்பரை பரம்பரையாக வந்த தொழில் திறன் களை அவர்கள் நடைமுறைப்படுத்தி வந்தனர். மேலானவை எனப்பட்ட வேறு தொழில்களுக்கு அவர்களால் சுதந்திரமாக மாறமுடியவில்லை. தென்னிந்தியாவில் விஜயநகர மற்றும் பிரா மணி பேரரசுகள் ஆட்சி செய்தபோது செல்வச்செழிப்பான மற்றும் செல்வாக்கான நெசவாளர் அமைப்புகள் கோயில்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் பண உதவி செய்தனர். அது போன்ற நிலை பிற்காலத்தில் நிகழவே யில்லை. வர்த்தக வியாபாரிகளின் சுரண்டல் மற்றும் தொடர்ந்த சமுதாய சமநிலையின்மை ஆகியவையே அத்தகைய சிறப்பான நிலை

மீண்டும் ஏற்படாமல் போனதற்குக் காரண மாகும். பிரிட்டனில் ஜவுளி ஆலைகளை இயந்திரமயமாக்கல், செயலானது தொடர்ச்சி யாகவும் பரவலாகவும் இருந்து வந்த பாரம் பரிய மரபின் மீது மிகப்பெரிய அடியாக விழுந்தது.

### வாடிக்கையாளர் குழுமம்

கடந்த காலத்தைப் பற்றி மதிப்பீடு செய்யும் போது அந்தக் காலங்களில் இருந்த வாடிக்கையாளர்களையும் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். முன்பே கூறியுள்ளபடி, சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு, வடிவத்தைவிட ஆடைக்கு முக்கியத்துவம் இருந்த போது,



காஞ்சிபுரத்தில் ஒரு தெருவில் இழை பிரித்தல் செயல் நடைபெறுகிறது.

ஒவ்வொருவரும் கையால் நெய்யப்பட்ட துணியை அணிந்திருந்தனர். ஒவ்வொரு வகை வாடிக்கையாளருக்கும் கைத்தறி நெசவாளர் கள் துணியை விநியோகித்தனர்.

முகலாயரின் தைக்கப்பட்ட துணியைப் பயன்படுத்தியதன் மூலம் பிரபுக்களும் உயர் வர்க்கத்தினரும் விலை அதிகமான நெசவுத் துணிக்கு மாறினார்கள். கீழ் நிலை வர்க்கத் தினர் வழக்கமான ஜவுளிகளைத் தொடர்ந்து பயன்படுத்தியதோடு கால்சட்டை, ஜாக்கெட், குர்தா போன்ற தைத்த ஆடைகள் சில வற்றையும் கூடுதலாகப் பயன்படுத்தினர்.

இன்று, நகரத்தில் உள்ள நடுத்தர வர்க்கத் தினர் பிற கலாச்சார வாழ்க்கை முறைகளில் இருந்து ஆடைகளை இறக்குமதி செய்து பயன்படுத்துகின்றனர். இதனால் இந்தியாவின் பரந்துபட்ட ஜவுளி பாரம்பரியத்தோடு இருந்த தொடர்பு இழக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச ஃபேஷன்கள் கைத்தறிப் பயன்பாட்டைச் சார்ந்திருக்கவில்லை. பளபளக்கும் செயற்கைத் துணிகள் வாடிக்கையாளர்களை வசப்படுத்தி விடுகின்றன. பல உள்ளூர் சமுதாயத்தினர் பாரம்பரிய கைத்தறி நெசவை தங்களது வாழ்வின் ஆதாரமாக மதிக்கும் நிலை யிலும், அவர்கள் பொதுமக்களின் கவனம் பெறாமலேயே போகின்றார்கள். அண்மைக் காலங்களில் ஒரு உறுதியான புத்தெழுச்சி ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டுரையில் அது பின்னர் எடுத்துக் காட்டப்படும்.

### சுதந்திர இந்தியாவில் நிர்வாகம்

சுதந்திரத்துக்கு முன்பு, இந்தியாவில் எந்த வகையான ஜவுளியாக இருந்தாலும் அதற் கான சந்தை என்பது சந்தையை இயக்கும் சக்திகளால் நிர்ணயிக்கப்பட்டது. அன்றைய நாளின் ஆட்சியாளர்கள் விதித்த சில ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தன. மகாத்மா காந்தியின் முயற்சி, தேசிய காதி இயக்கம், அதைத் தொடர்ந்து கமலாதேவி சட்டோபாத்யாய மற்றும் புல்புல் ஜெயகர் போன்றவர்களின் அமைப்பாக்க புத்துயிர்ப்பு ஊட்டல் முயற்சிகள் ஆகிய வற்றால் மேற்கொள்ளப்பட்டவை ஆகும். எனினும் சுதந்திரத்திற்குப் பிறகான தொழில் மயமாதல் என்பது மில் துணி, செயற்கை இழை மற்றும் விசைத்தறிகள் ஆகியவற்றைக்

கொண்டு வந்தது. உழைக்கும் வர்க்கத்துக்கு இது விலை மலிவானதாகவும் அதிக அளவில் சௌகரியமானதாகவும் இருந்தது. அதேநேரம் நெசவாளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறையத் தொடங்கியது. முதலில் கவனம் புதுப்பித்தலில் இருந்தது. பிற்காலத்திய பத்தாண்டுகளில் கவனம் சந்தைகள், ஏற்றுமதிகள் அல்லது மானியங்களில் குவிந் தது. இருப்பது என்ன, எது வளர்ச்சி, இல்லா மல் போவது எது, உண்மையில் தேவைப்படும் வாழ்வாதாரம் என்ன என்பது போன்ற அக் கறையான கணக்கெடுப்பு எதுவும் இல்லா மலேயே மேற்சொன்ன கவனம் செலுத்தப் பட்டது.

நடப்புச் சூழல் குறித்த அறிவுக்கு இன்று பலவிதமான மூலங்கள் இருக்கின்றன. ஆனால் தொகுத்துப் பார்த்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியன தொழில்நிபுணத்துவ வழிமுறைப்படி மேற் கொள்ளப்படவில்லை. நிதியைக் கொண்டு தன் னிச்சையாக இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. வெளிப்படைத்தன்மை மற்றும் கண்காணிப்பு இல்லாததால் அந்த நிதி உரிய உண்மையான பயனாளிக்குச் சென்று சேராமல் போய் விட்டது. இதனால் ஏற்கனவே வாழ்வில் நசிந்து போன நெசவாளிகள் மேலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

1980களில் நடுவில் இருந்து தொடங்கிய விசைத்தறிகளின் அபரிதமான வளர்ச்சிக்கு ஏற்ப நுகர்வோர் விழிப்புணர்வு கல்வி தரப் படவில்லை. வித்தியாசத்தை எப்படிச் சொல் வது, ஆக்கிரமிப்பை சீரமைப்பது எப்படி என்பதெல்லாம் கவனத்தில் கொள்ளப்பட வில்லை. இதனால் கைத்தறிகள் நஷ்டம் அடைந்தன. அரசு ஏஜென்சிகள் கைத்தறி மேம்பாட்டுக்காக உதவிகள் செய்தன. ஆனால் அவை திறனற்ற முறையில் அதிகரித்தன. பள பளப்பான தனியார் துறை விளம்பரங்களை அவற்றால் எதிர்கொள்ள முடியவில்லை. துரதிருஷ்டவசமாக, தொடக்க நிலையில் இருந்த அர்ப்பணிப்பும் உற்சாகமும் வீணாகிப் போயின. சமூகம் மற்றும் வர்த்தகம் தொடர்பான சிறிய தொடர்பு வழிமுறைகள், அரசு சந்தைப்படுத்துதல் அமைப்புகள், அரசு அமைப்புகள் எனப் பலவற்றில் இவை சிதறிப் போயின.

அரசாங்க இடையீட்டு நிகழ்வுகள் அர்த்தத் தோடுதான் உருவாக்கப்பட்டன. ஆனால் அவை வேறு வகையில் நடைமுறைப்படுத்தப் பட்டன. அலட்சியமாகவும் நினைத்துப் பார்க்க முடியாத வகையிலும் அமலாக்கப்பட்டன. கடந்துபோன பத்தாண்டுகளில் அரசு ஆதரவு மற்றும் உலகம் முழுக்க கட்டுப்பாடற்ற சந்தை வாய்ப்புகள் இல்லாத நிலையில் கைத்தறி மற்றும் காதி இயக்கத்தை உயிரோடு வைத்திருப்பது பலவகையான அரசு இடை யீடுகள்தான் என்பதை நியாயமாக ஒத்துக் கொள்ள வேண்டும். எண்ணிக்கை அதிக அளவில் குறைந்து வருகிறது என்றாலும் இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத்துக்கு இந்தத் துறையில் மிகச் சிறந்த இடையீடுகள் எவை எனத் தேடிப்பார்த்தால் அனுபவம் மிக்க தனி படைப்பாளிகளுக்கும் கைவினை மற்றும் ஜவுளித்துறையில் கால்பதித்த நிறுவனங் களுக்கும் இடையில் கூட்டாண்மை உருவாக்கிய திட்டம் தெரியவரும். சில உதாரணங்களை எடுத்துக்காட்ட வேண்டுமென்றால் அரசின் விஷ்வகர்மா திட்டம், 1980களில் நடைபெற்ற கண்காட்சிகள், அரசாங்கம் 70களிலும் 80களிலும் நடத்திய கைத்தறி எக்ஸ்போக்கள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டலாம். கடந்த இருபதாண்டுகளில் சந்தை சக்திகள் மெதுவாக மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளன.

கைத்தறி நெசவு சந்தைப்படுத்துதல் தளங் களோடு இணைக்கப்பட்டுள்ள, பேஷன் தொழி லின் கூறுகளோடு இணைக்கப்பட்டுள்ள சூழலில் மேலே கூறிய சந்தை சக்திகள் கைத் தறியைப் புதுப்பித்துள்ளன. இந்திய நெசவு களை அபிவிருத்தி செய்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் இதற்கான அங்கீகாரம் ஆகும்.

## ஆதரவு தரும் அமைப்புகளை புத்துயிரூட்ட சாத்தியமாகும் புதிய அணுகுமுறைகள்

கைத்தறி நெசவுப் பிரிவைப் புத்தாக்கம் பெற வைக்க நிர்வாக அமைப்புகளின் அணுகுமுறை குறித்து பரிசீலிப்பது அவசரத் தேவையாகும். தேய்ந்து வரும் அனுதாபத்தைக் கோரும் பிரிவாக இது பார்க்கப்படுவதைவிட அதிக வாய்ப்புகளை பொதிந்து வைத்துள்ள பிரிவாக கைத்தறிப் பிரிவு பார்க்கப்பட வேண்டும். வளர்ச்சிக்காக தற்போது நடைமுறையில் இருக்கின்ற திட்டங்களையும் செயல்திட்டங்களையும் யதார்த்தமான புதிய வடிவமைப்புத் திட்டங்கள் மூலம் மாற்றீடு செய்ய வேண்டும். முத்ரா திட்டத்தின் கீழ் கடன்களைப் பெறுவது எப்படி, ஸ்டார்ட் அப் மற்றும் திறன் இந்தியா திட்டங்களின் உதவிகளைப்பெறுவது எப்படி என கைவினைக் கலைஞர்களுக்கு வழிகாட்ட ஒரு நெகிழ்வான அணுகுமுறை தேவைப்படுகின்றது. ஏனெனில் கைத்தறித் தொழில் என்பது பெரும்பாலும் சுயவேலைவாய்ப்புத் தொழில் பிரிவாகவே இருக்கிறது.

கைத்தறி நெசவில் உள்ள அனைத்து செயல் முறைகளிலும் பெண்கள் ஆர்வமாக ஈடுபட்டுள்ளனர் சந்தேரியில் மிகப்பெரிய சுழன்று நூலைப் பிரிக்கும் தண்டு இழை பொருத்தப் படுகிறது.

இதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இத்தகைய திட்டங்கள் பயனளிக்கும். இந்தப் பிரிவினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு வங்கியாளர்களுக்கு கூடுதலான பயிற்சியும் கூடுதலான புரிதலும் தரப்பட வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிப்பாட்டு திட்டம் *(MGNREGA)* நெசவாளர்களுக்குப் பயன் அளிக்காது; மறந்துபோன திறன்களை அவர்களுக்குக் கற்றுத் தராது. மேலும் திறன்களைப் பாதுகாப்பதற்கு எதிரானதாகவே இது இருக்கும். பிழைப்புக்காக அங்கும் இங்கும் வேலை செய்வதை கைத்தறி தொழிலாளர் நிறுத்திவிட்டு அவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கு கைவினைக் கலைகள், கைத்தறி மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதிப்பாட்டு திட்டம் ஆகிய துறைகளின் அதிகாரிகள் இடையில் சரியான ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

நியாயமான விலையில் தரமான நூலிழைகளை வாங்குவது சிரமமானதாக உள்ளது. நூலிழைக்குப் பதிலாக சணல், இயற்கை முறையில் உற்பத்தியான பருத்தி, லினென் ஆகியவற்றைப் பயன்படுத்தும் அறிவுப் போதாமை நீக்கப்பட வேண்டும். ஜவுளி மற்றும் பேஷன் வடிவமைப்பாளர்கள் ஈடுபட வேண்டிய பகுதியாக இது இருக்கிறது. புதிய துணிகள் மற்றும் மேற்பரப்பு வடிவமைப்புகளை கைத்தறியில் நெசவு செய்வதற்கு ஏற்ற வகையில் புத்தாக்க வாய்ப்புகளை இவர்கள் கண்ட



கைத்தறி நெசவில் உள்ள அனைத்து செயல்முறைகளிலும் பெண்கள் ஆர்வமாக ஈடுபட்டுள்ளனர்



சந்தேரியில் மிகப்பெரிய சுழன்று நூலைப் பிரிக்கும் தண்டு இழை பொருத்தப்படுகிறது.

றியலாம். பேஷன் தொழிலின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கைத்தறி நெசவை மேம்படுத்தலாம். இரண்டு ஆண்டுகளுக்கு தீவிரமாக உழைத்தால் நல்ல பலன்கள் கிடைக்கும். அவசரம் அவசரமாக நடத்தப் படும் பேஷன் ஷோக்கள் மற்றும் விரைவான விற்பனை மேம்பாட்டு நடவடிக்கையைவிட இது மேலானதாகும்.

இயற்கைச் சாயமேற்றலில் பயிற்சி பெற ஊக்குவித்தல், அதைப் புதுப்பித்தல், நடை முறைக்கு கொண்டு வருதல் ஆகியன சுற்றுச் சூழல் மாசுபடுவதை பெருமளவில் குறைப்ப தோடு உலகளாவிய அங்கீகாரத்தையும் பெறும். இயற்கைச் சாயம் தோய்ப்பு நடைமுறையில் வெளியாகும் கழிவுகள் மண்ணுக்குத் தீங்கு விளைவிக்காதவை ஆகும். நாடு முழுவதும் இயற்கைச் சாயம் தோய்ப்பு பற்றிய அறிவுப் பெட்டகம் இன்னமும் இருக்கிறது. எனவே எதிர்காலத்தில் இயற்கைச் சாயங்கள் முக்கிய சொத்தாகக் கருதப்படும்.

மலை மற்றும் கடற்கரைப் பிராந்தியங்களில் இருந்து கிடைத்த பலதரப்பட்ட இயற்கை நார்களைப் பயன்படுத்துதல் என்பது மூங்கில், அன்னாசி மற்றும் வாழைமர நார்களுக்கான சர்வதேச தொழில்நுட்பக் கூட்டுறவு மூலம் இன்னமும் மேம்படுத்தப்படலாம். இத்தகைய புதிய கச்சாப் பொருட்கள் கைத்தறிவு நெசவுப் பிரிவில் புதிய இயற்கை உற்பத்தி மூலவளங் களை உருவாக்கும் நிலைக்கு நெசவாளர்களை மீண்டும் கொண்டு செல்லும்.

அமேசான், பிளிப்கார்ட் மற்றும் புதியதான இன்டிமார்ட் போன்ற மாபெரும் ஆன்லைன் கம்பெனிகளால் சந்தை வாய்ப்புகள் வேகமாக விரிவடைந்து வருகின்றன. இதில் இண்டி மார்ட் கைவினைக்கலை மற்றும் கைத்தறிப் பிரிவில் விரிவடைந்து வருகிறது. குறிப்பிட்ட எண்ணிக்கையில் வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட கைத்தறி நெசவுகளை ஆன் லைனில் சிறிய அளவில் செயல்படும் தனியார் அமைப்புகள் விற்று வருகின்றன. இத்தகைய சந்தைகளின் பலன்கள் மற்றும் பலவீனங்களை நெசவாளிகள் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மற்றும் ஆர்டரின்படி பொருட்களை விநியோகிக்க வேகமாக வேலை செய்ய முடியும். ஃபேஸ்புக் கணக்குகளைத் தொடங்கவும் தங்களது வேலையை முன் னிலைப்படுத்திக் காட்ட வலைத்தளங்களை நிர்வகிக்கவும் கைவினைக் கலைஞர்கள் தாங் களாகவே கற்று வருகின்றார்கள்.

எளிமையான ஆனால் திறமையான நெசவாளர்கள் மற்றும் நெசவாளர் நிறுவனங் கள் விற்பனைக்காக பொருட்களை ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு விநியோகிக்கத் தேவையான ஆவண வேலை கள் குறித்து புரிந்து கொள்வதில்லை. புதிய சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு வருவது வரை, மாநிலங்களுக்கு இடையில் பொருட்களை அனுப்புவதும் பெறுவதும் சிக்கலானதாகவே இருக்கும். பலருக்கும் இது தெரிவதில்லை. சீராகச் சந்தை பலரைச் சென்றடைவதிலும் விரிவடைவதிலும் இன் றைய நவீன நாளில் வரிகுறித்த பயமும் நடைமுறைகள் குறித்த அறியாமையும் அதிகப் பின்னடைவை ஏற்படுத்துகின்றன.

உள்நாட்டுச் சந்தையில் விற்பனையை அதிகரிக்க சிறப்பு முயற்சி எடுக்கப்பட வேண்டும். உள்நாட்டுச் சந்தைகள் வாங்கும் சக்தியை அதிகரித்து உள்ளன; கலாச்சார ஒருங்கிணைவை ஏற்படுத்தி உள்ளன மற்றும் அழகியல் பிணைவை உருவாக்கி உள்ளன. இந்தியர்களின் ஆசைகளுக்கு ஏற்றதாக பலவகை மற்றும் பல அடுக்குச் சந்தைகள் உருவாக்கப்பட வேண்டும். ஏற்றுமதிச் சந்தையைக் கருத்தில் கொண்டு உள்ளூர் சந்தை புறக்கணிக்கப்படக் கூடாது. தரமான பெருமளவிலான உற்பத்தியைத் தர முடியாத சூழலில் கைத்தறி நெசவு இன்னும் தேவையான அளவு வேகத்தைப் பெறவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில், கைத்தறி துணி போல விசைத்தறி துணிகள் விற்கப்படுகின்றன


மற்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது நம்பகத்தன்மை குறித்த தீவிரமான கேள்விகளை ஒருநாள் எழுப்பி விடும். தொண்டு நிறுவனங்கள் அரசாங்கத்துடன் திறந்த மனதுடன் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் பங்குதாரராகவும் நெருக்கமாகச் சேர்ந்து இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளப் படவில்லை. இந்த பயன்படுத்திக் கொள்ளப் படாத வளங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். தொண்டு நிறுவனங்கள் செயல்திட்டங்களைச் சமர்ப்பிக்க சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அவர்கள் சேவை புரியும் இடங்களில் உள்ள சிறந்த நடைமுறைகள் கூடுதல் திறன் மிக்க செயல்திட்டங்களை அடிமட்ட யதார்த்தத்தை கணக்கில் கொண்டு வகுப்பதில் உதவக்கூடும்.

நாடு முழுவதும் பல நெசவாளர் சேவை மையங்கள் அமைக்கப்பட்டன. 1980களில் திறம்பட செயல்படத் தொடங்கிய அந்த மையங்கள் இன்றுவரையிலும் உள்ளன. உள்ளூரில் சிறப்பாக வேலை செய்பவரைப் பற்றி மற்றவர்களுக்குத் தெரியாது. இந்த மையங்கள் நேரடியான கண்காட்சிகள், விளக்க நிகழ்ச்சிகள் நடைபெறும் மையங்களாக மற்றும் அபிவிருத்தி மையங்களாக மாற்றப்படலாம். இவற்றில் நெசவாளர்களுடன் மற்றும் நெசவாளர்களுக்கு இடையில் வலுவான உறவையும் தொடர்பையும் ஏற்படுத்தலாம். இந்த மையங்களின் தோற்றங்கள் மேல்நிலைப்படுத்தப்பட வேண்டும். கணிப்பொறி அமைப்புகள் தரம் உயர்த்தப்பட வேண்டும். வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். சேகரிக்கப்படும் தகவல் தரவு பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். இவற்றின் செயல்பாடுகள் மற்றும் சாத்தியப்பாடுகள் குறித்து சுதந்திரமான ஒரு ஆய்வை மேற்கொள்வது மிகச் சிறந்ததாகும். ஏனெனில் இவை நெசவாளர்களுக்கு வழிகாட்டக்கூடிய மற்றும் பொதுமக்கள் வந்து செல்லும் இடமாக இயங்க வாய்ப்புகள் உள்ளன. பயிற்சி பெறும் நெசவாளர்களுக்கு உதவுவதற்காகவும் கற்றுத் தருவதற்காகவும் தேவை அதிகமாகும் சமயங்களில் உற்பத்தி செய்யவும் இந்த மையங்களுக்கு மாஸ்டர் நெசவாளர்களை அழைத்து வரலாம். ஆவணப்படுத்துதல் என்பது வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகும். மையங்களில் இந்த ஆவணப்படுத்துதல் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த வேண்டும். இவற்றைப் பகிர்ந்து கொள்ள ஆன்லைனில் பதிவிட வேண்டும்.

நம்முன் உள்ள பாதையை மதிப்பிடுவதற்காக, திறன் கணக்கெடுப்புத் திட்டம் ஒன்றை பெரிய அளவில் மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. நெசவாளர் சமுதாயங்களில் உள்ள தற்போதைய திறன்களையும் அவர்களது தற்கால பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்து நிலைகளையும் மேப்பிங் செய்வதும் இந்தக் கணக்கெடுப்பில் அடங்கும். அமைப்பாக்க வழிமுறையில் அவர்களது உள்ளுறை ஆற்றலை வளர்த்தெடுப்பது எவ்வாறு எனத் திட்டமிட இது உதவும். புகைப்படக்கலை, கணக்குப் பதிவியல், ஜன்னல் காட்சி, கண்காட்சி, காட்சிப்படுத்துதல், பணிச்சூழலியல் சார்ந்த பேக்கேஜிங் மற்றும் ஆன்லைன் விற்பனைக்கான முறையியல் போன்ற புதிய திறன்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இந்தப் பிரிவினரின் திறன் தொகுப்பு வெகுவாக விரிவடையும்.

### மீண்டும் எழுச்சி பெறுதல்

இன்று கைத்தறி நெசவின் மீதான ஆர்வம் மனம் மகிழும் வகையில் மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது. உலகம் முழுவதும் ஒரேவிதமான சர்வதேச பிராண்டுகளின் ஆடைகளைப் பயன்படுத்துவதன் இயல்பான விளைவாக வித்தியாசங்களை நோக்கிய ஆர்வமாக இது உள்ளது. சர்வதேச பிராண்டுகளுக்கு மாற்றாக, சுத்தமான நூலிழைகளால் ஆன இந்திய கைத்தறி நெசவுகள் தனித்தன்மையையும் அவரவருக்கு ஏற்ற ஆடைகளையும் தருகின்றன. மரபு மற்றும் பாரம்பரியத்தோடு இணைத்துப் பார்க்கப்படும் சாகசக் காதலும் இதில் உள்ளது. தேர்ந்தெடுக்கப் பலவகைகள் தரப்படுகின்றன. பணிச்சூழலியல் பலன்கள்



பள்ளிக்கூடம் திறப்பதற்கு முன்பு குழந்தைகள் நெசவுச் செயல்முறைகளைக் கற்றுக் கொள்கின்றனர்.

கிடைக்கின்றன. ஒவ்வொரு ஜவுளியிலும் இணைந்துள்ள ஒரு கலாச்சாரக் கதையும் முக்கியமானதாகிறது.

கைத்தறி நெசவுகளை மேம்படுத்துவதற்கான பல பிரச்சார முகாம்களை பலருக்கும் தெரியப்படுத்துவதில் சமூக ஊடகம் உதவி புரிந்துள்ளது. *Wear Handlooms* என்ற இணைப் புச்சொல் ஜவுளி அமைச்சகத்தால் தொடங்கப் பட்டது. பழைய முயற்சிகளான 100 புடவை ஒப்பந்தம் மற்றும் அதுபோன்ற தனிநபர்கள் முன் வைத்த பல விற்பனை மேம்பாட்டு முயற்சிகள் கைத்தறி நெசவை நோக்கி ஒரு புதிய வாடிக்கையாளர் குழுவை அழைத்து வந்துள்ளன.

"இந்தியாவில் தயாரியுங்கள்", "திறன் இந்தியா" போன்ற திட்டங்களுடன் மிக வேகமாக வளரும் பொருளாதாரத்துடன் இந்தியா இப்போது சர்வதேச ஆவர்வத்தை உருவாக்கி உள்ளது. இனி மேலும் மூன்றாம் உலக நாடு என நினைக்க முடியாது என்ற அங்கீகாரம் இந்தியாவுக்கு அதிகரித்து வரு கின்றது. செறிவான கலாச்சாரம் மற்றும் தத்துவ மரபைக் கொண்ட அதே சமயம் மறு பக்கத்தில் நவீனத்துக்கான பன்முகங்களும் உருவாகி வரும் ஆற்றல்மிக்க நாடாக இந்தியா அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

கைவினைப் பொருட்கள், பாரம்பரியக் கலைகள் மற்றும் கைத்தறி நெசவுகளுக்கு உலகம் முழுவதும் உள்ள வாடிக்கையாளர் களின் கற்பனையையும் இந்தக் கதை கைப் பற்றிக் கொண்டுள்ளது. படைப்பாக்கக் கலாச்சார அம்சங்களை எடுத்துக்காட்டுவது, முன்னிலைப்படுத்துவது, மேம்படுத்துவது ஆகியவற்றை எந்த அளவிற்கு செய்கிறோமோ அந்த அளவு கைத்தறி நெசவில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு அதிக ஊக்கம் அளித்ததாக ஆகும். அதே சமயம் வளர்கின்ற மற்றும் செயல்துடிப்பு மிக்க இந்தியாவின் கதையுடன் அவர்கள் நன்கு ஒருங்கிணைய முடியும்.

வாய்ப்புகள் அளவற்றவை. அதே போன்று பிரச்சனைகளும் அதிகமாகவே உள்ளன. எனினும் சவால் என்பது படைப்பாக்கம் மற்றும் உள்ளுணர்ச்சி தூண்டல் சார்ந்த ஒன்றாகும். இது இந்தியாவின் பல அடுக்கு பாரம்பரியம் நிலைத்து வாழ உதவும். அதுமட்டுமின்றி பல வகையான தனிப்பட்ட திறன்கள், உத்திகள், செயல்முறைகளை அதுவும் உலகின் பிற நாடுகள் இழந்து போய்விட்டவற்றை, நிலைத்து வாழச் செய்யும். மேலும் நெசவாளர் சமு தாயம் உண்மையான பொருளாதார அதி காரத்துடன் இருப்பதற்கான அர்த்தமுள்ள வாழ்வாதாரத்தையும் தரும். ●

# இந்தியாவின் சணல் தொழில் வளர்ச்சி: சட்டப்பாதுகாப்புக்கு அப்பால்...

– சுப்ரதா குப்தா

பருத்தி இழைக்கு அடுத்ததாக இந்தியாவில் பெருமளவுக்கு உற்பத்தியாகும் இயற்கை இழை சணல் ஆகும். சணல், பல்வேறு சமூக பொருளாதார, சுற்றுச்சூழல் தொடர்பான அனுகூலங்களைக் கொண்டது. எளிதில் மக்கும் தன்மைகொண்ட சணல் பலவிஷயங் களில் மாசுபடுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருள்களுக்கு மாற்றாகப் பயன்படக் கூடியது. அதிக மழை பொழியும் பிரதேசங் களில், பள்ளத்தாக்குப் பகுதிகளில் பிற பணப்பயிர்களைப் பயிரிடமுடியாத சூழலில், விவசாயிகளுக்குத் துணைவருமானம் தரக்கூடியதாக சணல் சாகுபடி விளங்குகிறது. இந்தியாவில் சுமார் 40 லட்சம் பேர் சணல் சாகுடி செய்கின்றனர். சணல் பதப்படுத்துதல் மற்றும் சணல்பொருள் தயாரிப்பில் சுமார் 3.5 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். இவ் வாறாக நம் நாட்டின் கிழக்கு மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் விவசாயம் மற்றும் தொழில் துறை பொருளாதாரத்தில் சணல் மிகமுக்கியமான பங்கு வகிக்கிறது.

சணல் இழைக்கு உள்ள இயற்கையான வலியின் காரணமாகவே கடந்த 200 ஆண்டு களுக்கும் மேலாக, கயிறுகள் மற்றும் சிப்பம் கட்டும் பொருள்களில் அது பெருமளவு பயன் பட்டு வருகிறது. பருத்தி இழையை விட சணல் இழை தடிமனாகவும், முரடாகவும் இருப்பதால் சணலில் ஆடைகள் தயாரிக்கப்படுவதில்லை. எனினும் செயற்கை இழைகளின் தயாரிப்பு மலிவானதாகி விட்டதாலும், தேவைக்கு ஏற்ற மாதிரி செயற்கை இழைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடிவதாலும், சிப்பம் கட்டுவதிலும் சணலின் பங்கு வெகுவாக அருகி வந்தது. இந்த நிலைமை சமீபகாலமாக மாறி, சுற்றுச் சூழல் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, மற்ற இயற்கை இலைளோடு சணல் பொருள்களும் முன்னிலைக்கு மீண்டும் வரத் தொடங்கி யுள்ளன.

சிமெண்ட், ரசாயன உரங்கள் ஆகியவற்றை, விலை மலிவான பிளாஸ்டிக் பைகளில் அடைத்து விற்கும் போக்கு பரவலாகி, சணல் தயாரிப்பான கோணிகளுக்குத் தேவை குறைந்து, சணல் விவசாயிகளும், சணல் ஆலை அதிபர்களும் நலிவடைந்த போது, மத்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றியது.

## சணல் பொருள் சிப்பம் கட்டும் சட்டம்

1987 மே மாதம் 11 ஆம் தேதி, சணல் பொருள் சிப்பம்கட்டும் (சிப்பம் கட்டுவதில் கட்டாயப் பயன்பாடு) சட்டம் 1987 அமலுக்குவந்தது. இச்சட்டத்தின்படி ஆண்டுதோறும் சணல் பைகளைப் (கோணிகள்) பயன்படுத்தி எந்த அளவுக்கு எந்தெந்தப் பொருள்களைச் சிப்பம் கட்டி விற்க வேண்டும் என்று அரசு அறி விக்கும். கடந்த முப்பதாண்டுகளில் இச் சட்டம், இந்திய சணல் துறைக்குப் பெருமளவு ஆதரவாக இருந்திருக்கிறது.

பெருமளவு சணல் உற்பத்தி செய்யும் இன் னொரு நாடான வங்கதேசத்தில் அண்மைக் காலம் வரை இதுபோன்ற ஆதரவான சட்டம் கிடையாது. வங்கதேசத்தில், சரக்குளைக் கோணிப்பைகளில் அடைத்து விற்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் சட்டம் 2010 அக்டோபர் 12 ஆம் தேதி இயற்றப்பட்டாலும், 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்தே அமலுக்கு வந்தது. இந்தியாவைப் போல, வங்கதேச அரசு சணல் கோணிகளை நேரிடையாக வாங்கு வதில்லை. மாறாக, சரக்குகளை மூட்டை களில் அடைக்கும் போது சணல் கோணி களை வாங்கி அடைக்கவேண்டும் என்றுதான்

**சுப்ரதா குப்தா,** சணல் ஆணையர், மத்திய ஜவுளி அமைச்சகம்.

| ஆண்டு | மொத்த கச்சா சணல் உற்பத்தி (ஆயிரம் டன்கள்) | மொத்த சணல் பொருள் தயாரிப்புகள் (ஆயிரம் டன்களில்) | அரசு நேரிடையாக வாங்கிய சணல் தயாரிப்புகள் (ஆயிரம் டன்களில்) | சணல் பொருள் தயாரிப்பில் அரசு கொள்முதல் செய்த அளவு (சதவிகிதம்) | மொத்த கச்சா சணல் உற்பத்தியில் அரசு கொள்முதல் செய்த சணல் தயாரிப்புகள் (சதவிகிதம்) |
|---|---|---|---|---|---|
| 2006–07 | 1800 | 1356.3 | 400.7 | 29.5% | 22.3% |
| 2007–08 | 1782 | 1776.0 | 557.9 | 31.4% | 31.3% |
| 2008–09 | 1476 | 1663.7 | 572.2 | 35.0% | 38.8% |
| 2009–10 | 1620 | 1323.3 | 530.7 | 40.1% | 32.8% |
| 2010–11 | 1800 | 1565.7 | 668.6 | 44.0% | 38.3% |
| 2011–12 | 1845 | 1582.4 | 864.2 | 54.6% | 46.8% |
| 2012–13 | 1974 | 1591.5 | 884.1 | 55.6% | 52.8% |
| 2013–14 | 1782 | 1527.7 | 778.1 | 5.09% | 43.7% |
| 2014–15 | 1296 | 1267.1 | 727.5 | 57.4% | 56.1% |
| 2015–16 | 144 | 1217.2 | 829.0 | 68.1% | 57.6% |

வலியுறுத்துகிறது. அதாவது, சணல் கோணிகளைப் பயன்படுத்துவதில் வியாபாரிகளை எந்த அளவுக்கு வங்கதேச அரசு ஊக்குவிக்கிறதோ, அந்த அளவுக்கே, சணல் துறைக்கு அரசின் ஆதரவும் இருக்கும்.

நம் நாட்டில் தற்போது, உணவு தானியங்களும் சர்க்கரையும் (ஜீனி) கோணிப்பைகளில் தான் மூட்டைகட்டப்பட வேண்டும் என்று சட்டம் உள்ளது. உணவு தானியங்களுக்கான கோணிப்பைகளை, சணல் ஆலைகளில் இருந்து அரசே நேரிடையாக வாங்குகிறது. கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் உற்பத்தியாகும் கச்சா சணல், அவைமூலம் தயாரிக்கப்படும் சணல் பொருள்கள், அவற்றில் அரசு கொள் முதல் செய்யும் அளவு, இவற்றுக்கு இடையே உள்ள விகிதாச்சாரம் ஆகியவற்றை மேற்காணும் அட்டவணை மூலம் அறியலாம்.

உணவு தானியங்கள் மற்றும் சர்க்கரையைக் கட்டாயமாகக் கோணிப்பைகளில் அடைத்து விற்கவேண்டும் என்பதற்காக அரசே நேரிடையாக கோணிகளை வாங்கிய நிலை கடந்த பத்தாண்டுகளில் நூறு சதவீதம் அதிகரித்துள்ளது. 2006–07ஆம் ஆண்டில் நான்கு லட்சம் டன்னாக இருந்த அரசின் கோணிகள் கொள்முதல், 2015–16ல் சுமார் 107 சதவீதம் அதிகரித்து 8.3 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. ஆனால் இதே காலகட்டத்தில் கச்சா சணல் உற்பத்தி அளவில் அரசின் கொள்முதலின் அளவு 22.3 சதவீதத்தில் இருந்து 57.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆலைகளின் சணல் தயாரிப்புகளில் அரசுகொள்முதல் செய்த அளவு 29.5 சதவீதத்தில் இருந்து 68.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சணல் தொழிலுக்கு அரசு பாதுகாப்பு அளித்த இந்தக் காலகட்டத்தில், சணல் ஆலைகள் புதிய பொருள்ளைத் தயாரித்து புதிய சந்தைகளை எட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து அரசாங்கத்தின் கொள்முதலையே சணல் ஆலைகள் நம்பி இருந்துள்ளன. அரசாங்கத்தைத் தவிர தனியாரிடமோ, வெளிநாட்டினரிடமோ தமது சணல் தயாரிப்புகளை விற்பனை செய்ய அந்த அலைகளால் முடியவில்லை. தற்போது கோணிப்பைகள் தயாரிப்பு என்ற ஒன்றை மட்டுமே நம்பியுள்ள சணல் ஆலைகள், அவற்றை விற்கவும் அரசாங்கத்தையே நம்பியுள்ளன. வங்கதேசத்து சணல் துறையினர் போல போட்டியிட்டு வியாபாரத்தைப் பெருக்குவதாக நம் நாட்டு சணல் ஆலைகள் இல்லாமல் போவதற்கு அரசு அளித்த பாதுகாப்பும் ஒரு காரணம் எனலாம்.

## இந்தியவங்கதேச சணல் உற்பத்தியும் சணல் பொருள் ஏற்றுமதியும்

| கச்சா சணல் உற்பத்தி (ஆயிரம் பொதிகளில்) | | | மொத்த ஏற்றுமதி (மிலியன் ரூபாய்களில்) | |
|---|---|---|---|---|
| ஆண்டு | இந்தியா | வங்கதேசம் | இந்தியா | வங்கதேசம் |
| 200809 | 8200 | 5172 | 12161.6 | 56045.8 |
| 200910 | 9000 | 5945 | 8594.6 | விவரம் இல்லை |
| 201011 | 10000 | 7803 | 18541.5 | 90946.0 |
| 201112 | 10250 | 7405 | 20949.6 | 81941.4 |
| 201213 | 9300 | 7572 | 19918.0 | 96578.7 |
| 201314 | 9000 | 8000 | 21219.5 | 89172.7 |
| 201415 | 7200 | விவரம் இல்லை | 18138.1 | 97295.9 |
| 201516 | 6500 | விவரம் இல்லை | 18893.9 | 109565.5 |

*வங்கதேசத்து சணல் தொழில்துறை, உற்பத்தியிலும் கச்சா சணல் ஏற்றுமதியிலும் இந்தியாவை விடச்சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. 2008–09ஆம் ஆண்டு இருநாடுகளின் சணல் ஏற்றுமதி (இந்திய ரூபாய் மதிப்பில்) ஆகிய விவரங்கள் மேலேஉள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.*

*இந்தியாவில் சணல் தொழிலுக்குப் பாதுகாப்பு நிலவிய போதும் கச்சா சணல் உற்பத்தி குறைந்து வர, வங்கதேசத்தில் அது அதிகரித்து வந்துள்ளது. ஏற்றுமதியிலும் கூட, இந்தியாவின் சணல் பொருள்களின் ஆண்டுச் சராசரிமதிப்பு ரூ. 17308 மிலியனாக இருக்க, வங்க தேசத்தின் மதிப்போ ரூ. 88,787 மலியனாக உள்ளது.*

*வெளிநாட்டுச் சந்தையில் இந்திய சணல் ஆலைகள் புதிய வாடிக்கையாளர்களைப் பிடிக்காவிட்டாலும் கூட, உள்நாட்டு விற்பனை வாய்ப்புகளைக் கூட வங்கதேசத்து இறக்குமதியிடம் படிப்படியாக இழந்து வந்துள்ளன. இதற்குக்காரணம் வங்கதேசத்து ஆலைகளுக்கு உற்பத்தி செலவு குறைவாக இருப்பதும், இந்திய ஆலைகளின் மெத்தனமான போக்குமே எனலாம். இந்தியாவை விட வங்கதேசத்தில் சணல், ஆலைத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் 30% வரை குறைவாகவும் உள்ளது. எனவே அவர்களின் உற்பத்திச் செலவு 15% முதல் 20% குறைகிறது. மேலும் அந்நாட்டில் சணல் தயாரிப்புகளுக்கு 10 சதவீதம், சணல் இழைகளுக்கு 7.5 சதவீதமும் ஏற்றுமதி மானியம் வழங்கப்படுகிறது. இந்தியாவிலும் கூட வங்கதேசத்து சணல் தயாரிப்புகளுக்கு இறக்குமதி வரிகிடையாது. இந்தக் காரணங்களினால், இந்தியச் சந்தையில் உள்நாட்டுத் தயாரிப்புகளைப் பின்தள்ளிவிட்டு வங்க தேசத்து இறக்குமதிப் பொருள்கள் முதலிடம் பிடித்துவிட்டன. கோணிப்பைகளைப் பெருமளவு பயன்படுத்துகிற நம் நாட்டின் கால் நடை மற்றும் கோழித் தீவனத் தயாரிப்பாளர்கள், முழுவதுமாக வங்கதேசத்தில் இருந்து இறக்குமதியாகும் கோணிகளுக்கு மாறிவிட்டனர். இதனால் அண்மையில் ஆந்திரப் பிரதேசத்தில் இரண்டு சணல் நூல் ஆலைகள் மூடப்பட்டுவிட்டன.*

### சணல் இழைகளின் தரத்தைமேம்படுத்துதல்:

*இந்தியாவில் உற்பத்தியாகும் சணல் இழைகளின் மொத்த அளவில் சுமார் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் இழைகள் சராசரிதரம் கொண்டவையாக (TD5 - TD8) உள்ளன. இவற்றைக்கொண்டு கோணிப்பைகள் மட்டுமே தயாரிக்கலாம். இந்தியாவின் சணல் இழைகள் தடிமனாகவும் முரடாகவும் இருப்பதால் கோணிப்பைகள் மட்டுமே தயாரிக்க முடிவதால், அரசு இத்தொழிலுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். ஆனால் இது சரியான வாதம் அன்று. மேம்பட்ட தரம் கொண்ட சணல் இழைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்குத் தக்க அளவு*

ஊக்க உதவிகள் அளிக்கப்படுவதில்லை என்பதே உண்மை.

எனவே, உயர்தரமுள்ள சணல் தயாரிப்புகளுக்கு ஏற்றவாறு சணல் இழைகளைப் பதப்படுத்துவதே நம்முன் உள்ள சவால் ஆகும். இதற்கென உற்பத்தியாகும் சணல் இழைகளின் தரத்தை மேம்படுத்துவதும், பதப்படுத்தும் முறைகளை மேம்படுத்துவதும் அவசியமாகும். தரமான சணல் இழைகளைக் கொண்டு சிறப்பான சணல் தயாரிப்புகளைச் செய்யும் போது இத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் கைவினைக் கலைஞர்களுக்கும் நல்ல ஆதாயம் கிடைக்கும்.

மேலான தரங்கொண்ட சணல் இழைகளை உற்பத்திசெய்ய, சான்றளிக்கப் பட்டவிதைகளைப் பயன்படுத்துவது, நேர்க்கோட்டு விதைப்புமுறை, தக்க காலத்தில் களை எடுப்பது போன்ற விவசாய நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். தற்போது பின்பற்றுகிற விரிவான விதைப்பு முறையை மாற்றி, உரியகாலத்தில் உரங்கள் இட்டு, பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தினால், சணல் விளைச்சல் தரமானதாக மாறும்.

சணல் இழை தயாரிப்புக்குத் தற்போது அந்தச் செடிகளை அப்படியே ஊற வைத்துப் பதப்படுத்துகின்றனர். ஆனால் அவற்றை ஊற வைப்பதற்குத் தரமான தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே விவசாயிகள் சாலை ஓரங்களில் தேங்கியுள்ள அழுக்கு நீரிலும், சேறான குட்டைகளிலும் சணல் செடிகளை ஊறவைக்கின்றனர். சுகாதாரமற்ற இந்தப் போக்கினால், கிடைக்கின்ற சணல் இழையின் தரமும் மோசமாகவே உள்ளது.

இத்தகைய பிரச்சினைகளைக் களைவதற்காக 2015ஆம் ஆண்டில் மேம்பட்ட சாகுபடி மற்றும் மேலான பதப்படுத்தும் திட்டம் தொடங்கப்பட்டது. அதன்படி விவசாயிகளுக்கு சான்றளிக்கப்பட்ட சணல் விதைகள் மானியவிலையில் வழங்கப்பட்டதுடன், நேர்க்கோட்டு விதைப்புக்கும், களை எடுப்புக்கும் ஏற்ற நவீன விவசாயக் கருவிகள். வழங்கப்பட்டன. மேலும் தண்ணீர் பற்றாக் குறையாக உள்ள இடங்களில், ஊற வைத்துப் பதப்படுத்துவதற்கான மேம்பட்ட நுட்பங்களும் சொல்லித் தரப்பட்டன.

ஊறவைத்துப் பதப்படுத்துதலில் மூன்று புதிய நுட்பங்கள் நல்ல பலன் தரக்கூடியவை. சணல் செடிகளின் மேல் தோலை உரித்துவிட்டு, நீர்த்தொட்டிகளில் என்ஸைம்களைக் கலந்து ஊறவைத்துப் பதப்படுத்துவது ஒரு முறையாகும். உலக அளவில் தொழிற்சாலைகளுக்கான என்ஸைம்களைத் தயாரிக்கும் நிறுவனம், சணல் ஆணையத்துடன் இணைந்து, குறைந்த அளவு தண்ணீரில் ஒரு வாரத்திற்குள் சணல் செடிகளைப் பதப்படுத்தக் கூடிய என்ஸைம்களை உருவாக்கியுள்ளது. (பொதுவாக, நீர்நிலைகளில் சணல் செடிகளை ஊற வைத்துப் பதப்படுத்தும் வழக்கமான முறையில் சராசரியாக 18 முதல் 22 நாள்கள் வரை ஆகும்.)

இரண்டாவது தொழில் நுட்பம், வழக்கமாக சணல் செடிகளை விவசாயிகள் ஊறவைக்கிற நீர் நிலைகளில் சிலவிதமான பாக்ட்ரீயாக்களை இயற்கையான சூழலில் வளரச் செய்து 10 முதல் 12 நாட்களுக்குள் அவற்றைப் பதப்படுத்தும் உத்தியாகும். சணலுக்கான இந்திய வேளாண் ஆய்வுக்குழுமத்தின் கீழ், பரிசோதனை முறையில் இந்தத் திட்டம் செயல்படுகிறது. மூன்றாவது தொழில் நுட்பமும், இதேபோல் பல பாக்ட்ரீயாக்களைப் பயன்படுத்தி சணல் செடி பதப்படுத்துதலைத் துரிதமாக்குவதாகும். பாரம்பரியமாக சணல் விவசாயிகள் பின்பற்றி வரும் பதப்படுத்து முறைக்கு உகந்ததாக உள்ள இந்த இரண்டு நுட்பங்களைப் பயன்படுத்துவது எளிதானதுடன், சணல் செடிகளின் பதப்படுத்தும் காலம் குறைவதுடன், சணல் இழைகளின் தரமும் ஒரு கிரேடு முதல் ஒன்றரை கிரேடு வரை மேம்படும்.

இவ்வாறு மேம்பட்ட சாகுபடி முறைகள், புதிய நுட்பத்துடன் கூடிய பதப்படுத்தும் முறை போன்றவற்றைப் பயன்படுத்தினால் சணல்

உற்பத்தித்திறன் சுமார் 15 சதவீதம் உயரும் என்றும், அதனால் சணல் விவசாயிகளின் வருமானம் குறைந்தது 25 சதவீதம் அதிகரித்துக் கூடும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

சணல் இழைகளின் தரம் மேம்படும்போது, சணல் நூல் தயாரிப்புகளுக்கான எந்திரங் களையும் மேம்படுத்த வேண்டும். தற்போது நம் நாட்டில் உள்ள ஒருங்கிணைந்த சணல் ஆலைகளின் எந்திரங்கள் பிரிட்டிஷ் ஆட்சி காலத்திய பழமையான நுட்பங்களையே பின் பற்றுகின்றன. அண்மைக்காலத்தில் சணல் தொழில்நுட்ப இயக்கம் மூலம் நிறுவப்பட்ட புதிய எந்திரங்கள் கூட 1980களின் நுட்பங் களையே பயன்படுத்துகின்றன.

பருத்தி இழை மற்றும் செயற்கை இழை களைப் பயன்படுத்தும் ஜவுளித் துறையில் புதிய தொழில் நுட்பங்களால் ஏற்பட்டுள்ள மாற்றம் சணல் துறையில் இன்னும் ஏற்படவில்லை. மற்ற இழைகளுக்குப் பயன்படும் தொழில் நுட்பத்தையே சணல் துறைக்கும் ஏற்றவாறு மாற்றியமைக்கும் முயற்சிகள் பலவும் நடை பெற்றுவருகின்றன.

நவீன எந்திரங்களைப் பயன்படுத்தி, தர மான மென்மையான சணல் இழைகள் தயா ரிக்கப்பட்டால், அவற்றைக் கொண்டு நவ நாகரீக சணல் கலைப்பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

**சணல் தயாரிப்புகளின் அபரிமித வாய்ப்புகள்:**

கடந்த சில ஆண்டுகளாக, சணல் இழை களைக் கொண்டும் சணல் இழைகளோடு செயற்கை இழைகள் உள்ளிட்ட ஏனைய இழைகளைச் சேர்த்துக் கொண்டும் அலங்கார கைப்பை, பயணப்பை, காலணி, செயற்கைப் பூங்கொத்து, அணிகலன்கள், சுவர் அலங்காரப் பொருள்கள், தரை விரிப்புகள் போன்றவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. கையால் பின்னப்பட்ட சணலினால் ஆன தரைவிரிப்பு களுக்கும், கம்பளங்களுக்கும், மேலை நாடு களிலும், மத்தியக் கிழக்கு நாடுகளிலும் நல்ல வரவேற்பு உள்ளது.

சணல் கழிவுகளில் இருந்து கையால் தயாரிக் கப்படும்தாள்,மேஜைவிரிப்பு,குஷன்கவர்,டி.வி. கவர் பேனா ஸ்டாண்ட், எழுதுபொருள் ட்ரே, காலண்டர் போன்றவையும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளன. சுற்றுச் சூழல் பாதிப்புப் பற்றி அக்கறையுள்ளவர்கள், சற்று விலை கூடினாலும் இவை போன்ற தயாரிப்புகளை வாங்குகின்றனர். இந்தத் தயாரிப்புகளில் ஈடுபடும் பெண்களுக்கும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் வேலை வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும் உத்தர வாதமாகிறது. எனவே, மாறிவரும் நுகர்வோர் தேவைகளுக்கு ஏற்ப சணல் தயாரிப்புகளில் பல நவீன மோஸ்தர்களையும் தரமானவற்றையும் உற்பத்தி செய்ய வேண்டுவதே இப்போதைய தேவையாகும்.


சணல் இழைகளை நெய்து தயாரிக்கப்படும் பொருள்களைப் போலவே, நெய்யப்படாத சணல் இழைகள் தொழிலகங்களில் பெரு மளவு பயன்படுகின்றன. குளிர் சாதன வசதி செய்யப்படுகின்ற இடங்களிலும், உள் அலங் கார வேலைகளிலும், இடத்தை அடைக்கும் பொருளாக சணல் இழைகள் பயன்படு கின்றன.

முரட்டு சணல் இழைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற சணல் துணிகள் கட்டு மானத்துறையில் பெருமளவு பயன்படும் நிலை அண்மைக்காலமாக உருவாக்கியுள்ளது. சாலைகள் அமைத்தல், நதிக்கரைகள் பாது காப்பு, சரிவுகளின் பராமரிப்பு, ரயில்பாதை கட்டுமானம் போன்றவற்றில் சணல் துணிகள் பயன்படுகின்றன.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் வெவ் வேறான தட்ப வெப்பச்சூழலுக்கும், மண் வளத்திற்கும் ஏற்றவாறு, 210க்கும் மேற்பட்ட விதங்களில் சணல் துணிகள் பயன்படுத்தப் படுகின்றன. இவை மக்கும் தன்மை கொண்டதால், சுற்றுச் சூழலைப் பேணும் அக்கறை உலகெங்கும் பரவியுள்ள இந்தக் காலகட்டத்தில், அதிக வரவேற்பைப் பெற்றுள்ளதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ●

# காதி - நவீன இந்தியாவைக் கட்டமைக்க வலுவான அடித்தளம்

– வீ.கே. சக்ஸேனா



நவீன இந்தியாவைக் கட்டமைப்பது பற்றி நாம் தொடர்ந்து பேசி வருகிறோம். அதற்கென கட்டமைப்பு வசதிகள், அறிவியல் உணர்வு, தொழில்நுட்ப பலம், இராணுவ பலம் கலைத்திறன் போன்றவற்றை வளர்ப்பது முக்கியமென்றாலும், முன்னேற்றப் பாதையில் செல்வதற்குத் துணையாகும் நமது அடிப்படையான திறகைளையும் புரிந்துகொண்டு செயல்படுவதும் இன்றியமையாததாகும். வெகுகாலமாக நம்மோடு பின்னிப் பிணைந்த திறன்களின் மீது வளர்ச்சியைக் கட்டமைப்பது சிறப்பானதாக இருக்கும்.

பல நூற்றாண்டுகளாக பிரிட்டிஷார் நம்மை ஆண்டிருந்த போதிலும், நமது பாரம்பரியமான பண்பாட்டுச் சிறப்புகளினாலேயே நாம் ஒரு தேசமாக உருவாகி வளர்ந்துள்ளோம். அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதியான விழுமங்களின் மீது நமது தேசத்தைக் கட்டமைக்க முடியாது என்றும், இந்த பாரத பூமிக்கு உரிய சிறப்புகளைக் கொண்டே நமது வருங்காலம் உருப்பெறும் என்றும் அண்ணல் காந்தியடிகள் கூறினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட போது சுதேசி இயக்கத்தின் ஆயுதமாகக் காதியை, 1920லேயே முன்னெடுத்தவர் காந்தியடிகள். காதியே சுதந்திரத்தின் ஆடை என்று முழங்கிய அண்ணல், முடிவுறாத இந்தியத் தன்னிறைவின் அடையாளமாகக் காதியைப் போற்றினார். இந்திய மக்கள் தங்கள் சொந்தக் கால்களிலேளே நிற்க முடியும் என்று பிரிட்டிஷாரிடம் உரைத்த காந்தி, இந்தியர்கள் தமது அன்றாட வாழ்வென்னும் இழைகளினூடே வளமையை நெய்யும் பெருமையுடையவர்கள் என்றுரைத்தார்.

கிராமப்புறத்து மக்களின் முயற்சிகளினாலும் பங்களிப்பினாலும் நமது சமூகம் ஆழவேரூன்றியுள்ளது என்று உலகத்திற்கு விளக்கும் விதமாகக் காதியும் கிராமத் தொழில்களும் விளங்குகின்றன. தேசிய உணர்வுக்கு ஊற்றுக் கண்ணாய் இருக்கும் காதி, சாதாரணத் துணி அன்று. அமைதிக்கும் சுதந்திரத்திற்கும் அதுவே அடையாளம்.

நம் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், 1956ஆம் ஆண்டு சட்டப்படி, இந்திய அரசின் சட்டப்பூர்வ அமைப்பாக காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு தேசத்தைக் கட்டமைக்க உதவிய தன்னிறைவுச் சக்திக்கு அஞ்சலியாக அது விளங்கியது. உழைக்கத் தயாராக இருந்த மாபெரும் மனித வளத்திற்கு, பொருளாதார மூலங்கள் இல்லாத சூழலில், அந்தமக்களின் திறமையையும் ஆற்றலையும், இந்த நாட்டுக்குப் பயனுள்ள பொருள்களைத் தயாரிக்கின்ற வேலையில் ஈடுபடுத்துகின்ற அதே சமயத்தில், அவர்களுக்கான வயிற்றுப் பாட்டுக்கும் வழி செய்வதாக காதியும் கிராமத் தொழில்களும் விளங்கின.

உலக அளவில் மிகப்பெரும் உற்பத்தித்திறன் கொண்ட கிராமப்புறத் தொழிலாக காதி

**வீ.கே. சக்ஸேனா,** தலைவர், காதி – கிராமத்தொழில் ஆணையம்.

விளங்குகிறது. இடைத்தரகர்களும், சந்தையமைப்புகளும் இல்லாமல், ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் தமது தயாரிப்புகளை நேரிடையாக நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கின்றனர். கிராம மக்களின் முயற்சிக்கு மதிப்பளிப்பதாகவும், நுகர்வோர் செலவிடும் பணத்திற்கு உரிய நன்மை தருவதாகவும், தேசத்திற்கு வளமான பாரம்பரியத்தைப் பேணுவதாகவும் காதி விளங்குகிறது.

இந்தியாவில் காதிகிராமத்தொழிலில் சுமார் 3.2 லட்சம் நுண் தொழில்முனைவோரும், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. ஒரு கோடிக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். காதித்தொழில் கைவினைஞர்களில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் பெண்கள். இத்துறை மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் வருடாந்திர விற்றுமுதல் ரூ.40,000 கோடிக்கும் அதிகம். இத்தொகையில் சுமார் 40 சதவீதம், அத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கைச் செலவுகளுக்காக மீண்டும் திரும்பிவருகிறது.

தொழில் மயமாதலினால் கார்பன் படிமங்கள் விரிவடைவது குறித்தும், பருவநிலை மாற்றத்தின் தீய விளைவுகள் குறித்தும் உலக நாடுகள் மிக்கக் கவலையோடு பேசிவருகிற இத்தருணத்தில், செயற்கை இழை ஜவுளித்துறை ஏற்படுத்தும் சுற்றுச் சூழல் மாசுபாடுகள் அதிகம். காதித் தொழில் கார்பன் படிவுகள் எதையுமே ஏற்படுத்துவதில்லை என்று உலக முழுவதும் இந்தியா எடுத்துரைக்க வேண்டும். உலக அளவில் ஆண்டுதோறும் 6000 கோடி கிலோ அளவிற்கு செயற்கை இழைகள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென சுமார் 1,07,400 கோடி கிலோவாட் மின்சாரம், தண்ணீர் வீணாக்கப்படுகிறது. உலக அளவில் தொழில் துறையினர் வெளியிடும் கார்பன் படிமங்களில் சுமார் இருபதில் ஒருபங்கு செயற்கை இழை ஜவுளித்துறை மூலமாக ஏற்படுகிறது.

ஆனால் இவற்றுக்கு நேர்மாறாக, காதி என்பது கையால் நூற்று கையால் நெய்யப்படுவது. இதற்கு மின்சாரம் தேவையே இல்லை எனவே மிகச்சிறப்பான துணியாக, வருங்காலத்தில் காதிக்கு முக்கிய இடம் உள்ளது. இந்த அடிப்படையில் உலக அரங்கிற்குக் காதியை எடுத்துச் சென்ற, வருங்காலத்தில் உலகம் நிலைபெற்றிருக்க காதித் தொழில் முக்கிய இடம் பெறுவதை வலியுறுத்தியாக வேண்டும்.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, வானொலி வாயிலாக நாட்டுமக்களுடன் உரையாடும் மனதின்குரல் நிகழ்ச்சியில் கூட, லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய காதிகிராமத்தொழில் நிறுவனங்களை கிராமங்கள் தோறும் அமைக்க வேண்டும் என்று கூறினார். தேசியக் கட்டுமானத்தில் கைவினைஞர்களுக்கு உரிய பங்கின் முக்கியத்துவத்தைப் பிரதமர் அறிந்துள்ளார். ‘சுதந்திரத்திற்கு முன் நாட்டுக்காக காதி இருந்தது, சுதந்திரத்திற்குப்பின் நவீன பாணியாக காதி இருக்கிறது’ என்ற முழக்கத்தை அண்மையில் பிரதமர் முன்வைத்தார். “காதியின் பயன்பாட்டை நாம் ஊக்குவிக்க வேண்டும். ஏதேனும் ஒரு காதித்தயாரிப்பை வாங்குங்கள். காதித் தயாரிப்பை வாங்கும்போது ஏழை மனிதர் ஒருவரின் வாழ்வுக்கு ஒளி கூட்டுகிறீர்கள் என்றார் பிரதமர். இந்த வேண்டுகோளுக்குப் பின்னர் கடந்த ஆண்டில் காதித் துணிகளின் விற்பனை 29 சதவீதம் உயர்ந்தது. இந்தப்போக்கு இன்னும் தொடர்கிறது.

நவீன காலத்து மக்களின் தேவைக்கு ஏற்ப காதி இழைகளின் பயன்பாடும் மாறி, இன்று ஆயிரக் கணக்கான மையங்களில் நவீன காதித் துணிகள் தயாரிக்கப்படுகின்றன. பருத்தியிழை, பாலியஸ்டர், பட்டுநூல் போன்றவற்றை மக்கள் விரும்புகிறவாறு காதி நூல்களுடன் வெவ்வேறு விகிதங்களில் கலந்து நவநாகரீக ஆடைகளும் துணிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

“ஒரே தேசம் ஒரே இழை” என்பது இப்போதைய புதிய முழக்கம். இதன் அடிப்படையில் கடந்த 2016 மே ஐந்தாம் தேதி முதல் ஜூன் நான்காம் தேதி வரை ஒரு மாத காலத்

திற்கு ஸ்ரீ நகரில், தேசியக் காதி கண்காட்சி நடத்தப்பட்டது. சுதந்திரத்திற்குபிறகு அங்கே நடைபெற்ற இத்தகைய முதலாவது கண்காட்சி அதுதான். நாடு முழுவதும் இருந்து 198 காதி நிறுவனங்களின் தயாரிப்புகள் அக்கண் காட்சியில் இடம்பெற்றன. அவற்றில் 56 நிறுவனங்கள் ஜம்முகஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவை. ஒரு லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் வருகைதந்த அந்தக் கண் காட்சி மூலம் இரண்டு கோடிரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள காதித் தயாரிப்புகள் விற்பனை ஆயின. 2016 மே மாதத்தில், கஷ்மீரின் பம்போர் என்னும் இடத்திற்கு அருகில் 25 இராட்டைகளும், 5 தறிகளும் கொண்ட தொழிலகம் ஏற்படுத்தப்பட்டது. தீவிர வாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினருக்காக, ஜம்மு மாவட்டத்தின் நக்ரோட்டா என்னும் கிராமத்தில் நாப்கின் தயாரிப்புத் தொழிலகம் ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இதனால் 296 பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது.

உலக அளவில் காதி ஆயத்த ஆடைகளைப் பிரபலமாக்குவதற்காக, பிரபல ஆடை வடி வமைப்பாளர் ரீது பேரி என்பவரை காதி கிராமத்தொழில் ஆணையம் பணியமர்த்தி உள்ளது.

இவ்வாறாக, கிராமப்புறத்து ஏழை மக்களை ஆதாயம் உள்ள வேலையில் ஈடுபடுத்தி ஊரக வளர்ச்சிக்குத்துணை புரியும் காதிகிராமத் தொழில் ஆணையம், தனது முதன்மைத் தயாரிப்பாக காதியை முன்னிறுத்துகிறது. தேசப்பிதா காந்தியடிகளின் அழைப்பை ஏற்று தன்னிறைவுக்கும் சுயமரியாதைக்கும் அடையாளமான இராட்டையைக் கைக் கொண்ட முகம் தெரியாத எண்ணற்ற மக் களின் அடையாளமாகவே இராட்டை திகழ் கிறது. எனவே அஹிம்சை வழியில் இந்திய சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட எண் ணில்லாத இந்திய மக்களின் போற்றத்தக்க அடையாளமாகிப்போன இராட்டையை, இந்தியத் தலைநகரின் பிரதான இடத்தில் நிறுவவேண்டும் என்ற எண்ணம் வலுப் பட்டது. அதனை அடுத்து, முப்பது அடிநீளம், பதினேழு அடி உயரம், ஒன்பது அடி அகலத்தில், பர்மாதேக்கு மரத்தில் தயாரிக்கப்பட்ட நான்கு டன் எடையுள்ள உலகிலேயே மிகப்பெரிய ராட்டையைப் புதுதில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தின் வாயிலில் காதிகிராமத் தொழில் ஆணையம் நிறுவியுள்ளது. இந்தியா வின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அடை யாளத்தை உலகெங்கிலும் இருந்து வரக்கூடிய லட்சக்கணக்கான மக்கள் காணக் கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

காதிகிராமத் தொழில் ஆணையத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கு வது. பிரதமரின் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், இத்திட்டம் தொடங்கியதில் இருந்து நாடு முழுவதும் சுமார் 20 லட்சத் திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் ஏற் படுத்தப்பட்டுள்ளன. இதனால், வேலைதேடி கிராமத்து மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர் வது தடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடைய கைத்திறன் செழிக்க வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டது.

தற்போது நலிந்துள்ள கிராமத் தொழில் நிறுவனங்களை மீண்டும் இயங்கச் செய்யும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. விற்பனையை இருமடங்காக்கவும், கிராமக் கைவினைகளுக்கு அதிகப்படியான ஊதியம் கிடைக்கவும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தறிகளை இயக்குவதற்கு சூரியசக்தியைப் பயன்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத்திட்டம், நம்பகமான சுகாதார வசதிகளும் செய்து தருவதுடன், கல்வி அறிவை மேம்படுத்தவும் திட்டங்களை செயல்படுத்த ஆணையம் முயன்றுவருகிறது. மனிதகுல வரலாற்றில் இதுவரை தோன்றியுள்ள சமூகபொருளாதார வளர்ச்சித்திட்டங்களில் நிலைபெறும் தன்மையோடு முன்மாதியாக உள்ள காதித் தொழில் புதிய உச்சத்தை எட்ட பீடு நடை போடுகிறது. ●

# இந்தியாவின் துணி, ஆடைகள் ஏற்றுமதிக்கு உருவாகிவரும் சந்தைகள்

– அதிதிதாஸ் ராவுத்

**ப**ல்வேறு வகைப்பட்ட ஆடைகளின் வணிகத்தில் தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்திலேயே இந்தியா புகழ்பெற்று விளங்கியது. சுல்தானியர்களின் காலத்தில் சந்தைகளில் விற்கப்பட்ட மிக நேர்த்தியான ஆடைகளைப் பற்றிய விரிவான விரிவான விவரங்களை இபன்பட்டுடா போன்ற பல வெளிநாட்டுப் பயணிகள் எழுதிச் சென்றுள்ளனர். பழங்காலத்தில்சீனாவிலும்,இந்தோனேஷியாவிலும், ரோமானிய உலகிலும் இந்தியத் துணிகள் விற்கப்பட்டுள்ளன. ரோமானிய வணிகக் கப்பல்களுக்குப் பிறகு அரபு வணிகர்களும், வாஸ்கோடாகாமாவின் இந்திய வருகையை அடுத்து 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துகீசியர்களும் இந்தியாவில் வணிகம் செய்தனர். கால ஓட்டத்தில் 16ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய கம்பெனிகள் இந்தியத் துணைக்கண்டத்தில் தளம் அமைத்து இலாபகரமான வணிகத் தொடர்பின் அங்கமாயினர். துணிகளை ஏற்றுமதி செய்யும் மிகப் பெரிய தேசமாக இந்தியா ஆனது. துணி வணிகம் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் உச்சத்தைத் தொட்டது.

முகலாயர் ஆட்சியின் போது, நாட்டின் மிக முக்கியமான இறக்குமதிப் பொருள்களில் தங்கம், வெள்ளிக் கட்டிகள், பட்டாடை மூலப் பொருள்கள், குதிரைகள், தந்தம், விலைமதிப்புள்ள கற்கள், வெல்வெட், சித்திர வேலைப்பாடு கொண்ட துணிகள் போன்றவை அடங்கியிருந்தன. பலவிதமான ஆடைவகைகள், நீலச்சாயம், வாசனைப் பொருள்கள், பிறவகைப் பொருள்கள் யாவும் அடங்கியிருந்தன, சாலைகளில் போக்குவரத்து அளவுக்கு உட்பட்ட நிலையிலும், பாது காப்பற்றதாகவும் இருந்தது. ஆகவே கடல் வழிகள் போன்ற நீர்வழிகள் வணிக நோக்கங்களுக்கு உகந்த மிகச் சாதகமான பாதைகளாயின. இந்தியப் பெருங்கடலின் வழியாக தென்கிழக்கு ஆசியாவிற்கு பல நூற்றாண்டு காலம் நடைபெற்ற வர்த்தகத்தில் இந்தியத் துணிவகைகள் செல்வாக்கு செலுத்தி வந்தன.

இந்தியத் துணி வகைகள் மலிவானவை மட்டுமின்றி அழகானவையும் கூட என்பதால் கடல்கடந்த நாடுகளிலுள்ள சந்தைகளில் இவை வாங்கப்பட்டன. காலனி ஆதிக்கம் நிலவிய காலத்தில் எந்திரங்களின் துணையோடு உற்பத்தி செய்யப்பட்ட விலை மலிவான துணிகள், துண்டுதுணிகள் ஆகியவற்றை இந்தியா இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. மிக சமீபகாலத்தில் உலகமயமாதல் போக்கின் காரணமாக உற்பத்தி மையங்களும், ஒருங்கிணைந்த சந்தையும் உருவாகியுள்ள போதிலும் பல சவால்களும் உருவாக்கியுள்ளன. இருப்பினும் கூட, இந்தியாவின் பலதரப்பட்ட கைத்தறித்துணிகள் விலை மதிப்புடைய பொருள்களாகவே தொடர்கின்றன. சிறப்புச் சந்தைகளில் இவை ஆதிக்கம் செலுத்துகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக உலக வர்த்தக வளர்ச்சி மந்தமாக இருந்துவருகிறது. வளர்ந்த நாடுகளில் சந்தையின் மீட்சி சீரற்ற வகையில் ஏற்பட்டுவருவதும்,வளரும்நாடுகளில்மிதமான வளர்ச்சி காணப்படுவதும் இதற்குக் காரணம், உலக வர்த்தகத்தின் அளவில் காணலாகும் வளர்ச்சியானது 2015ஆம் ஆண்டு இருந்த அதே நிலையிலேயே 2.8 விழுக்காடு என்ற அளவில் இந்த ஆண்டும் நீடித்திருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆசியாவில் பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடுகளில் இறக்குமதிப் பொருள்களுக்கான தேவை இந்த

**அதிதிதாஸ் ராவுத்,** வணிக ஆலோசகர், ஜவுளி அமைச்சகம்.

ஆண்டு வேகமெடுக்கும் என்ற உலக வர்த்தக அமைப்பின் எதிர்பார்ப்பு உள்ள போதிலும், வளரும் நாடுகளின் இறக்குமதி இந்த ஆண்டு மிதமானதாகவே இருக்கப்போகிறது. உலக வர்த்தகத்தின் வளர்ச்சி 2017ஆம் ஆண்டில் 3.6 விழுக்காடு அளவுக்கு உயர்ந்தாக வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பு (WTO) கூறுகிறது.

உலக வர்த்தகச் சூழல் இன்று மிகவும் சவாலானதாக இருக்கிறது. ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா போன்ற பாரம்பரியமான சந்தைகள் வலுவானவைகளாக இருந்த போதிலும் கூட, இந்தியா வளர்ந்து வரும் சந்தைகளை நோக்கி குறியை நகர்த்தி வருகிறது. அதிகமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுவரும் பலநாடுகள் சவால் மிகுந்த உயர் பொருளாதாரச் சூழலைச் சந்தித்து வருகின்றன. பிரேசில், இந்தியா, இந்தோனேஷியா, மெக்சிகோ, ரஷ்ய கூட்டமைப்பு, தென் ஆப்ரிக்கா, துருக்கி ஆகிய பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடுகளுக்கு 2016ஆம் ஆண்டில் மிதமான வளர்ச்சிதான் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் சீனாவில் மட்டும் ஒருசிறிது மிதமான நலிந்தவளர்ச்சி மிக நீண்ட காலத்திற்கு நீடித்திருக்கும் வாய்ப்பு உள்ளது.

இத்தகைய சூழலில்,சீனாவில் பொருளாதார மந்தநிலை என்பது, தலைதூக்கிவரும் சிறிய வளரும் நாடுகளின் மீதும், மாற்றம்காணும் நிலையில் உள்ள அவற்றின் பொருளாதாரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. வளர்ந்த நாடுகளை, அதிலும் குறிப்பாக ஐரோப்பியப் பகுதியில் இருக்கும் நாடுகளின் எளிதில் சிதைவுறக்கூடிய நிலையில் உள்ள மீள் நீலையை இது பாதித்துவிடும் என்ற அச்சம் நிலவுகிறது. ஆடைத் தொழில் வளர்ச்சி என்பது தொழில்மயமாதலை நோக்கிச் செல்லும் பயணமாகும். பெண்களுக்கும், குறைவான திறன்கள் உடையவர்களுக்கும் ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்கித்தர வல்லது இத்தொழில். துணி உற்பத்தி உற்பத்தி சீனப் பொருளாதாரத்தின் அங்கமாகும் போது, அது உலக துணி வணிகத்தில் ஒரு புதிய நிலையை உருவாக்கும். எனவே, கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை இந்தியா கைப்பற்றிக் கொள்ளவேண்டும். உற்பத்தித் துறைகளிலும், வேகமாக வளர்ச்சி பெற்றுவரும் சேவைத் துறைகளிலும் உயர் திறன்கள் தேவைப்படும் வேலைகளை நோக்கி சீனா நகர்ந்து வருகிறது. மண்டல வணிக ஒப்பந்தங்கள் (RTA) தேர்ந்தெடுக்கப்பட்ட சில சந்தைகளில் முக்கியமான பங்கினை ஆற்றும். இந்தியாவிற்கு சாதகமில்லாத வணிக மடை மாற்றத்தையும் செய்து விடக்கூடியவை இவை.

**உலக அளவில் ஆடை ஏற்றுமதிகள்:**

தற்போதைய உலக ஆடைச்சந்தை 1100 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பினைப் கொண்டிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் சந்தையின் வணிக மதிப்பு 750 பில்லியன் அமெரிக்க டாலராகும். இதில் ஐரோப்பிய யூனியன் தான் மிகப்பெரிய நுகர்வோர். ஆண்டுக்கு 350 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடையது ஐரோப்பிய யூனியன் சந்தை உலகத் துணி வணிகம் 5 விழுக்காடு. விகிதத்தில் வளர்ந்து 2025 ஆம் ஆண்டில் 2100 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய ஆடை ஏற்றுமதியாளர் சீனா, உலக ஏற்றுமதியாளர் சீனா உலக ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 35 முதல் 39 விழுக்காடுவரை உள்ளது. இதனைஅடுத்து ஐரோப்பியா யூனியன், வங்கதேசம், ஹாங் காங், வியத்நாம், இந்தியா, துருக்கி, இந்தோனேஷியா, அமெரிக்கா, கம்போடியா ஆகிய நாடுகள் வருகின்றன. உலகின் மிகப்பெரிய ஆடை இறக்குமதியாளர்களில் ஐரோப்பிய யூனியன் முதலாவதாக வருகிறது. உலக ஆடை இறக்குமதியில் 35 முதல் 38 விழுக்காடு வரை ஐரோப்பிய யூனியன் செய்துவருகிறது. இதில் அமெரிக்காவின் பங்கு 18%, ஜப்பான் 6% இவற்றை அடுத்து வரும் முக்கியமான நாடுகள் ஹாங்காங், கனடா, ரஷ்யா, தென்



கொரியா, ஆஸ்திரேலியா, ஸ்விட்சர்லாந்து, சீனா ஆகியனவாகும். ஆனால் இந்த ஏழு நாடுகளும் உலக இறக்குமதி அளவில் சிறுபங்கையே பெற்றுள்ளன.

அடுத்த ஐந்து ஆண்களுக்கு அதிகமான துணியையும், ஆயத்த ஆடைகளையும் வழங்கும் நாடாக சீனாதான் இருக்கும். ஆடை உற்பத்திக் கருவிகளை ஏராளமான அளவில் இறக்குமதி செய்து, துணி ஆலைகளை உருவாக்கி மேம்படுத்தி நவீனமயப்படுத்துவதற்கு முதலீடுகளை சீனா வெற்றிகரமாகப் பெற்றுள்ளது. எனவே, அகன்று பரவிய உலகச் சந்தை சீனாவிற்குத் தேவைப்படும். அதே சமயம் அதிகரித்து வரும் உள்நாட்டுத் தேவைகளும் சீனாவிற்கு இருக்கின்றன.

### துணிகள், ஆடை ஏற்றுமதியில் இந்தியா:

உலக வர்த்தக அமைப்பு (WTO) 2015 ஆம் ஆண்டு வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களின்படி உலகின் மூன்றாவது பெரிய துணி ஏற்றுமதி நாடாக இந்தியா திகழ்கிறது. உலக துணி வர்த்தகத்தில 2014ஆம் ஆண்டில் இந்தியாவின் பங்கு 5.8 விழுக்காடு. 2014ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒட்டுமொத்த ஏற்றுமதியான 41 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் 18.3 பில்லியன் அமெரிக்கா டாலர் துணி ஏற்றுமதியாகும். உலக அளவில் துணி வர்த்தகம் 314 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு 2014ஆம் ஆண்டில் நடைபெற்றது. ஆயத்த ஆடைகளின் ஏற்றுமதியில் இந்தியா பெரிய தேசமாகும். உலக ஆயத்தஆடை வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 3.7 விழுக்காடு. 41 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள மொத்த ஏற்றுமதியில் இந்தியாவின் ஆயத்த ஆடை ஏற்றுமதி 18 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும்.

இந்தியத் துணி ஆலைகள் செய்துவரும் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் வருவாய் மதிப்பையும், வலிமையையும் உள்நாட்டு சவால்களானஅதிகரித்துவரும் மின்சார செலவு, போக்கு வரத்துச்செலவு, தொழிலாளர் சட்டங்கள் இவற்றையும் தாண்டி இந்தியத் துணித்தொழில் மற்ற தொழில் பிரிவுகளை விடவும் சிறப்பாகச் செயல்பட்டு அதிகமான ஏற்றுமதியை செய்துள்ளது. 2015–2016 இல் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 14 விழுக்காடு துணிகளேயாகும்.

### புதிய உற்பத்தி மையங்கள்:

இந்தியாவில் நிலவும் குறைவான தொழிலாளர் செலவு என்ற போட்டி ஆதாயம் மெள்ள மெள்ள சிதைந்து வருகிறது. வங்கதேசம், வியத்நாம் போன்ற நாடுகளில் திறன் படைத்த தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தில்

கிடைப்பதால் போட்டி அதிகரிக்கிறது. வங்கதேசத்தின் ஏற்றுமதித்திறன் கொண்ட தொழில்பிரிவு அந்த நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1/4 பங்கிற்கும் மேலாக இருக்கிறது. உலக உற்பத்தியாளர் மையமாக தொடர்ந்து வளர்ந்து வரும் வாய்ப்பும் இந்த நாட்டிற்கு உள்ளது. வங்க தேசம் தவிர வியத்நாம், கம்போடியா, எத்தி யோப்பியா, மியான்மர் போன்ற நாடுகள் உலக ஆயத்த ஆடை வர்த்தகத்தில் புதிதாக முளைத்திருக்கும் போட்டியாளர்கள். மியான் மரின் ஆடைத்தொழில் வரும் ஆண்டுகளில் கணிசமான அளவிற்கு வளர்ந்து வந்துவிடும். 2015 ஆம் ஆண்டு மத்தியவாக்கில் தோராய மாக 230000 என்ற அளவில் இருந்த வேலைவாய்ப்பு 2020ஆம் ஆண்டில் 1.5 மில்லியனாகப் பெருகிவிடும் என்று கணிக்கப் பட்டுள்ளது. மியான்மர் நாடு தேசிய ஏற்றுமதி செயல்திட்டம் 2015–19 என்ற ஆவணத்தை



வெளியிட்டுள்ளது. துணிகளை வெட்டுவது, உருவாக்குவது, பெட்டிகளில் அடைப்பது என்ற போக்கிலிருந்து மாறி அதிக அளவில் துணிகளை உற்பத்தி செய்து, நெய்யப்பட்ட துணிகளின் தரத்தை மேம்படுத்தி ஏற்றுமதி சந்தையில் போட்டியிடுவது பற்றி அது பேசுகிறது.

இந்தச் சந்தையில் போட்டியிடத் தேவைப் படும் எல்லா விதமான மூல ஆதாரங்களும் எத்தியோப்பியாவிற்கு இருக்கின்றன. மூலப் பொருள்கள், குறைந்த சம்பளத்தில் பணி யாளர்கள், குறைவான மின்சார செலவு போன் றவை இத்தகைய ஆதாரங்கள் ஆகும். துணித் தொழிலில் ஏராளமான வளர்ச்சிக்கான சாத்தியம் என்பது, உள்ளூரில் செய்யப்படும் பருத்தி உற்பத்தி, ஆடை உற்பத்தியோடு அது ஒருங்கிணைக்கப்பட்டுள்ள விதம், ஆடைத் தொழிலகங்கள் உள்ளூரில் விளையக்கூடிய பருத்தியையே சார்ந்திருப்பது ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகிறது. எத்தியோப்பியா ஆடைத் தொழில் பிரிவை மேலும் நவீன மயமாக்கி வளர்த்தெடுப்பதில் தீவிரம் காட்டி வருகிறது. இதில் அந்நியமுதலீட்டை ஈர்ப் பதற்கும் முயற்சித்து வருகிறது. ஆப்ரிக்க வளர்ச்சி வாய்ப்புகள் சட்டம் (AGOA) மூலம் கிழக்கு மற்றும் தெற்கு ஆப்ரிக்காவிற்கான பொதுச்சந்தை (COMESA) பலவிதமான இருதரப்பு வணிக ஒப்பந்தங்கள் போன்றவை மூலமும் ஏற்றுமதிக்கான புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆயுதங்களைத்தவிர மற்ற அனைத்தும் என்ற திட்டத்தில் எத்தி யோப்பியாவும் இணைந்துள்ளது. இதன் மூலம் ஐரோப்பிய யூனியன் சந்தையில் அதிக வளர்ச்சியடையாத நாடுகளும் நுழைய முடியும்.

உலக வங்கி வெளியிட்டிருக்கும் தரவு களின்படி வங்கதேசம், கம்போடியா, எத்தி யோப்பியா, மியான்மர், வியத்நாம் ஆகிய நாடுகளின் ஆண்டு ஒட்டு மொத்த உள்நாட்டு வளர்ச்சி விகிதம் முறையே 6.6, 7, 9.6, 7, 6.7% ஆக இருக்கிறது. இந்த நாடுகள் புதிதாக உருவாகி இருக்கும் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி


மையங்களாகும். வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் பெறவும், முதலீடுகள் உற்பத்தி ஆகியவற்றின் மூலம் பயன்பெற்று சீனாவிடமிருந்து விலகிவரவும் இவை உதவும். தென்கிழக்கு ஆசியப் பகுதி மிகப்பெரிய நுகர்வுச் சந்தையாக வளரும் வாய்ப்பு காலப் போக்கில் உருவாகும்.


துணித் தொழில் நுண்ணாய்வு லிமிடெட் 2016 இன் படி, ஆப்ரிக்காவின் இறக்குமதி சந்தை, ஆப்ரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புச் சட்டம் (AGOA) அமுலுக்கு வந்த 2000 ஆண்டுமுதல் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்திருக்கிறது. இந்தப் பகுதியில் ஆடை உற்பத்தியை ஊக்குவிக்க இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. சஹாராபாலைவனத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள நாடுகளின் ஏற்றுமதியாளர்கள் வரியற்ற, ஒதுக்கீடுகள் இல்லாத முறையில் அமெரிக்க சந்தையை இதன் மூலம் அணுகமுடியும். இந்தச் சட்டம் இயற்றப்பட்டது முதல், பல நாடுகளில் ஆடை ஏற்றுமதி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இறக்குமதி ஆடைகளுக்கான தேவை அதிகரித்திருக்கிறது. ஆயினும், இந்த நாடுகளில் முழுமையான வழங்கல் இணைப்பை உருவாக்கி நூல்நூற்பு, நெசவு, சாயமிடுதல், முற்றாக்கல் வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் முற்றிலும் அங்கேயே உருவாக்கப்பட்ட துணிகளை அமெரிக்க சந்தைக்கு முன்னுரிமை அடிப்படையில் தகுதி பெறச் செய்வதே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதற்கான நோக்கமாகும்.

ஆப்ரிக்காவில் மிக அதிகமான சாத்தியப்பாடுகள் உள்ளன. நைஜீரியா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் செய்யப்படுவதைப் போன்ற சில உபாயங்களை கடைபிடித்தால் இத்தகைய சாத்தியங்கள் கை கூடும். ஆப்ரிக்காவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% அளவுக்கு உள்ள 11 நாடுகளில் இருக்கும் 15 மில்லியன் வீடுகளில் நடுத்தர வர்க்கத்தினர் வசிக்கின்றனர். 2030 ஆம் ஆண்டில் இவர்களின் எண்ணிக்கை 42 மில்லியனாக அதிகரிக்கும். பாதுகாப்பு குறைபாடு, அரசியல் ஸ்திரத்தன்மை இன்மை, ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனைகள், கட்டமைப்புக் குறைபாடுகள் போன்றவை ஆப்ரிக்காவிற்கு முன்னுள்ள சவால்கள். இதில் போதுமான அளவிற்கு நீரும், மின்சாரமும் கிடைக்காமல் போவதும் அடங்கும்.

## இந்தியத்துணிகள் மற்றும் ஆடைகளுக்காக உருவாகிவரும் சந்தைகள் யாவை?

இந்தியாவின் துணிகள், ஆடைகளுக்கான ஏற்றுமதிக்கு அதிகமான வாய்ப்புள்ள முதல் பத்து நாடுகளில் வங்காளதேசம் தவிர பிற நாடுகளுடன் இந்தியாவிற்கு வணிக ஒப்பந்தங்கள் ஏதுமில்லை. உலகச் சந்தையின்







போக்கிற்கு ஏற்ப சந்தைகளை அவ்வப்போது மாற்றிக் கொள்வது உலகப் பொருளாதாரத்தில் தொடர்ச்சியான நீடித்த ஏற்றுமதி வளர்ச்சிக்கு அவசியமானதாகும். ஆகவே, நாம் எந்தெந்த நாடுகளில் நமக்கேற்ற சிறந்த சந்தைகள் உள்ளன என்பதை உறுதிப்படுதிக்கொள்ள வேண்டும். இயற்கையாக உருவாகும் பருத்தி, கம்பளி போன்றவற்றை விடவும் செயற்கை இழைகளுக்கான தேவையே சர்வதேச அளவில் முதன்மையாக உள்ளது. இதன் காரணமாக சிறிய தொழிலமைப்புகளுக்கு பாதிப்புகள் ஏற்படலாம். மேலும் வெளி நாட்டு சந்தைகளில் போட்டியிடுவதற்கு பல தரப்பட்ட வயதுடையவர்களின் நாகரீகப் போக்கிற்கேற்பவும், நுகர்வோரின் விருப்பத் திற்கு ஏற்பவும் விரைவாக தகவமைத்துக் கொள்வதும் உடனடியாக வினையாற்றுவதும் தேவையானதாக இருக்கிறது.

இந்திய ஏற்றுமதிக்கான தேவையானது, வளர்ச்சி அடைந்த நிலையிலிருக்கும் பாரம் பரிய உலகச் சந்தைகளில் இருக்கிறது. அதாவது வடஅமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் மந்தமான நிலை இருக்கும் என்ற முன் உணர்வினாலும் வணிகரீதியில் இந்திய ஏற்றுமதிக்கு சவால்கள் ஏற்படும். நம்முடைய போட்டியாளர்களுடன் போட்டிமிகும். எதிர் கால வளர்ச்சியின் வேகம் வளர்ந்துவரும், முகிழ்த்து வரும் பொருளாதார சக்திகள் எந்த அளவிற்கு அதிகமான வளர்ச்சி விகிதங் களை எட்டுகின்றன என்பதைப் பொறுத்தே அமையும். இந்தப் பகுதிகளில் வலுவான மத்தியதர வர்க்கம் உருவாவதைப் பொறுத்தே நீண்ட காலத்தேவையும், வளர்ச்சியும் இருக்கும். லத்தீன் அமெரிக்கா, ஆசியான் நாடுகள் யுரேசியா, மேற்கு ஆசியா வட ஆப்ரிக்கா நாடுகள் *(WANA)* இவை தவிர துருக்கி, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடு களிலுள்ள சந்தைகள் கவனத்திற்குரிய பகுதி களாக இருக்க வேண்டும். பின்வரும் வரை படம் இதனை விவரிக்கிறது.

தெற்கு ஆசியா, வடக்கு ஆப்ரிக்க பகுதிகள் *(WANA)* வேகமான வளர்ச்சியைக் கண்டுவரும் பகுதிகளாலும். இந்தப் பகுதிகளிலும் இஸ்ரே லிலும் வணிக ஒப்பந்தங்களை உருவாக்கிக் கொள்வதற்கு இந்தியா முயன்று வருகிறது. இஸ்ரேல் தனது ஆயத்த ஆடைத்தொழிலுக்குத் தேவைப்படும் பெரும்பகுதி நூல், பின்னலாடை போன்றவற்றை இறக்குமதி செய்து வருகிறது.



ஆயத்த ஆடை இறக்குமதியில் 5% CAGR வளர்ச்சியை இஸ்ரேல் கண்டுள்ளது. இதன் மதிப்பு 2015ஆம் ஆண்டில் 15 பில்லியன் அமெரிக்க டாலராகும். இதில் இந்தியாவின் பங்கு 1% இஸ்ரேலில் உருவாகும் துணிகளை இறக்குமதி செய்வதில் இந்தியாவின் பங்கு 6 விழுக்காடிற்கும் அதிகம். இதன் மதிப்பு 2015ஆம் ஆண்டில் 0.2 பில்லியன் அமெரிக்க டாலர்.

ஆப்ரிக்க கண்டத்தில் எகிப்தில்தான் மிக அதிக எண்ணிக்கையிலான பருத்தியாடைத் தொழிலமைப்புகள் இருக்கின்றன. எகிப்திய பொருளாதாரத்தில் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்து வரும் ஆடைத்தொழில் நூலிழைகள், நெய்யப்பட்ட துணிகள், பிற பொருள்களுக்கு இறக்குமதியையே நம்பி உள்ளது. எகிப்தின் ஆயத்த ஆடை இறக்குமதி 2015ஆம் ஆண்டில் மிக அதிகமான CAGR அதிகரிப்பை (17%) கண்டது. இதன் மதிப்பு 0.2 பில்லியன் அமெரிக்க டாலர். இந்தியாவின் பங்கு இதில் 1% தான். நூலிழை முதற்கொண்டு முற்றாக்கல் வரை உற்பத்தியின் அனைத்து நிலைகளிலும் ஒருங்கிணைந்து செயல்படக்கூடிய மாதிரியைக் கொண்டுள்ளது. உற்பத்தியின் எல்லா நிலைகளிலும் அண்மைக்கால தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

துணி உற்பத்தித் தொழிலின் பெரும்பகுதி பருத்தியை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், சமீப ஆண்டுகளில் செயற்கை நூலிழையினாலான ஆடைகளுக்குத் தேவை அதிகரித்து வருகிறது. செயற்கை நூலிழை இறக்குமதி எகிப்தில் கடந்த 5 ஆண்டுகளில் 5% ஆக இருந்தது. இந்தியா இதில் ஒரு முன்னணி வழங்குநர். 2015ஆம் ஆண்டில் எகிப்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.2% வளர்ச்சி காணப்பட்டது. தொடர்ச்சியான முதலீடுகள் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

முன்னணி சந்தைகளில் ஒன்று துருக்கி. இந்தியாவில்இருந்துசெயற்கைநூலாடைகளை துருக்கி இறக்குமதி செய்து வருகிறது. உள் நாட்டு மூலப்பொருள் உற்பத்தியும், நூல், பின்னலாடை, இழை போன்றவையும் துருக்கியில் போதுமான அளவிற்கு இல்லை. எனவே இறக்குமதியை அதிகம் நம்பியிருக்க வேண்டியுள்ளது. 2015ஆம் ஆண்டில் துருக்கியில் துணிகள், ஆடை இறக்குமதி 2.9 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருந்தது. எனவே துருக்கி நாட்டு சந்தையின் மீது கவனம் செலுத்துவது உகந்தது. துருக்கி சந்தையில் இந்தியாவின் பங்கு தற்போது 2 முதல் 3% ஆகவே இருக்கிறது.

கடந்த ஆண்டுகளில், இந்திய–லத்தீன் அமெரிக்க உறவுகள் வணிகம், முதலீடு ஆகிய

வற்றைக் கடந்த நிலையில் ஆற்றல், அறிவுப் பரிமாற்றம், G20, பிரிக்ஸ், IBSA (இந்தியா, பிரேசில், தென் ஆப்ரிக்கா) போன்ற பொது மன்றங்களிலும் நீடித்து வருகிறது. இந்தியாவும் மெர்க்கோசுரந்த் சிலியும் முன்னுரிமை அடிப் படையிலான வணிக ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளன. இதன் மூலம் இந்திய வணிக சமூகத்திற்கு லத்தீன் அமெரிக்க நாடுகளில் அதிகமான வணிக வாய்ப்புகள் உருவாகியுள்ளன. மெக்சிகோ, பெரு, சிலி ஆகியவை மிக முக்கியமான துணி வணிக முனையங்கள். மிக அதிகமான துணியை இறக்குமதி செய்யும் நாடு மெக்சிகோ. மிக அதிகமான ஆயத்த ஆடைகளை இறக்கு மதி செய்யும் நாடு சிலி, மெக்சிகோ, சிலி, பெரு நாடுகளின் 2015ஆம் ஆண்டு மொத்த இறக்குமதி முறையே 4.16, 3.16, 0.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இந்த நாடு களிலுள்ள உள்ளூர் தொழிற்சாலைகள் போட்டியை குறைத்துக்கொண்டு சீனாவை நம்பி இருப்பதை குறைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றன. இருந்த போதிலும், இந்த நாட்டு சந்தைகளில் சிலியில் இந்தியாவின் பங்கு ஆயத்த ஆடையில் 1% துணிகளில் 4% மெக்சிகோவில் ஆயத்த ஆடையிலும், துணி யிலும் 3% பெருவில் ஆயத்த ஆடை துணி வகைகளில் 2%. இங்கு இந்தியாவிற்கு ஏராள மான சந்தை வாய்ப்பு இருப்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

**வளர்ந்திருக்கும் பிற சந்தைகள்: ஓசியானா, கனடா:**

வளர்ந்த நாடுகளின் பாரம்பரியச் சந்தை களில் மதிப்புகூட்டடப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியில் கவனம் இருக்கும்போது, இந்த வகைப் பொருள்களுக்கான தேவை கனடா வில் குறைந்துள்ளது. சமீபத்திய புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது தொழில்நுட்பத்திறன் மிக்க ஆடைகளின் ஏற்றுமதி 2015ஆம் ஆண்டில் இருந்த 8.6 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 2017இல் 9.3 பில்லியன் டாலராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துறையில் தொழில்நுட்பமும், பயன்பாடும் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கிறது. இதனால் ஏற்றுமதியும் மாற்றம் காண்கிறது. வட அமெரிக்காவில் இத்தகைய ஆடைகள் அதிகமாக வாங்கப்படுகின்றன. இங்கிருக்கும் வாய்ப்புகளை இந்தியா ஆராய வேண்டும். கனடாவிற்கு தொழில்நுட்பத்திறன் மிக்க ஆடைகளை இந்தியா ஏற்றுமதி செய்ய முடியும். இதற்கென பரந்துபட்ட பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (CEPA) ஒன்றிற்கு முன்னெடுப்புகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவின் துணித் தொழிலில் வேகமாக வளர்ந்துவரும் ஒரு பிரிவு தொழில்நுட்பத்திறன் மிக்க ஆடைகளாகும். உலகின் ஒட்டுமொத்த நுகர்வில் 9% அளவிற்கு இவை தற்போது இந்தியாவிலிருந்து வாங்கப்படுகின்றன. இந்தப் பிரிவில் இந்தியச் சந்தையின் பங்கு 2013ஆம் ஆண்டில் இருந்த 11.6 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலிருந்து 26 பில்லியன் அமெரிக்க டாலராக 2017ஆம் ஆண்டில் உயரும் என்று ITA TECHNICAL TEXTILES OF MARKETS REPORT 2016 தெரிவிக்கிறது.

ஆஸ்திரேலியாவில் துணிகள், உடைகள், காலணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பலவிதமானவைகளாக உள்ளன. உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய பலவகைப் பொருள்கள், ஆடைகள், தரை விரிப்புகள், காலணிகள் உற்பத்தித் தொழி லகங்கள் இங்குள்ளன. இவைதவிர கார்களில் பயன்படுத்தப்படும் விரிப்புகள் போன்றவையும் இங்கு தயாரிக்கப்படுகின்றன. ஆயத்த ஆடைப் பிரிவில் ஆஸ்திரேலியாவின் சந்தையளவு தற்போதிருக்கும் 25 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 45 பில்லியன் அமெரிக்க டால ராக 2025ஆம் ஆண்டில் உயரும். இந்தச் சந்தையிலும் இந்தியா தனக்கான சிறப்பான வாய்ப்புகளை தற்போது நடைபெற்றுவரும் CECA பேச்சுவார்த்தைகளின் மூலம் பெருக்கிக் கொள்ள முடியும். ●

# இந்திய நெசவுத் தொழில்: உலக நிலவரம்

– ஆர்.கே.டால்மியா

### அறிமுக உரை:

உலக அளவில் மீட்சி தொடர்ந்தபோதிலும், மெதுவாகவே நகர்கிற, எப்போது வேண்டு மானாலும் சிதைவுறுகிற வேகத்தில் தான் நெசவு ஆடைத்தொழில் இருந்துவருகிறது. உலக வர்த்தகம் 2015ஆம் ஆண்டு மெதுவாகவே வளரத் தொடங்கியது. மிகவும் நலிந்த நேர்மறை வளர்ச்சியான 2.7% என்ற பதிவை உருவாக்கியது. இது உலகத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி வீதத்தில் 2.4% ஆகும். சமீபத்தில் வெளியான உலக வர்த்தக நிறுவன (WTO) ஆய்வறிக்கையின்படி (ஜூலை 2016) இந்த நலிவுக்கு பலவிதமான காரணங்கள் காட்டப்படுகின்றன. சீனாவில் நிலவும் பொருளாதார மந்தநிலை, பொருளாதாரத்தில் பெரிதாக வளர்ந்து வரும் நாடுகளில் ஏற்பட்டுள்ள கடுமை யான பின்னடைவு, எண்ணெய் முதலிய பொருள்களின் விலை வீழ்ச்சி, நாணய மாற்றத்தில் நிலவக்கூடிய ஏற்றத்தாழ்வுகள் போன்றவை இந்தக் காரணங்கள்.

உலக வர்த்தகத்தின் தற்போதைய சூழலைப் பார்க்கும்போது, சில முன்மாதிரிகள் உரு வாகி வருவதைக் காணலாம். WTO அறிக்கை யின்படி இவை குறிப்பிடத்தகுந்த மாற்றங் கள். வர்த்தக வளர்ச்சியின் டாலர் மதிப்பு சரிந்த வேளையிலும் வளர்ச்சி அளவு நிலை யானதாகவே இருந்துள்ளது. உண்மையில் அதிகரிப்பையும் காட்டியிருக்கிறது. விளை பொருள் வர்த்தகத்தில் சரிவு ஏற்பட்டு முற்றாக் கப்பட்ட உற்பத்திப்பொருள்களின் வர்த்தகம் அதிகரித்துள்ளது. ஆசியா உற்பத்தித்தொழிற் சாலை என்ற நிலையில் மாற்றம் ஏற்பட்டு ஆசிய சந்தையிலும் தேவை அதிகரித்துள்ளது.

2015ஆம் ஆண்டு இருந்த சாதகமான வளர்ச்சி இருந்தபோதிலும் உலக வணிகச் சந்தையில் டாலரின் மதிப்பு –13% அளவுக்கு வீழ்ச்சி கண்டதை அடுத்து உலகப் பொருளாதார வளர்ச்சியை பாதித்துவிட்டது. ஏற்றுமதி விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டது.

உலகச்சந்தையில் பலதுறைகளில் மந்தம் நிலவிய போதிலும் நெசவாடைத் தொழில் பிரிவு தோராயமாக 1 சதவீத வளர்ச்சியை 2016 நிதியாண்டில் கண்டிருந்தது. இதே நேரத்தில் உலக நெசவாடை வர்த்தகத்தில் 5% தேக்க நிலை நிலவியதையும் ஒப்பிட்டுக்காண வேண்டும்.

### நெசவாடைத் தொழில்; இந்தியாவும் உலகமும்:

இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும் பாக இருப்பது இந்தத் தொழில். தேசத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில் 4 சதவீதமும், வேலை வாய்ப்பில் 21 சதவீத மும், தொழிற்சாலை உற்பத்தியில் 14 சதவீதமும் இந்தத் தொழிலுக்கு உள்ளது. நெசவாடை உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதி செய்யப்பட்டு 12% அந்நிய செல வாணி ஈட்டப்படுகிறது. கடந்த 15 ஆண்டு களில் 3 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ள இந்தத் தொழில் மூலம் 10 மில்லியன் மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன.

நெய்யப்பட்ட ஆடைகள், துணிகளின் உலக வர்த்தக மதிப்பு 2015இல் 745 பில்லி யன் அமெரிக்க டாலர். ஆண்டுக்கு 6% என்ற CAGR வளர்ச்சி விகிதத்தில் வரும் ஆண்டு களில் இந்தத் தொழில் வளரும் என்று

---

**ஆர்.கே.டால்மியா,** பருத்தித் துணிகள் ஏற்றுமதி அபிவிருத்திக்குழுவின் (Texprocil) தலைவர்.

எதிர்பார்க்கப்படுகிறது. 2020ஆம் ஆண்டில் 1120 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள வர்த்தகமாக உயர்ந்துவிடும். இந்தத் துறையில் உலகம் முழுவதும் 170 மில்லியன் மக்கள் வேலை பெறுவார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் ஆசிய கண்டத்தில் இருப்பார்கள்.

2011–2015 காலகட்டத்தில், துணிகள், ஆடைப்பிரிவில் வளர்ச்சி 0.54% CAGR விகிதத்தில் காணப்பட்டது. 2008–09இல் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக அதன்பிறகு 2014 வரையிலான காலகட்டத்தில் உலக வர்த்தக மீட்சி பெறுவதற்கு ஆசியாவே பங்களிப்பு செய்தது. ஆயினும், உலக அளவில் இறக்குமதிக்கு இருந்த தேவை 2015இல் மித மாகவே இருந்தது. சீனாவும், பிற ஆசிய நாடு களும் பொருளாதார மந்த நிலையில் காணப் பட்டன.

துணிகள், ஆடைகள் ஏற்றுமதியில் 525.38 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருள்களை ஜனவரி 2015 முதல் டிசம்பர் 2015 வரை உலக நாடுகளுக்கு அனுப்பிவைத்த முதல் பத்து தேசங்களின் பங்களிப்பு 70.53%.

2015ஆம் ஆண்டில் இந்தியா 37.22 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு துணிகள், ஆடை ஏற்றுமதியைச் செய்தது. 2015ஆம் ஆண்டின் உலக துணி வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 5% என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

துணிகளின் வர்த்தகத்தில் ஜனவரி 2015 முதல் டிசம்பர் 2015 வரையிலான காலத்தில் 319.35 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு மதிப்புள்ள பொருள்களை உலக அரங்கில் ஏற்றுமதி செய்திருக்கும் முதல் 10 நாடுகளின் பங்களிப்பு 71.21%. 2015இல் மிக அதிகமான ஆடை இறக்குமதி செய்த நாடு அமெரிக்கா வாகும். இதன் மதிப்பு 29.01 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.

ஆடை ஏற்றுமதியில் இந்தியா இரண் டாவது பெரிய நாடாக நீடிக்கிறது. முதலிடம் சீனாவுக்கு. 2015ஆம் ஆண்டில் 20.05 பில்லியன் அமெரிக்க டாலரின் அளவுக்கு வர்த்தகம் செய்து உலக ஆடை வணிகத்தில் 6.28% பங்கு வகிக்கும் நாடாக இந்தியா திகழ் கிறது. ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்த 3வது பெரிய நாடு இந்தியா. 2015இல் 2.88 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருள்கள் இந்தியாவால் ஐரோப்பியாவிற்கு அனுப்பட்டன.

ஆடைகளின் இறக்குமதியில் பலநாடுகள் எதிர்மறை வளர்ச்சிகளை கண்டுள்ளன. வியத்நாம் 19.16 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இறக்குமதி செய்துள்ளது. இது 5.47% இதனை அடுத்து வங்காளதேசம் 8.94 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிற்கு இறக்குமதி செய்திருக்கிறது. இது 5.45%.

இந்த காலகட்டத்தில், இந்தியா 18.64 பில்லி யன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஆடைக் கான பொருள்களை (பைபர்)யும் 11.3 பில்லி யன் அமெரிக்க டாலர் அளவுக்கு பருத்தி ஆடைகளையும் ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியப் பருத்தித்துணிகளுக்கு 46.09%. விழுக் காடு, பருத்தி இழைகளுக்கு (34.05%), கைத்தறி, விசைத்தறிகளில் நெசவிடப்பட்ட துணிகள் (19.86%).

இந்தியாவின் பருத்தித்துணித் தொழில் நீண்ட பல ஆண்டுகளாக ஆரோக்கியமான வளர்ச்சியில் விகிதத்தை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. தொழிற்சாலை உற்பத்தியில் 14% பங்கு இதற்கு உள்ளது. இந்தியா ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 4 விழுக்காடும், ஏற்றுமதி வருவாயில் 13 விழுக்காடும் பங்கு உடையதாக இந்தியா திகழ் கிறது. 45 மில்லியன் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், 60 மில்லியன் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைத்து வருகிறது.

இந்தத் தொழில் 2015–16 நிதியாண்டில் பல சவால்களை தொடர்ந்து சந்தித்தது. உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, பருத்தி போன்ற மூலப்பொருள்களின் விலை யில் ஏற்பட்ட தடுமாற்றங்கள், மின்சாரம்,

எரிபொருள் ஆகியவற்றின் கூடுதல் விலை, ஏற்பாட்டியல் செலவுகள், பரிமாற்றச் செலவு களின் அதிகரிப்பு போன்றவை இந்த சவால் கள்.

சந்தையில் போட்டிபோடும் நாடுகளான வங்காளதேசம், வியத்நாம், கம்போடியா போன்றவை ஒன்றுகூடி ஆடை மையங்களை ஏற்படுத்தியும் ஐரோப்பிய யூனியன், கனடா, ஆஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகள் விலைப்புள்ளிகளின் முன்னுரிமைகளை அறிந்தும் நிதானமான வளர்ச்சியைப் பெறு வதை இந்த காலகட்டத்தில் காணமுடிந்தது.

சில நாடுகளின் இது போன்ற அணுகு முறையினால் இந்தியா, ஆடை சந்தையில் இழப்புகளை சந்திக்க நேர்ந்தது.

### இந்திய நெசவாடைத்தொழில் பற்றி அதிகம் தெரியாத சில உண்மைகள்:

இந்தியாவின் துணி, ஆடைத்தொழில் மிகமிகக் குறைவான நிர்வாக, தேய்மானச் செலவுகளைக் கொண்டது. மற்ற எந்த நாடுகளை விடவும் இது குறைவானது. ஐம்பது ஆண்டுகாலமாக சேகரிக்கப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனை விலைத் தரவுகள் இந்தத் தொழில் நிலைத்து நின்று போட்டியிடுவதற்கு உதவியிருக்கிறது. சீனாவுடன் ஒப்பிடும்போது 30% அதிகமான வேகத்தில் செயல்படும் எந்திரங்களைக் கொண்டு நூல் நூற்பும், நெசவிடலும் இந்தியாவில் செய்யப்படுகிறது. நூல்நூற்பு, நெசவிடல், உற்பத்தி வழிமுறைகள் ஆகியவற்றில் இந்தியாவிற்கு உள்ள செலவுக் குறைவு மற்ற நாடுகளிடம் இல்லாத ஒன்று. இதனைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வர வேண்டும்.

### நெசவாடைத்துறையில் வேலைவாய்ப்பு:

5000க்கும் மேற்பட்ட துணி, ஆடை உற்பத்தி நிறுவனங்கள் 50 கோடி ரூபாய்க்கும் அதிகமான வரவுசெலவு உடையவை. குறைந்த செலவில் வேலை உற்பத்தி இங்கு உள்ளது. பெண் தொழிலாளர்களின் சதவீதம் மிக அதிகமாக இருக்கிறது. மற்ற ஏற்றுமதி பொருள் களை விடவும் இந்தத் துறையில் ஏற்றுமதியில் கிடைக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும், அதிக மான வேலை வாய்ப்பும் அந்நிய செலா வணி ஆதாயமும் கிடைக்கின்றன. வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும் குறிப்பிடத் தகுந்த பங்களிப்பை இந்தத்துறை செய்து வருகிறது. ஒவ்வொரு 1 பில்லியன் டாலர் உற்பத்திக்கும் 25 ஆயிரம் நேரடி வேலை வாய்ப்பும் அந்நிய செலவாணி வருவாயும் இதன்மூலம் கிடைக்கிறது. இந்திய அரசாங்கத்தின் திறன்மேம்பாடு, தொழில் முனைவு அமைச்சகத்தின் அறிக்கையின்படி துணி, ஆயத்த ஆடைகள் உற்பத்தித் தொழில் அரசாங்கத்தின் ‘இந்தியாவின் உற்பத்தி’ (Make in India) முழக்கத்திற்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி பெருமளவில் துணைநிற்கக்கூடிய ஒன்றாக இருக்கப்போகிறது. இந்தப்பிரிவில் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு 2008ஆம் ஆண்டில் இருந்த 33 முதல் 35 மில்லியனில் இருந்து 2022இல் 60 முதல் 62 மில்லியனாக உயரும் என்று இந்த அறிக்கை மேலும் தெரி விக்கிறது.

### பலமும் வாய்ப்புகளும் – ஒரு பகுப்பாய்வு:

இந்திய துணி உற்பத்தித் தொழில் சந்தை யிலுள்ள பிற தொழில்களைக் காட்டிலும் அதிகமான வலிமைகளைப் பெற்றுள்ளது. இந்தியா பருத்தி உற்பத்தியில் உலகில் முன் னணியில் இருக்கும் நாடு. துணி உற்பத்தித் தொழிலுக்கு தேவைப்படும் மூலப்பொருள்கள் குறிப்பாக இயற்கை நூலிழைகளில் இந்திய அதிக அளவு தன்னிறைவு பெற்றுள்ளது. செலவு குறைவான, திறன் மிகுந்த மனித ஆற்றல் எளிதாகக் கிடைக்கிறது. இது, இந்தத் தொழிலின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கிறது. வலுவான தொழில்முனைவு ஆற்றல் இந்திய துணி உற்பத்தித் தொழிலின் முதுகெலும்பாக இருக்கிறது.

பருத்தி நூலிழையின் உலக வர்த்தகத்தில் இந்தியா 29% பங்கு வகிக்கிறது. சிறிய, நடுத்

தர, பெரிய அளவுகளில் இருக்கும் எண்ணற்ற தொழில் அலகுகள் அனைத்து வகையான வணிகத்திற்கும் நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய னவாக உள்ளது. பசிபிக் கடலின் குறுக்காக உள்ள நாடுகளின் பங்காண்மை *(Transpacific Partinership),* அட்லாண்டிக் குறுக்காக உள்ள நாடுகளின் வணிகம் மற்றும் முதலீட்டு பங்காண்மை *(Trans-Atlantic Trade and Investment Partnership (TTIP),* வடஅமெரிக்க கட்டற்ற வணிக ஒப்பந்தம் *(CAFTA)* போன்ற வணிக வட்டாரங்கள் அமைந்திருப்பது உலக வர்த்தக காட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் இந்தியாவின் ஏற்றுமதியில் தாக்கங்கள் ஏற்படலாம். மேலும் சுற்றுச்சூழல் சட்டங்கள், பன்னாட்டு தொழிலாளர் சட்டங்கள் போன்றவற்றை கடுமையாகப் பின்பற்றியாக வேண்டிய நிலைமை இருப்பதும் இந்தத் தொழிலை பாதிக்கக்கூடும்.

சவால்களுக்க்கு மத்தியிலும் வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. விலை அதிகமாக உள்ள முதல்தரமான பொருள்களையும், மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களையும் தயாரிப்பது இத்தகைய வாய்ப்புகளில் அடங்கும். தொழில் நுட்பத்திறன் மிக்க ஆடைகள் உற்பத்தியிலும், புதியன படைக்கும் முயற்சியிலும் நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரும்.

கைத்தறி, கைவினைப் பொருள்களுக்கு சில்லறை வணிக முனையங்களை அதிகரிப்பதும் இந்தத் தொழில் துறைக்கு வாய்ப்புகளை வாரி வழங்கும்.

## முடிவுரை:

20 மில்லியன் விவசாயிகள் பருத்தி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். துணி, ஆடைகள் உற்பத்தித் தொழிலில் 35 மில்லியன் மக்கள் நேரடியாக வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். உள்நாட்டில் விளையும் பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு நடைபெற்று வரும் இந்தத் தொழிலில் கிடைக்கும் ஆதாயங்களின் பலன்கள் இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். தற்போது 108 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ள இந்தத் தொழிலின் மதிப்பை 2023வாக்கில் 300 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த வேண்டும் என்ற பிரதமரின் கனவை நிறைவேற்றிட இந்தத்துறைக்கு வலுவூட்டப்படவேண்டும்.

**இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளில் சில:**

1. ஆராய்ச்சி, வடிவமைப்பு, வளர்ச்சி, சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வலுவூட்ட வேண்டும்.
2. இந்தியாவின் துணி, ஆடை பிராண்டுகளை உள்ளூரிலும், வெளிநாட்டிலும் பிரபலப்படுத்த வேண்டும்.
3. சர்வதேச அளவில் போட்டிகள் மிகுந்துள்ள இந்தத் துறையில் அடுத்த 3 முதல் 5 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 10 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும்.
4. ஐரோப்பிய யூனியன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இந்தியாவின் வணிக ஒப்பந்தத்தை விரைவுபடுத்த பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.
5. இந்தியா தனது உற்பத்திப் பொருள்களின் பற்பல வகை மாதிரிகளை உருவாக்க வேண்டும். இதன்மூலம் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதியை அதிகரிக்க முடியும்.
6. அந்நிய நேரடி முதலீடும், உள்நாட்டு முதலீடுகளும் அதிகரிக்க வேண்டும்.
7. உற்பத்தியின் போது எல்லா நிலைகளிலும் சர்வதேச தரம் பேணப்படவேண்டும். ●

# முடுக்கம் பெறும் இந்திய ஜவுளித்துறை வளர்ச்சி

– டாக்டர் கவிதா குப்தா

**உ**லக அளவில் பார்க்கும்போது இந்திய ஜவுளித்துறைதான், கச்சாப் பொருள் முதல், இறுதி ஆடை வரை நேர்க்கோட்டில் ஒருங் கிணைக்கப்பட்ட துறையாக விளங்குகிறது. வேறுவிதமாகச் சொல்வதென்றால், இழை முதற்கொண்டு கடை வரையில் அல்லது பண்ணை முதற்கொண்டு நவீன பாணி வரை நேர்கோட்டு முறையில் ஒருங்கிணைப்புப் பெற்றதாக இந்திய ஜவுளித்துறை திகழ்கிறது. ஜவுளி உற்பத்தியின் வல்லமையை, ஏற்று மதியைப் பெருக்குவதற்குப் பயன்படுத்திக் கொள்வதில் நாம் சிறந்து விளக்குகிறோம். நம்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்ததாக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் ஜவுளித்துறையில், நேரிடையாக சுமார் 4.5 கோடி பேரும், மறை முகமாக ஆறு கோடி பேரும் ஈடுபட்டுள் ளனர். நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் சுமார் நான்கு சதவீதப் பங்களிப்பு கொண்ட ஜவுளித்துறை, நமது பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியப் பங்காற்றுகிறது. பாரம்பரியமான ஜவுளி உற்பத்தித் திறன்கள், மிகக்குறைவாகவே இறக்குமதியைச் சார்ந் திருக்கும் நிலை, தொழில்நுட்ப அறிவும், திறனும், மேலாண்மை ஆற்றலும் மிக்க தொழிலாளர்கள், நீக்குப் போக்குடைய உற்பத்தி முறைகள், தொடர்ந்து விரிந்து வரும் விற்பனை வாய்ப்புகள், துடிப்பும் வேகமும் கொண்ட தொழில் முனைவோர் போன்ற பல காரணிகள் இந்திய ஜவுளித்துறைக்கு வலுச் சேர்ப்பவையாக உள்ளன. எனினும், ஜவுளித்துறையின் உற்பத்தி தரம், போட்டியிடும் தன்மை ஆகியவற்றைப் பாதிக்கின்ற வேறுசில அனுகூலமற்ற காரணிகளால், வலுவும் பலமும் நீர்த்துப் போகின்றன. பழசாகிப் போய்விட்ட தொழில்நுட்பங்கள், கட்டமைப்பில் உள்ள பேதங்கள், தொழிலாளர்களின் சுமாரான உற்பத்தித்திறன், அரசின் நிதிக்கொள்கையில் உள்ள முரணான போக்குகள், பலமுனைகளில் விதிக்கப்படும் வரிகள் மற்றும் தீர்வைகள், அதிகப்படியான மூலதனச் செலவு, கட்டுப் பாடுகளை விதிக்கின்ற தொழிலாளர் சட்டங் கள் மற்றும் தொழிற்சாலை சட்டங்கள், முனைப் பான விற்பனை முயற்சிகள் இல்லாமை, சுமாரான போக்குவரத்துக் கட்டமைப்பு வசதிகள், அதிகப்படியான மின் கட்டணம் போன்றவை ஜவுளித்துறையை பலமிழக்கச் செய்யும் காரணிகளாக உள்ளன.

இந்திய ஜவுளித்துறை எதிர்கொண்டுள்ள பழசாகிப்போன தொழில்நுட்பம் என்ற பிரச் சினையை, நவீன மயமாக்கம் என்ற தொடர் செயற்பாடுகளால் களைந்துவிடலாம். நவீன மயத்தால், உற்பத்தி பெருகுவதுடன், தரம் மேம்பாடு, உற்பத்திச் செலவு குறைந்து, பரா மரிப்புச் செலவு கட்டுக்குள் வந்து, மின்சாரச் செலவிலும் மிச்சம் ஏற்படும். ஆனால், நவீனமயமாக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்ற ஆலைகள் மட்டுமே நீண்ட காலத்திற்கும் வளர்ச்சியைப் பெறு கின்றன. எப்போதாவது ஏதேனும் ஒரு நவீன மய முயற்சியை மேற்கொள்வதால் நிலையான பயன் கிடைப்பதில்லை என்பதை அனுபவம் நமக்குக் காட்டுகிறது. எனவே ஜவுளித்துறை தனது நீண்டகால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, தொடர் தொழில்நுட்ப நவீன மயத்திற்குப் போதிய நிதியைச் செலவிட வேண்டும்.

இதைக் கருத்தில் கொண்டுதான் 1999ஆம் ஆண்டில், ஜவுளித்துறைக்காக தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியம் திட்டத்தை மத்திய

**டாக்டர் கவிதா குப்தா,** ஜவுளித்துறை ஆணையர், மத்திய ஜவுளி அமைச்சகம்.


அரசு தொடங்கியது. இந்தத் திட்டத்தால் ஜவுளித்துறையில் பல நவீன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை ஆய்வுகள் நிருபிக்கின்றன. குறிப்பாக நூற்பாலைகள் இந்த நிதியத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டுள்ளன. நெசவு, பதனப்படுத்துதல், ஆடைகளாகத் தைத்தல் போன்ற பிரிவுகள் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தைச் சரிவர பயன்படுத்திக் கொள்ள வில்லை. எனவே ஜவுளித் தொழில் துறையில் இந்தப் பிரிவுகள் வலுவற்று உள்ளன.


ஜவுளித்துறைக்கான தொழில்நுட்ப மேம் பாட்டு நிதியத்தின் மூலமாகக் கடந்த 16 ஆண்டுகளில் ரூ.2,71500 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ஜவுளித்துறை வளர்ச்சியை அடுத்த கட்டத் திற்கு எடுத்துச் செல்வதற்காகத் திருத்தப்பட்ட தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியம் கடந்த 2016 ஜனவரி 13ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் ஜவுளித்துறையில் ஆராய்ச்சி களை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி – வளர்ச்சித்திட்டங்களுக்கும் அரசு நிதி உதவி அளிக்கிறது. அடிப்படையான ஆய்வுத் திட்டங்களுக்கு நூறு சதவீத நிதியையும் அரசே வழங்குகிறது. பயன்முறை ஆய்வுகளுக்கு 70 சதவீதமும், ஜவுளித் தொழில் துறையினர் மற்ற நிறுவனங்கள்மூலம் ஒப்பந்த முறையில் மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு 60 சதவீதமும் அரசு நிதிஉதவி அளிக்கிறது.

ஜவுளித்துறையில் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தின் பயன்பாடு பற்றி அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, நிதியம் தொடங்கியதில் இருந்து, 2015 மார்ச் வரை ஜவுளித்துறையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீட்டில் 79%. இந்த நிதியத்தின் மூலமாகவே செய்யப்பட்டுள்ளதெனத் தெரிய வருகிறது.

ஜவுளித்துறையை மேலும் நவீனப்படுத்தவும், இத்துறையில் மேலும் வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும், மத்திய அமைச்சரவை ரூ. 6000 கோடியில் வேலைவாய்ப்புப் பெருக்கம் மற்றும் ஏற்றுமதி அதிகரிப்பிற்கான சிறப்பு உதவித் திட்டம் ஒன்றுக்கு அனுமதி அளித்துள்ளது. இந்த உதவித்திட்டம் தொழிலாளர்களுக்கு நலம் பயப்பதாகவும், பெருமளவில் உற்பத்தி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி, ஏற்று மதியைப் பெருக்குவதாகவும் உள்ளது. இதன்மூலம் அடுத்த முன்றாண்டுகளில் ஜவுளித்துறையில் ரூ. 74 ஆயிரம் கோடி





Note: TUFS black out period (between 28/6/10 to 28/4/11) had an impact on lower share of RTUFS & RRTUFS in overall investments

முதலீடு செய்யப்படுவதுடன் மூவாயிரம் கோடி அமெரிக்க டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி அதிகரிக்கூடும். கச்சாப்பொருள் மற்றும் உற்பத்தி விகிதத்தைப் பொறுத்து முன்பு அளிக்கப்பட்ட ஊக்க உதவி போல் அல்லாமல், உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் அதிகரிக்கிற ஆலைகளுக்க்கு முன்பு இருந்த 15 சதவீத ஊக்கத்தொகை 25 சதவீதமாக உயர்த்தி அளிக்கப்படும்.

ஜவுளித்துறையில், தொழில்நுட்ப ஜவுளிகளுக்கு *(Technical Textile)* இந்தியாவில் மிகச் சிறப்பான வாய்ப்பு உள்ளது. தற்போது நம் நாட்டில் சுமார் 2200 ஆலைகள் மட்டுமே தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இந்தியாவிலேயே இந்த விதமான தயாரிப்புகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. வடகிழக்கு மாநிலங்களிலும், பிற மலைப்பாங்கான பகுதிகளிலும் சாலைகளை வலுப்படுத்தவும், சரிவுகளை ஸ்திரப்படுத்தவும் இடம்சார் – ஜவுளிகளைப் *(Geo Textiles)* பயன்படுத்தவும் வாய்ப்புகள் அபரிமிதமாக உள்ளன. நீர்த்தேக்கங்களில் சுற்றுக் காப்பாகவும், மண் வளம் நிலைப்படுத்தும் உத்திகளிலும், குப்பைக் கிடங்குகளில் பாதுகாப்புக் கவசமாகவும் இடம்சார் – ஜவுளிகள் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இதேபோல்,வேளாண் ஜவுளிகள் *(Agro Textiles)* விளை நிலங்களில் பாசன நீர்த்தேவையைக் குறைக்க உதவுவதுடன், பயிர்களின் தரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன. தற்போது நம் நாட்டில் அதிகமாக வளர்ச்சி கண்டுவரும் மருத்துவ சேவைகள் துறையில் மருத்துவ ஜவுளிகளுக்கும் *(Medical Textiles)* நல்ல தேவை உள்ளது. பாதுகாப்புத்துறையிலும், கட்டுமானத்துறையிலும் தொழில்துறையிலும் கவச ஜவுளிகளுக்கு *(Protective Textiles)* பெருமளவு தேவைகள் உள்ளன. தற்போது நம் நாட்டிற்குத் தேவையான இவைபோன்ற விஷேச ஜவுளித் தயாரிப்புகள் யாவும் பெருமளவிற்கு இறக்குமதியையே நம்பியுள்ளன. இந்த நிலையை மாற்றி, விசேஷ தொழில்நுட்ப ஜவுளிகளை நம் நாட்டிலேயே தயாரிப்பதற்குத் தேவையான முதலீடுகளை அரசு–தனியார் பங்களிப்புடன் மேற்கொள்வதற்கும் அரசு முயன்று வருகிறது.

இதற்கென, தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான தொழில்நுட்ப இயக்கம் என்ற ஓர் இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியது. இதன்கீழ் எட்டு உயர்தர மையங்கள் ஏற்படுத்தப்பட்டன அல்லது மேம்படுத்தப்பட்டன. அவை; வேளாண் நுட்பம் *(SASMIRA)*, மருத்துவநுட்பம் *(SITRA)*, உற்பத்திநுட்பம் *(NITRA)*, புவிநுட்பம் *(ATTRA BTRA)*, தொழிலகநுட்பம் (பிஎஸ்ஜி தொழில்



நுட்பக்கல்லூரி) விளையாட்டுநுட்பம் *(WRA)* நெய்யப்படாதவை *(DKTE),* ஒன்றிணைந்தவை *(ATIRA)* ஆகியன. இந்த மையங்கள் சம்பந்தப் பட்ட பிரிவில் ஆலைகளுக்கு வேண்டிய பரிசோதனை, பயிற்சி, மாதிரி உருவாக்கம் போன்ற சேவைகளை ஒரே இடத்தில் வழங்கு கின்றன.

இந்த உயர்தர மையங்கள், புதிய தொழில் முனைவோர்களுக்குத் தமது தயாரிப்புகளைப் பரிசோதிக்கவும், விளம்பரப்படுத்தவும் குவிய அடைகாப்பு மையங்களை *(Focus Inculation Centres)* ஏற்படுத்தி உள்ளன. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தொழில்நுட்ப ஜவுளி களுக்கு விற்பனை வாய்ப்புகளைக் கண்ட றிய விற்பனை மேம்பாட்டு உதவி வழங்கப் படுகிறது. மேலும் வாங்குவோர் – விற்போர் சந்திப்புகள் ஏற்படுத்தப்படுவதுடன் சர்வதேசக் கண்காட்சிகளில் பங்கேற்கவும் நிதிஉதவி அளிக்கப்படுகிறது.

தொழில்நுட்ப ஜவுளிகளுக்காக தொழில் நுட்ப இயக்கத்தின்கீழ், ஐந்தாண்டுகளில் ரூ. *427* கோடியைச் செலவிட அரசு நிதி ஒதுக்கியுள்ளது. தற்போதுள்ள அல்லது புதிய சாலைத் திட்டங்கள், மலைப்பாதை சரிவுகளை வலுப்படுத்தும் திட்டங்கள், நீர்த்தேக்கங்களின் சுற்றுக் காப்புகள் ஆகியவற்றில் இடம்சார்– ஜவுளிகளைப் பயன்படுத்துவதற்காக இந்த நிதி செலவிடப்படும். மணிப்பூர், மிஜோரம், திரிபுரா, சிக்கிம், அசாம் ஆகிய மாநிலங்களில், மண் சரிவுகளைத் தடுக்கும் வேலைகளில் இடம்சார் – ஜவுளிகளைப் பயன்படுத்துவதற்கான முன்மொழிகள் பெறப்பட்டுள்ளன. இதேபோல வடகிழக்கு மாநிலங்களிலும் ஏனைய சில மாநிலங் களிலும் விவசாயிகளுக்கான மாதிரிவிளக்க மையங்களில் ரூ. *60* கோடி செலவில் வேளாண் ஜவுளிகள் வழங்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகள் நல்ல பலன் தந்துள்ளன.

ஜவுளி ஆலைகள் செறிந்துள்ள பகுதிகளில் முன்னும் பின்னுமான இணைப்புகளைச் செய்வதற்காக, பொதுவில் அனைவரும் பயன்படுத்தக்கூடிய சில வசதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் செயல் முறையின் தொடக்கம் முதல், நவீன பாணி வடிவமைப்பு வரை எல்லாப் பணிகளையும் ஆலைகள் தமக்கு அருகேயே செய்துகொள்ள முடியும்.

மேலும், *74,500* விசைத்தறிகளை மேம்படுத்து வதற்காக ரூ *89* கோடி, குழு உற்பத்திக்



கூடங்களை 44 இடங்களில் ஏற்படுத்த ரூ. 56.5 கோடி மானியம், விசைத்தறிகள் செறிந்துள்ள பகுதிகளில் பொதுவான வசதிகளை ஏற் படுத்த ரூ. 2 கோடி, நூல் வங்கிகளை 29 இடங்களில் ஏற்படுத்த ரூ. 10.37 கோடி, 72 இடங்களில் ஜவுளிப் பூங்காக்களை ஏற்படுத்த நிதிஉதவி எனப் பலவகையிலும் மத்திய அரசு ஜவுளித்துறை மேம்பாட்டுக்காக நிதி உதவி களை வழங்கியுள்ளது.

இவைதவிர சுமார் ஐயாயிரம் நெசவாளர் களுக்கு, அவர்கள் அருகில் உள்ள நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தவும், ஆலைகளைச் சென்றுபார்த்து, வெவ்வேறு விதமான ஜவுளி தயாரிக்கப்படுவதை நேரில் கண்டு, அதைப்போல அவர்களும் பின்பற்றி உற்பத்தித் திறனையும் வருவாயையும் பெருக்கிக் கொள்ளவும் அரசு நிதி உதவி அளித்துள்ளது.

2004ஆம் ஆண்டில் இருந்து விசைத்தறிகளை நவீனப்படுத்துவதற்காக கடன் பெறும்போது 20 சதவீத மானிய உதவியை அரசு வழங்கி வருகிறது. வீட்டில் இல்லாத புதிய தறிகளை நிறுவுவதற்காக 2013ஆம் ஆண்டில் இருந்து விளிம்பு மானிய உதவி 30 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இந்தத் திட்டங்களின்படி அரசு விடுவித்த ரூ.563 கோடியினால், சுமார் 4700 விசைத்தறிகள் நவீன மயமாகி உள்ளது. வீட்டில் இல்லாத சுமார் 50 ஆயிரம் புதிய தறிகள் நிறுவப்பட்டுள்ளன.

எனினும், நிதி மன்றங்களின் உத்தரவுகளைச் செயல்படுத்தும் விதமாக, ஜவுளி ஆலைகள் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாவண்ணம், பொது வாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை உடனடியாக நிர்மாணிக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது, இதுபோன்ற காரணங்களைக் காட்டி அவை நமது தயாரிப்புகளுக்குத் தடைவிதிக்காமல் இருக்கவும் இது அவசியமாகிறது. மேலும் இயற்கை மற்றும் செயற்கை இழைகளின் ஆதாரத்தையும் நமது ஜவுளித் துறையினர் மேம்படுத்த வேண்டும். இந்திய ஜவுளித் தயாரிப்புகளைப் பெருமளவு வாங்கும் வெளி நாடுகளுடன் சர்வதேச வணிக ஒப்பந்தங் களை ஏற்படுத்திக் கொள்ளவும் மத்திய அரசு முயல்கிறது.


சர்வதேச ஜவுளி வணிகத்தில் நீண்ட காலமாகக் மேலோங்கி வந்த சீனா மெள்ளத் தனது பங்கைக் குறைக்கின்ற இந்தச் சூழலில், உலக அரங்கில் வலுவான தடம் பதிக்கும் அரிய வாய்ப்புத் தற்போது இந்திய ஜவுளித்துறைக்குக் கிடைத்துள்ளது. தொழிலாளர்களுக்குக் குறை வான ஊதியம், குறைந்த மின் கட்டணம், மேலை நாடுகளுடனான அன்னிய வணிக ஒப்பந்தத்தால் கிடைக்கும் கூடுதல் சலுகை போன்ற காரணங்களால், ஜவுளி உற்பத்தி ஆப்பிரிக்க நாடுகளுக்கு மாறிவிடக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே இந்தியா சுதாரித்துக்கொண்டு முனைப்பாகக் களத்தில் இறங்க வேண்டும். இல்லை என்றால், இந்திய ஜவுளிகளுக்கான விற்பனை வாய்ப்புகளையும் வாடிக்கையாளர்களையும் பங்களாதேஷ், வியட்நாம், கம்போடியா, இலங்கை, மலேஷியா போன்ற வளரும் நாடுகள் தட்டிப் பறித்து விடக்கூடும். ●

# ஜவுளித்துறையின் போக்குகள் 2016/17

– அஞ்சு மோடி

**மே**லும் மேலும் முன்னேறிச் செல்லும் போது, கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற வலியுறுத்தலை நான் உணர்வது என்பது ஒரு முரணான விஷயமாகும். எவ்வளவு பின்னோக்கி நான் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியுமோ அந்தளவுக்குப் போய் பார்த்தால், நம்முடைய நாட்டின் மதிப்பிட முடியாத கலாச்சார மரபுச் செல்வத்தால் நான் முடிவற்று அகத் தூண்டுதல் பெற்றிருந்து இருக்கிறேன் என் பதும் தெரியும். அந்தக் கலாச்சார மரபின் அழகு மற்றும் உயிர்த்துடிப்பைக் கிரகித்துப் பாதுகாக்குமாறு வலியுறுத்தப்படுவதை நான் உணர்ந்துள்ளேன். என்னுடைய வாழ்க்கையின் கடந்த 25 ஆண்டுகளில், இந்தக் கடினமான முயற்சிதான் என்னை நமது நாட்டின் பல இடங்களுக்கும், தொலைதூர கிராமங்களுக்கும், பல்வேறு சமுதாயத்தினரிடமும் என்னைப் பயணம் செய்ய வைத்தது. இந்தப் பயணம் எனக்கு கைவினைக் கலைஞர்களின் ஜவுளி நெசவு மற்றும் பாராம்பரிய உத்திகளைக் கற்றுக் கொள்ளச் செய்தது. அடிப்படையான நெசவு முதல் இயற்கைச் சாயம் தோய்ப்பு, பிளாக் அச்சிடல் மற்றும் பூவேலைத் தையல் உத்திகள் வரை என்னைக் கற்றுக் கொள்ளச் செய்தது. ஸ்டைல் மற்றும் வடிவமைப்பில் உருவாகிவரும் போக்குகள் பற்றியும் கற்றுத் தந்தது.

நமது வடிவமைப்பு பாரம்பரியத்தின் அழகு என்பதற்கு காலஎல்லையே இல்லை என்பது தான் முற்றிலும் தெளிவாகத் தெரியும் விஷய மாகும். ஆனால் இன்றைய உலகில், கலாச்சாரம் மற்றும் வடிவமைப்பின் எல்லைகள் கறாராகத் தெரியாத நிலை அதிகரித்து வருகின்றது. இத்தகையச் சூழலில் இந்திய வடிவமைப்பு நிபுணர்கள் நமது ஜவுளித்துறையையும்



ஆடைகளையும் சர்வதேச அளவில் நிலைக்கக் கூடிய அளவில் பாரம்பரிய அணுகுமுறைகளை மறுவாசிப்பு செய்து மறு கண்டுபிடிப்புக்கு உள்ளாக்குகின்றனர். இதில் இந்திய சாராம்சத்தை விட்டுக் கொடுப் பதே இல்லை. இதுதான் என்னைக் கைத்தறி நெசவுத் துணிகளை அதிக அளவில் பயன் படுத்தச் செய்தது. மேலும் என்னுடைய வடிவமைப்புகளில் மரபார்ந்த மேற்பரப்பு பரிசோதனைகளைச் சாத்தியமாக்கியது. அதே சமயம் நிகழ்கால ஆடைதரும் தோற்றத்தை இன்னமும் செதுக்குவதன் மூலம் நவீன அழகியலைக் கைக்கொண்டு செயல்படவும் செய்தது.

---

**அஞ்சு மோடி,** இந்திய நாகரிக ஆடை வடிவமைப்பு குழு (FDCI) ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர்.

எனவே, 2016/17ல் எதிர்பார்க்கப்படும் ஜவுளி என்பது இயக்கவியல் தன்மை கொண்ட தாகவும் பழையதை புதியதோடு இணைப் பதாகவும் இருக்கும். செவ்வியல் மையக் கருத்துகள் மற்றும் வடிவமைப்புகள் பற்றிய புதிய விளக்கவுரையோடு இது இருக்கும். ஜவுளி வடிவமைப்பில் முக்கிய போக்குகள் சில இங்கே தரப்பட்டுள்ளன.

**வண்ணங்கள்**

நமது நாடு என்றாலே வண்ணங்கள்தான். 2016/17 ஆம் ஆண்டிலும் அந்தச் செறிவைக் கொண்டாடும் போக்கு தொடர்கிறது. இந்திய வடிவமைப்புஎப்போதும் இயற்கையின் அகத் தூண்டலில் இருந்து உருவாக்கப்படுவதுதான். எனவே 2016/17க்கான மையக் கருத்து "இலைப்" பச்சையின் புத்துணர்ச்சி மற்றும் "தாமரை"யின் இளஞ்சிவப்புதான் அழகு என்ப தாகும்.. அதே போன்று பிற புவிக்கூறுகளும் அதாவது எடுப்பான காவி நிறம் மற்றும் தேன்/கோதுமைத் தவிட்டு நிறமும் கவனம் பெறுகின்றன. மனப்போக்கு என்பது மகிழ்ச்சி மற்றும் ஆற்றலாகும். இந்த நிறங்களைத் தவிர ஜவுளிக்கான நிற அமைப்புகளில் ஒற்றை நிறம் எப்போதும் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளது.





**நெசவுப் பொருட்கள்**

பாய்ஜிராவ் மஸ்தானி திரைப்படத்துக்காக ஆடை வடிவமைப்பு குறித்து ஆராய்ச்சி செய்யும் போது காதித் துணியில் 500 வகைகள் இருப்பதை அறிந்து ஆச்சரியத்தில் உறைந்து விட்டேன். இந்தக் கண்டுபிடிப்பு என்னை உணர்ச்சியின் உச்ச நிலைக்குக் கொண்டு சென்று விட்டது. ஏனெனில் நமது நாட்டின் கைவினைப் பொருட்களில் வெளிப்படும் சிறப்பான தொழில்நிபுணத்துவத்தை இக் கண்டுபிடிப்பு மீண்டும் உறுதி செய்வதுதான். ஆடை தயாரிப்பில் காதி இப்போது மீண்டும் புத்துயிர்ப்பு பெற்று வருகின்றது. பலரும் விரும்பக் கூடிய துணி என்ற போக்கு அதிகரித்து வருகின்றது. நெசவு மேற்பரப்புக்கான போக்கு 2016/17 ஆண்டுக்கு மெல்லியது என எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் பழமை யான ஃபினிஷ் இருக்க வேண்டும். பல இழைகள் சேர்க்கப்பட்ட கலவை, அதாவது பருத்தியும் பட்டு இழையும் சேர்க்கப்பட்டது அல்லது பருத்தியும் மரக்கூழ் இழையும் சேர்க்கப்பட்டது தொடர்ந்து பிரபலமாகி வருகின்றது. தற்காலத்திய உபயோக முறைகள்

இழைமம் மற்றும் விவரணை ஆகியவற்றைத் தாங்கி நிற்கும் வலிமையையும் நீண்ட நாள் பயன்பாட்டையும் இந்த உத்தி பழமையான கைத்தறி நெசவுகளுக்குத் தருகின்றது. கடந்த காலத்தை நவீனத்துவத்துக்குத் திருப்பிக் கொண்டு வருதல் என்பது கவனம் பெறுகின்றது. அதாவது பழமையான துணிகளுக்கு நவீன தோற்றம் அளித்தல் ஆகும். மெலான்...” (பல வகையான நிறக் கலவை கொண்ட துணி) என்பதும் 2016/17ன் முன்னணி போக்காக உள்ளது. இது பலவகை நிறங்களைக் கொண்ட இழைகளைச் சேர்த்து உருவாக்கப்பட்ட துணியாகும். இது ஒரு வண்ணக்கலவை விளைவை ஏற்படுத்தி ஆடைகளுக்கு உள்ளடங்கிய நிறத் தோற்றத்தையும் இயல்பான அதிர்வையும் தருகின்றது.

**வடிவமைப்பு**

பழஞ்சிறப்பு முனைப்புக் கருத்துகளோ நவீனகால, வடிவவியல் சார்ந்த குறுக்குக் கோடுகள் அல்லது நீள் வரிகள் கலந்து இருப்பதுதான் 2016/17ன் போக்காகும். இயற்கை, “ஷிக்கார் கா ஜால்” மற்றும் “மயில்”, “கிளி” போன்ற இந்தியப் பறவைகள், மலர்கள், இயற்கையின் இதரக் கூறுகள் ஆகியவற்றிடம் இருந்து மீண்டும் இந்த முனைப்புக் கருத்துகள் பெறப்படுகின்றன. இவையே சிறந்த வடிவமைப்பு போக்குகளாக உள்ளன. சங்கனேரி, பாக்ரு, அஜ்ராக் போன்ற இந்திய வடிவமைப்புச் சின்னங்கள் தொடர்ந்து அதிகமாக பிரபல்யம் அடைந்து வருகின்றன. எங்கும் இவை காணக்கிடைக்கின்றன. ஆடைகள், ஆடைகளுக்கான பொருட்கள், வீட்டு அலங்காரங்கள் அனைத்திலும் காணப்படுகின்றன. செவ்வியலுக்குத்தான் முக்கியத்துவம் இருக்கிறது. செறிவான அலங்காரக் கூறுகள் நவீன மற்றும் சர்வதேச அழகியலுக்காக மறுவாசிப்பு செய்யப்படுகின்றன. ●




# இந்தியாவில் ஜவுளித்துறை மேம்பாட்டுக்கான ஒரு உத்தியாக தொழிலகத் தொகுப்பு அணுகுமுறை

– டாக்டர் ஏ.கே.கிருஷ்ணகுமார்

### *1). சர்வதேச ஜவுளி வர்த்தக நிலை: ஒரு மீள்பார்வை*

*அ). கடந்த பத்தாண்டுகளில் உலக ஜவுளித் தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சி என்பது பலஇிழை ஏற்பாடு (எம்.எஃப்.ஏ) என்ற முறையை படிப்படியாக நீக்குதல் என்ற செயலால் தாக்கம் பெற்றிருந்தது. இந்த எம்.எஃப்.ஏ முறை சர்வதேச வர்த்தகத்தில் ஒவ்வொரு நாட்டுக்கும் நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடுகளைச் செய்தது. இதனை நீக்குதல் என்பது ஜவுளித்துறை மற்றும் ஆடைகள் வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனெனில் குறைந்த உற்பத்திச் செலவுடன் குறிப்பாக உழைப்பாளர்க்கு குறைந்த சம்பளத்துடன் உள்ள உற்பத்தி மையங்களுக்கு ஆர்டர்கள் அளிக்கப்பட்டதுதான் காரணமாகும். பெரிய அளவிலான பிராண்டுகள் ஆசியப் பகுதியில் உள்ள குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் நாடுகளைத் தமக்காக உற்பத்தி செய்து தரச் சொல்லிக் கேட்டுக் கொண்டன (அவுட் சோர்சிங்).*

*ஆ).இத்தகைய அபிவிருத்திகள் ஜவுளித்துறை மற்றும் ஆடைகள் பிரிவில் சர்வதேச மதிப்புத் தொடரின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகள் வடிவமைப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் சில்லறை விற்பனை போன்ற அதிக மதிப்புள்ள நிலைகளில் கூடுதல் கவனம் செலுத்தின. அதே சமயம் சீனா, இந்தியா, வங்கதேசம் மற்றும் வியட்நாம் போன்ற வளரும் நாடுகள் மதிப்புத் தொடரில் உற்பத்தி என்ற அம்சத்தில் கவனம் செலுத்தின. ஒதுக்கீடு முறை 2005 ஆம் ஆண்டில் நீக்கப்பட்ட பிறகு, ஜவுளி மற்றும் ஆடைகளுக்கான உலக வர்த்தகம் 6% அதிகரித்தது. 2004ல் 454 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இந்த வர்த்தகம் 2013ல் 766 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது. இன்று வளரும் நாடுகளும் வளர்ச்சி மிகக் குறைவாக உள்ள நாடுகளும் ஜவுளி மற்றும் ஆடைகளுக்கான உலக ஏற்றுமதியில் 70% பங்கை வகிக்கின்றன. சர்வதேச ஜவுளி வர்த்தகச் சந்தையில் ஏறத்தாழ 75% ஐரோப்பா, அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் நாடுகள் பெற்றுள்ளன. (படம் 1 – 2)*

***39 ஜவுளி பூங்காக்களை நடைமுறைப் படுத்துவதற்காக ஜவுளி அமைச்சகம் ஐ.எல்.–எஃப்.எஸ். கிளஸ்டர் டெவெலப் மெண்ட் இனிஷியேடிவ் லிமிட்டை செயல்திட்ட நிர்வாக ஏஜென்சியாக நியமித்துள்ளது.***


*ஆதாரம்: உலக ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் வர்த்தகம் 2015 குறித்த உலக வர்த்தகக் கழகத்தின் அறிக்கைகள்*

*இ) எதிர்காலத்தைப் பார்க்கும் போது ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச ஜவுளி வர்த்தகம் குறைந்தபட்சம் 6% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி 2025ஆம் ஆண்டு 1,600 பில்லியன் அமெரிக்க டாலராக வர்த்தகம் அதிகரித்து இருக்கும். ஆயத்த ஆடைகளுக்கான வளர்ச்சி விகிதமும் அதிகமாகவே இருக்கும். வளரும் நாடுகளுக்கும் வளர்ச்சி மிகக் குறைவாக உள்ள நாடுகளுக்கும் தங்களது ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் மதிப்பு கூட்டலை அதிகரித்துக் கொள்ளவும் இந்த வளர்ச்சி போதுமான வாய்ப்புகளைத் தருகின்றது.*

### *2). இந்தியாவில் ஜவுளித்துறை*

*அ). சர்வதேச ஜவுளிச் சந்தையில்*

**டாக்டர் ஏ.கே.கிருஷ்ண குமார்,** ஐ.எல்.–எஃப்.எஸ். கிளஸ்டர் டெவெலப்மெண்ட் இனிஷியேடிவ் லிமிட்டின் செயல் இயக்குனராக உள்ளார்.




படம் 1: ஜவுளிக்கான உலக ஏற்றுமதியில் பங்கு


இந்தியா மிக முக்கியமான இடத்தை வகித்து வருகின்றது. உயரிய இயற்கை வளத்தின் அடிப்படை மற்றும் பொதுப் போக்கிற்கு எதிரான தனித்தன்மை மிக்க திறன்களால் இந்தியா ஜவுளி வர்த்தகத்துக்கு சிறப்பான பங்காற்றி வருகின்றது. இதனைக் கீழ்வரும் உண்மைகள் நிரூபிக்கும்:

- பட்டு மற்றும் பருத்தி உற்பத்தியில் உலக அளவில் இரண்டாம் இடம்.
- உலக அளவில் இரண்டாவது மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி நாடு.
- உலகச் சந்தையில் 63% பங்கு என்ற நிலையில் அதிக அளவு நெசவுத் தறி திறன்.
- உலக ஸ்பின்டில்களில் (சுழன்று நூலைத் திரிக்கும் தண்டு) 24% மற்றும் உலக ரோட்டார்களில் (இயந்திரச் சுழற்பகுதி) 8% உள்ள நாடு.
- செலவு குறைந்த தொழில்திறன் கொண்ட மனிதவளம் மற்றும் எஸ்.எம்.இக்களுக்கு ஜவுளித் துறையில் அரசு தரும் மான்யங்கள் போன்ற பொருளாதார ரீதியில் பல சாதக அம்சங்கள் உள்ள நாடு

ஆ). உள்நாட்டு ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் தொழிலானது 2014ஆம் நிதி ஆண்டில் 99 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற நிலையில் இருந்து 2023ஆம் நிதி ஆண்டில் 223 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கும் என முன்மொழியப்பட்டு உள்ளது. இதேபோன்று ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி 2014ன் நிதியாண்டில் 40 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்து 2023ன் நிதியாண்டில் 220 அமெரிக்க டாலராக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் மொத்த ஜவுளி ஏற்றுமதியில் ஆயத்த ஆடை ஏற்றுமதியின் பங்கு 40% ஆகும்.

இ). இந்தியப் பொருளாதாரத்துக்கு ஜவுளித் தொழிலின் அவசியத்தைக் கீழ்வரும் அம்சங்களுக்கு அது ஆற்றும் பங்களிப்பைக் கொண்டு அறியலாம்:

- நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாயில் 13%.
- மொத்த தொழிலக உற்பத்தில் 14%.
- வேலைவாய்ப்பு: வேளாண்மைக்கு அடுத்த வேலைவாய்ப்பு அளிக்கும் இருபெரும்




படம் 2: ஆயத்த ஆடைகளுக்கான உலக ஏற்றுமதியில் பங்கு

துறை. நேரடியாக 45 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது; மற்றும்

- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி) 4%.

ஈ). பருத்தி, சணல், பட்டு, கம்பளி போன்ற இயற்கை இழைகள் முதல் பாலியெஸ்டர், மரக்கூழ் இழை, நைலான், அக்ரெலிக் போன்ற செயற்கையான மனிதன் தயாரித்த இழைகள் வரை பல வகைகளில் வலுவான உற்பத்தி அடித்தளம் இருப்பதால் சந்தையில் போட்டியை எதிர்கொள்வதற்கான பல சாதக அம்சங்களை இந்தியா பெற்றிருக்கிறது. அதே போன்று குறைந்த உற்பத்திச் செலவு, குறைந்த செலவில் தொழிலாளர் மற்றும் சாதகமான அரசுக் கொள்கைகள் ஆகியனவும் போட்டியை எதிர்கொள்ள உதவுகின்றன. ஜவுளிதுறைக்குள்ளேயே ஆயத்த ஆடைகள் பிரிவு அதிகபட்ச மதிப்புக் கூட்டலைத் தருகின்றது. அதுமட்டுமின்றி வேலைவாய்ப்பு தருவதிலும் அதிகப் பங்களிப்பைச் செய்கின்றது. மேலும் ஆயத்த ஆடைகள் பிரிவு பெண்கள் வேலை செய்வதற்கு ஏற்ற வகையில் உள்ளது. எனவே சமூக இயங்கியலை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கினையும் ஆற்றுகின்றது. கைத்தறிகள், கைவினை மூலம் அச்சிட்ட ஜவுளி, பட்டு நெசவு, புடவைகள் முதலான பல வலுவான முக்கியப் பிரிவுகளைக் கொண்டதாக ஜவுளித் தொழில் விளங்குகின்றது. இவை நாடு முழுவதிலும் பல்வேறு தொகுதிகளாகச் செயல்பட்டு வருகின்றன.

உ. நடுத்தர மற்றும் பெரிய நூற்பாலைகள், பல்வேறு எஸ்.எம்..க்களைக் கொண்டுள்ளன. அங்கும் இங்குமாக சிதறி இருக்கின்ற நெசவுப் பிரிவு, போதுமான அளவு முதலீடு செய்யப்படாத பதப்படுத்துதல் பிரிவு, வேகமாக வளர்ந்து வரும் ஆயத்த ஆடைப் பிரிவு என பலப் பிரிவுகளைக் கொண்ட தொழிலகத் தொகுப்பாக இந்திய ஜவுளித் தொழில் அமைப்பு இயங்கி வருகிறது. மதிப்பீட்டுத் தொடரில் அல்லது உற்பத்திப் பொருள் அம்சங்களில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட கூறில் இவை வல்லமை கொண்டவையாக இயங்குகின்றன. அவை கீழே காட்டப்பட்டுள்ளன (அட்டவணை 1)

ஊ). ஜவுளித் தொழில் குஜராத், மகாராஷ்டிரம், தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களில் மேலாதிக்கம் பெற்றுள்ளதை மேலே

## அட்டவணை 1: இந்தியாவில் ஜவுளித்தொழில் தொழிலகத் தொகுப்புகள்

| அமைவிடம் | மாநிலம் | முக்கிய அம்சங்கள் |
|---|---|---|
| சூரத் | குஜராத் | • செயற்கை இழை சார்ந்தது<br>• நெசவு - பதப்படுத்துதல் |
| இச்சல்கரஞ்சி | மகாராஷ்டிரம் | • பருத்தி இழை சார்ந்தது<br>• நெசவு |
| திருப்பூர் | தமிழ்நாடு | • பருத்தி<br>• பின்னுதல், நெசவு, பதப்படுத்துதல்<br>• பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் மேலாதிக்கம் |
| பிவாண்டி | மகாராஷ்டிரம் | • பருத்தி<br>• நெசவு |
| லூதியானா | பஞ்சாப் | • செயற்கை இழை - பருத்தி<br>• செயற்கை இழைப் பின்னலாடைகள் மற்றும் கம்பளி ஆடைகளைத் தயாரிப்பதில் வல்லமை |
| பாலி/பலோட்ரா | ராஜஸ்தான் | • செயற்கைஇழை<br>• பதப்படுத்துதல் |
| கொல்கத்தா | மேற்குவங்கம் | • பருத்தி / செயற்கை இழை - குழந்தைகள் ஆடைத் தயாரிப்பதில் வல்லமை |
| பெங்களூர் | கர்நாடகம் | • பருத்தி / செயற்கை இழை<br>• ஆடைகள் |
| அகமதாபாத் | குஜராத் | • பருத்தி<br>• நெசவு, பதப்படுத்துதல், ஆடைகள்<br>• டெனிம் |
| சோலாப்பூர் | மகாராஷ்டிரம் | • பருத்தி<br>• படுக்கைவிரிப்புகள் / டெர்ரிடவல் |
| கரூர் | தமிழ்நாடு | • பருத்தி<br>• வீட்டு அலங்கரிப்பு துணிகள் |

உள்ள அட்டவணை காட்டுகின்றது. ஒருங்கிணைந்த மதிப்புத் தொடர் அனைத்தையும் உள்ளடக்கிய தொழிலகத் தொகுப்பு / அமைவிடம் ஏதும் இல்லை.

### இந்திய ஜவுளித் தொழில் - சர்வதேச போட்டியின் தன்மை

அ). ஜவுளி – ஆயத்த ஆடைகள் வர்த்தகத்தில் 36.13% பங்குடன் சீனா உலகத் தலைவராக முதலிடத்தில் இருக்கிறது. 5.13% பங்குடன் இந்தியா இரண்டாம் இடத்திலும் 4.39% பங்குடன் வங்கதேசம் மூன்றாவது இடத்திலும் உள்ளன. வியட்நாம் இத்துறையில் வேகமாக வளர்ந்து வருகின்றது. அது 3.71% பங்குடன் ஆறாவது இடத்தில் உள்ளது. ஆனால் ஆயத்த ஆடைகளை மட்டும் எடுத்துக் கொண்டால் உலக வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 4.33% மட்டுமே ஆகும். அதாவது இந்தியா இதில் 5வது இடத்தில் உள்ளது. சர்வதேச ஆயத்த ஆடை வர்த்தகத்தில் வங்கதேசம் இரண்டாவது இடத்திலும், வியட்நாம் மூன்றாவது இடத்திலும், இத்தாலி நான்காவது இடத்திலும் என இந்தியாவிற்கு மேலே உள்ளன.

ஆ). குறைவான செலவில் தொழிலாளர் என்ற அம்சத்தைத் தாண்டி மூலவளங்கள் கிடைப்பது, தற்போதைய சூழலியல் அமைப்பு, தொழில்முனைவோரின் தொழில் திறன்கள் போன்ற உள்ளார்ந்த வலிமைக் கூறுகள்

இருந்தாலும் கூட மதிப்பு கூட்டப்பட்ட விற்பனைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் பிற நாடுகளுடன் இந்தியா போட்டிபோட வேண்டியிருப்பதையே மேலே உள்ள உண்மைகள் எடுத்துக்காட்டுகின்றன. எதிர் காலத்தைப் பார்த்தோமானால் சர்வதேச ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் வர்த்தகத்தை வடிவமைப்பதில் எஃப்.டி.ஏக்கள் மிகப்பெரிய பங்கினை ஆற்றும் என எதிர் பார்க்கப்படுகின்றது. வங்கதேசம், வியட்நாம், கம்போடியா, மத்திய அமெரிக்க நாடுகள் மற்றும் சப்சகாரன் ஆப்பிரிக்க நாடுகள் போன்ற சில குறிப்பிட்ட நாடுகளின் பொருளாதாரங்களுக்கு மட்டுமே ஆதரவு அளிப்பது போன்று எஃப்.டி.எவின் இலக்குள் உள்ளன. எனவே ஆயத்த ஆடை வர்த்தகத்தில் தனது பங்கை அதிகரிக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது. ஜவுளித் தொழிலின் அனைத்து பிரிவுகளிலும் சர்வதேச அளவில் முன்னணி பங்காற்றும் நாடாக இந்தியா உருவாக மதிப்புக் கூட்டல் தொடரில் உள்ள இடைவெளிகள் நிரப்பப்பட்டாக வேண்டும். இது கணிசமான வாய்ப்புகளை பெற்றுள்ளது.

### *(3). ஜவுளிக்காக தொழிலகத் தொகுப்புகள்*

*அ).* அதிக அளவில் எஸ்.எம்.இக்கள் இயங்கும் நெசவு மற்றும் ஆயத்த ஆடை போன்ற முக்கியமான பிரிவுகள் உதிரிகளாகச் செயல்படும் தன்மையைத்தான் இந்திய ஜவுளித் துறை கொண்டுள்ளது. இதற்கு மில்களைப் பன்முகப்படுத்தி அதிகாரப் பரவலாக்கியதுதான் முன்மையான காரணம் ஆகும். இதனால் புதிய தொழில்நுட்பங்களுக்கு அவற்றால் முதலீடு செய்ய முடியவில்லை. சிறிய தொழில் அலகுகளின் குறைவான அத்தியாவசியத் தேவைகள் அவற்றுக்கு செலவில் சாதகங்களை ஏற்படுத்தித் தந்தன. மேலும் எஸ்.எம்.இக்களுக்கு பல அரசுத் திட்டங்கள் மூலமான மூலதன மானியங்கள் அவற்றை சந்தையில் போட்டியைச் சமாளிக்கும அளவுக்கு மாற்றின. இதனால், தனித்தனி வேலை அடிப்படையில் நெய்யப்பட்ட / பின்னப்பட்ட துணிகளை வர்த்தகர்கள் பெற்றுக் கொள்ளும் முறையில் நெசவுப் பிரிவு செயல்பட்டது. மிகப்பெரும் நிறுவனங்கள் தங்களுக்காகத் தயாரித்துத் தரச் சொல்லி மூலப்பொருட்கள் மற்றும் அழகு சேர்க்கும் பொருட்கள் ஆகியவற்றைத் தந்து தனித்தனி வேலை அடிப்படையில் தைத்து திரும்ப வாங்கிக் கொள்ளும் முறையில் ஆயத்த ஆடைப்பிரிவு செயல்பட்டது.

*ஆ).* பன்முகப்பட்ட அதிகாரப் பரவல் கொண்ட விசைத்தறிப் பிரிவை நெசவுப் பிரிவில் எஸ்.எம்.இக்கள் அடையாளப்படுத்தின. இந்தப் பிரிவில் *5.40*லட்சத்திற்கும் அதிகமாக விசைத்தறி அலகுகள் உள்ளன. மொத்தமாக *24.69* லட்சம் விசைத்தறிகள் உள்ளன. துணி உற்பத்தியில் விசைத்தறிகளின் பங்கு *60%* ஆகும். *62* லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை இப்பிரிவு உருவாக்கித் தந்துள்ளது. இந்தப் பிரிவில் தொழில்நுட்ப நிலை பல வகையானதாக உள்ளது. எளிமையான தறி முதல் நெசவுத்தறி நாடா இல்லாத தறிகள் வரை தொழில்நுட்பம் பலதரப்பட்டதாக இருக்கிறது. இப்பிரிவில் தோராயமாக *1.25* லட்சம் நெசவுத்தறி நாடா இல்லாத தறிகள் உள்ளன. நெசவுத்தறி நாடா இல்லாத தறிகளில் *75%*க்கும் மேல் பழையதாகி விட்டன. *15* ஆண்டுகளுக்கும் மேல் இயங்கி காலத்துக்கு ஒவ்வாததாக மாறி பழமைச் சின்னங்களாக மாறிவிட்டன. இருந்தபோதிலும் கடந்த *78* ஆண்டுகளில் விசைத்தறியில் தொழில்நுட்ப நிலையில் குறிப்பிடத்தக்க அளவு மேல்நிலையாக்கம் நடந்துள்ளன. கடந்த *8* ஆண்டுகளில் புதிதாகச் சேர்க்கப்பட்ட *5.45*லட்சம் விசைத்தறிகளில் சுமார் *1*லட்சம் தறிகள் நெசவுத்தறி நாடா இல்லாதவை ஆகும்.

*இ.* விசைத்தறி பிரிவில் இருப்பது போலவே ஆயத்த ஆடைப் பிரிவிலும் (ரெடிமேட் தயாரிப்பு) எஸ்.எம்.இக்களின் விகிதாச்சாரம் அதிகம் ஆகும். பெரிய அளவு பிராண்டுகள், சில்லறை விற்பனையாளர்கள், அதேபோன்று ஏற்றுமதியாளர்கள் ஆகியோருக்கு தனித்தனி வேலை அடிப்படை என்ற முறையில் இப்பிரிவு இயங்குகிறது.

*ஈ).* நெசவு மற்றும் ஆடைகள் பிரிவில் அதிக எண்ணிக்கையில் தொழிலக அலகுகள் இருப்பதுதான் இந்திய ஜவுளித் துறையின்

குறிப்பிடத்தக்க வகை மாதிரியாகும். அதிக அளவிலான மானியங்கள், தொழிலாளர் சட்டங்கள் போன்ற இதர அமைப்பு சார்ந்த பிரச்சனைகள், பெரிய ஆலைகள் நிதி மற்றும் நிலம் போன்ற மூலவளங்களைக் கையகப் படுத்துவதில் உள்ள சிரமங்கள் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும் போது எஸ்.எம்.இக்கள் ஜவுளித் துறையில் முக்கியமான பங்கைத் தொடர்ந்து ஆற்றும் எனத் தெரிகின்றது.

உ). எம்.எஃப்.ஏ 2005ஆம் ஆண்டில் நீக்கப் பட்ட பிறகு, ஜவுளித் துறையில் சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகளுக்காக முதலீடு செய்ய வேண்டிய அவசரத் தேவை உள்ளது. எஸ்.எம்.இக்களால் மேலாதிக்கம் செய்யப் படும் இத்துறையில் தொழிலகத் தொகுப்புகள் அணுகுமுறை மிகச் சிறந்த வாய்ப்பாக இருக்கும். ஏனெனில் இந்த அணுகுமுறை மூலம் நாட்டில் ஜவுளித் துறையின் முன்னேற் றத்துக்கு உலகத் தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்யும் சர்வதேச ரீதியில் வலியுறுத்தப்படும் தர அளவுகளைப் பின் பற்றிச் செயல்படவும் உதவும்.

### (4). ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்களுக் கான திட்டம்

அ). இந்திய அரசின் ஜவுளி அமைச்சகம் 1999ல் தொழில்நுட்ப மேல்நிலையாக்கல் நிதித் திட்டம் (டி.யூ.எஃப்.எஸ்) ஒன்றை அறிமுகப் படுத்தியது. போட்டி விகிதங்களில் கடன் வசதியுடன் இத் தொழிலுக்கு கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டன. உள்கட்டமைப்பு வசதி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திக்கான தொழிலகத் தொகுப்புகள் திட்டத்தை ஜவுளி அமைச்சகம் தொடங்கியது. இத்திட்டங்களில் உள்ளூறையாகவே பல பின்னடைவுகள் இருந்தன. இத்தகைய பின்னடைவுகள் திட்டத் தின் அமலாக்கத்தைப் பாதித்தன. 2005ஆம் ஆண்டில் இந்த முன்னோடித் திட்டங்களை மீண்டும் விமர்சனப் பார்வையில் பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. மேலும் கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்ட உலகளாவிய வர்த்தக சாம்ராஜ்யத்தில் அச்சுறுத்தும் சவால்களைக் கருத்தில் கொண்டு ஜவுளித் துறையில் உள் கட்டமைப்பு வசதிக்கு முதலீடு செய்ய உதவும் தேவையும் 2005ல் ஏற்பட்டது.

ஆ). ஜவுளித் துறையில் எஸ்.எம்.இக்களின் உள்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக அமைப்பாக்கப்பட்ட அணுகுமுறையைப் பெற, 2005ல் ஒரு புதிய திட்டம் தொடங்கப் பட்டது. அதன் பெயர் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் திட்டம் (எஸ்.ஐ.டி.பி) ஆகும். தங்களது ஜவுளி ஆலைகளை நிர் மாணிப்பதற்காக, உலகத் தரம் வாய்ந்த உள் கட்டமைப்பு வசதிகளை ஜவுளித் தொழிலுக்கு வழங்குவதே எஸ்.ஐ.டி.பி திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். மேலும் இத் திட்டம் ஜவுளி தொழிலக அலகுகள் சர்வ தேசச் சுற்றுச்சூழல் மற்றும் சமூக தரமதிப்பீடு களைப் பூர்த்தி செய்வதற்கு உதவும்.

தொழில்துறை மேம்படுத்தித் தரும் குறிப் பிட்ட சிறப்பு நோக்க சாதனங்கள் (எஸ்.பி.வி) வழியாக திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் என்பதாக எஸ்.ஐ.டி.பி அமைப்பாக்கப்பட்டு இருந்தது. இங்கு சாதனங்கள் என எடுத்துக் கொள்ளப்படுவது பெரும்பாலும் எஸ்.எம். இக்கள்தான். இத்தகைய சிறப்பு நோக்க சாதனங்கள் மூலமாகத்தான் ஜவுளிப் பூங்காக்கள் நடைமுறைப்படுத்தப்படும். இந்த எஸ்.பி.வின் உரிமை தனியார் வசமே இருக்கும். ஜவுளிப் பூங்காவில் உள்ள அனைத்து தொழில் அலகுகளும் எஸ்.பி.வியில் தமக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களின் விகிதாச்சார அடிப்படையில் பங்குகளைச் சொந்தமாக்கி வைத்திருக்கும். எஸ்.ஐ.டி.பின் மிகவும் தேவை யான புதுமையான முக்கியமான நடவடிக் கையாக இது இருந்தது. உலக வங்கியின் ஆய்வில் கூறியுள்ளதை இங்கு மேற்கோளாகப் பார்க்கலாம்:

“எஸ்.ஐ.டி.பின் மிக முக்கியமான புதிய நடவடிக்கை இதுவரை இல்லாத அளவில் பூங்காவைப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பங்கே ஆகும். ஏறத்தாழ பிற அனைத்து திட்டங்களுக்கும் மாற்றாக, மத்திய, மாநில அரசுகளின் பங்கு குறைக்கப்பட்டது. பொதுவான நடைமுறையில் உள்ளதைவிட வித்தியாசமானதாக ஆலோசகர்களின் பங் கானது பயன்படுத்தப்படுகின்றது. மூன்றாம்

தரப்பினர் பங்கு எதுவும் இல்லாததாலேயே, அதாவது அவர்களின் இன்மையால் அவர்கள் கவனம் பெறுகிறார்கள். முந்தைய இரண்டும் வணிக நிறுவனங்களைக் குழுவாக நிறுவனப்படுத்துதல், ஆதரவு அளித்தல், கண் காணித்தல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றன. பூங்காவைக் கட்டி முடிப்பதற்கான முறையான மற்றும் முறைசாராத தேவைகளையும் அவை பின்னர் பூர்த்தி செய்கின்றன". (உலக வங்கி 2013ல் வெளியிட்ட யான்னிக் சேல்மன் – லுக் சிமோன் சேர்ந்து எழுதிய "தொழில் பூங்காக் களை நடைமுறைப்படுத்துதல் இந்தியாவில் இருந்து கற்றுக் கொண்ட சில பாடங்கள்" என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது).

ஈ). இவ்வாறாக, தொழில் பூங்காக்களை அமைப்பதை குறிப்பாக ஜவுளிப் பிரிவில் அமைப்பதை எஸ்.ஐ.டி.பி மேம்படுத்தியது. எஸ்.ஐ.டி.பி முன்னெடுத்த ஜவுளி பூங்காக் களின் சாதகமான அம்சம் எதுவெனில் தொழில்துறையின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப உள்கட்டமைப்பு வசதிகள் வடிவமைக் கப்பட்டு நிர்மாணிக்கப்படுவதே ஆகும். எனவே ஜவுளிப் பூங்காக்களில் ஜவுளிக் கழிவுகளைச் சுத்திகரிப்பு செய்ய ஆலை கள், தண்ணீர் விநியோகம், மின் விநி யோகம் ஆகியன பூங்காவில் உள்ள தொழில் அலகுகளின் தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டன. ஜவுளித்துறையோடு தொடர்புடைய பொது வசதிகள், அதாவது பரிசோதனைக் கூடங்கள், ஆய்வு மையங்கள், தொழில்திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகியனவும் ஜவுளிப் பூங்காக்களிலேயே அமைக்கத் திட்டமிடப்பட்டன. இதனால், இத் தகைய ஜவுளிப் பூங்காக்கள் மேம்பாட்டு முனை களாக உருவாக முடியும், ஜவுளி சூழலியல் அமைப்பும் இங்கு செழிப்பு பெறும்.

உ).எஸ்.ஐ.டி.பி–இன் மற்றொரு முக்கியமான அம்சம் எதுவெனில் திட்டத்தை அமல்படுத்த ஜவுளி அமைச்சகத்துக்கு உதவும் வகையில் தொழில்நிபுணத்துவ ஏஜென்சிகளை நியமிப்ப தாகும். திட்டம் குறித்த தகவலை இத்தகைய ஏஜென்சிகள் பரவலாக்கும்; மூலவளங்கள் பற்றி முன்மொழிவுத் திட்டங்களைச் சமர்ப் பிக்கும்; டி.பி.ஆர்க்களைத் தயாரித்து அவற் றுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரியிடம் வழங்கும்; பின்னர் தொடர்ந்து அமலாக் கத்தைக் கண்காணிக்கும். பிறகு ஜவுளி அமைச்சகத்துக்கு அறிக்கைத் தரும். உலக வங்கியின் ஆய்வில் கூறியுள்ளவற்றை இங்கு மேற்கோளாகப் பார்க்கலாம்:

"மேலும் விரிவாகப் பார்த்தால், தொழில் முனைவோர்களை பூங்கா உருவாக்குவதில் மற்றும் செயல்படுத்துவதில் பூர்வாங்க நட வடிக்கைகள் முழுவதையும் செயல்படுத்துபவர் களாகவும், முடிவு எடுப்பவர்களாகவும் கொள்கையானது மாற்றுகின்றது. ஆனால் அதே சமயம் தொழில் பூங்கா அபிவிருத்தியில் பல படிகளுக்கு இடையில் பி.எம்.சி ஆதர வும் தேவைப்படுகின்றது. "திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்துவதற்காக" பி.எம்.சிக் களுக்கு குறிப்பிடத்தக்க உள்கட்டமைப்பு மேம் பாட்டு அனுபவம்" தேவைப்படுகின்றது".

ஊ). தொழிலகத் தொகுப்பு முறையில் குறிப்பிட்ட தொழில் பிரிவுக்கான முதலீட்டுத் திட்டத்தை முதன்முதலாக அரசு தொடங்கி உள்ளது. அதுதான் எஸ்.ஐ.டி.பி ஆகும். இதைத் தொடர்ந்து இது போன்ற திட்டங்கள் உணவு பதப்படுத்துதல், மின்னணுவியல், தோல் மற்றும் மூலதனச் சரக்குப் பிரிவுகளிலும் தொடங்கப்பட்டுள்ளன.

எ). எஸ்.ஐ.டி.பி பெருமளவு வெற்றியைப் பெற்று, இதுவரை இல்லாத வகையில் 72 ஜவுளிப் பூங்காக்களுக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. இதில் 32 பூங்காக்கள் செயல் பாட்டில் உள்ளன. இந்தப் பூங்காக்கள் சமூக பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் அளப்பரிய ஆற்றலைக் கொண்டுள்ளன. கீழ் வரும் அட்டவணை அதை விளக்கும்:

ஏ). எஸ்.ஐ.டி.பி என்பது தொழிலகத் தொகுப்பு மாதிரியின் அடிப்படையில் இயங்கு வதாகும். பயன்படுத்தும் தொழிலகப் பிரிவு நெருங்கி வந்து எஸ்.பி.பி செயல்திட்டத்தை ஏற்படுத்தி அதன்மூலம் ஜவுளிப் பூங்காவை நிர்மாணிக்கும். இது சிறப்பு பொருளாதார மண்டலங்கள் போன்று (எஸ்.இ.இசட்) இல்லை. எஸ்.இ.இசட் என்பது அபிவிருத்தி

**அட்டவணை 2: சமூக பொருளாதாரத் தாக்கம்**

| | |
|---|---|
| இயந்திரங்களில் முதலீடுகள் | ரூ. 30,000 கோடிகள் |
| வருடாந்திர உற்பத்தி | ரூ 8,700 கோடிகள் |
| எதிர்பார்க்கப்படும் தொழில் அலகுகள் | 4,000 |
| வேலைவாய்ப்பு | 450,000 |

யாளர் மாதிரியில் செயல்படுவதாகும். எஸ்.இ. இசட்டுகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் நிதி மற்றும் ஒழுங்குமுறை சலுகைகள் கொடுக்கப் பட்ட போதிலும் இவற்றின் உற்பத்திச் செயல்திறன் எஸ்.ஐ.டி.பி பார்க்குகளுக்கு இணையாகத்தான் உள்ளது, அதிகமானதாக இல்லை.

ஐ). முன்னரே சுட்டிக்காட்டிய முந்தைய ஜவுளி தொழிலகத் தொகுப்புகள் திட்டங் களுக்கு அதிக அளவு ஆதரவு தரப்பட்டிருந்த போதிலும் எஸ்.ஐ.டி.பியைவிட குறைந்த அளவு வெற்றியையே அவை பெற்றிருந்தன. முந்தையத் திட்டங்களில் நிலம் அடையாளம் காணுதல், வடிவமைப்பை முடிவு செய்தல், இயக்குதலும் பராமரித்தலும் முதலான முக்கிய நடவடிக்கைக்கு அரசாங்கங்களே (மத்திய அரசு மற்றும் / அல்லது மாநில அரசு) பொறுப்பு ஏற்றிருந்தன. இது சிறப்பானதாக இல்லை என்ற உண்மைதான், திட்டத்தின் உரிமையை தொழில்துறைக்கே கொடுத்தால் வெற்றி நிச்சயம் என்ற சாதக நிலையைப் புரிய வைத்தது.

ஒ). எஸ்.ஐ.டி.பி–இன் கீழ் பலவகைப்பட்ட பூங்காக்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன திருப்பூர் அருகில் 65 ஏக்கர் பரப்பில் நெசவுப் பூங்கா, விசாகப்பட்டினத்தில் 1,000 ஏக்கர் பரப்பில் பூங்கா மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலம் போன்றவற்றை உதாரணமாகச் சொல்லலாம். பெரும்பாலான பூங்காக்கள் இருக்கின்ற ஜவுளித் தொழிலகத் தொகுப்புக்குள் அல்லது அதன் அருகில்தான் உள்ளன. ஏனெனில் இந்தத் தொழிலகத் தொகுப்பில் உள்ள தொழில் பிரிவுகள் பூங் காக்களை உருவாக்க தொடக்க நிலை நட வடிக்கைகளை எடுப்பார்கள்.

ஓ). பலதரப்பட்ட முதலீட்டாளர்களிடம் இருந்து முதலீடுகளை ஈர்ப்பதில் எஸ்.ஐ.டி.பி திட்டம் வெற்றிகரமானதாகச் செயல்படு கின்றது. விசாகப்பட்டினத்தில் உள்ள பிரான் டிக்ஸ் இந்தியா அப்பேரல் நகரத்துக்கு அந்நிய நேரடி முதலீடு; திருப்பூர் அருகில் உள்ள பல்லடத்தில் 90 எஸ்.எம்.எம்.இக்களின் கூட்டமைப்புக்கு பல்லடம் ஹைடெக் வீவிங் பார்க் அமைப்பதற்கான முதலீடுகள் உதாரணங்களாகும். தெலுங்கானாவில் போச் சம்பள்ளியில் உள்ள நெசவாளர்கள் மற்றும் மாஸ்டர் நெசவாளர்களுக்கு ஊக்கம் அளித்து அவர்கள் எஸ்.பி.வி உருவாக்க இத்திட்டம் உதவுகின்றது. அதே போன்று கைத்தறிப் பூங்கா ஒன்றை அமைக்கவும் உதவுகின்றது.

### நிறுவனங்களின் வெற்றிக் கதைகள்

பிரான்டிக்ஸ் இந்தியா அப்பேரல் சிட்டி பிரைவேட் லிமிடெட் (பி.ஐ.ஏ.சி): இது 1,000 ஏக்கர் பரப்பளவில் செங்குத்தான ஒருங் கிணைப்பில் உள்ள ஆயத்த ஆடை மற்றும் ஜவுளி பூங்காவாகும். இங்கு உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது வசதிகள் உற்பத்தி அலகுகளுக்குக் கிடைக்கின்றன. எஸ்.ஐ.டி.பி.ன் கீழ் ரூ134 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் நிர்மாணிக் கப்பட்டது. நேரடி அன்னிய முதலீடாக ரூ1,100 கோடியில் (200 மில்லியன் அமெரிக்க டாலர்) 19 அலகுகள் (17 அலகுகள் ஏற்கனவே செயல்படத் தொடங்கி விட்டன) இந்தப் பூங்காவில் உள்ளன. நூற்பு, இழை பதப் படுத்துதல் (சாயம் தோய்த்தல், நெசவுக்குத் தயார் செய்தல் முதலானவை), துணி பதப் படுத்துதல், ஆடை தயாரிப்பு முதலானவை இவற்றின் கீழ் வருகின்றன. தற்போது 19,000 பேர் வேலைபார்த்தாலும் 60,000 பேருக்கு வேலை கொடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. தொடர்ச்சியான நம்பகமான மின்சாரம் கிடைப்பதற்காக 200 மெகாவாட் திறனுள்ள துணை மின்நிலையம், 26கி.மீ தூரத்திற்கு

குழாய் மூலம் கச்சா நீர் 60 எம்.எல்.டி அளவில் விநியோகம் (ஒரு நாளைக்கு ஒரு மில்லியன் லிட்டர்), சுத்திகரிக்கப்பட்ட கழிவு களை எடுத்துச் செல்ல 9கி.மீ தூரத்திற்கு கடல் வெளியேற்றக் குழாய் (இதில் 2.5 கி.மீ கடலுக்குள் உள்ளது), பசுமைச் சூழலைப் பாதுகாக்க 400 எம்.எல் மழைநீர் சேகரிப்பு குளம் முதலான அருமையான உள்கட்டமைப்பு வசதிகளைப் பூங்கா பெற்றுள்ளது. பூங்காவின் தற்போதைய ஆண்டுத் தொழில் தொகை ரூ.1,400 கோடி ஆகும். இந்த ஆண்டுத் தொழில் தொகையானது ரூ.4,800 கோடியை எட்டக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

பல்லடம் ஹைடெக் வீவிங் பார்க் (பி.எச்.டபிள்யூ.பி): இது நாட்டின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா வகையில் முதல் பூங்காவாகும். எஸ்.ஐ.டி.பின் கீழ் ரூ.55.42 கோடி திட்டச் செலவில் 65 ஏக்கர் பரப்பளவில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவில் 90 தொழில் அலகுகள் உள்ளன. பல்லடம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள நெசவாளர்களை இந்தப் பூங்கா கவர்ந்துள்ளது. இவர்களுக்கு நவீன நெசவுத் தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஸ்பெஷல் பர்பஸ் வெகிக்கிள் (எஸ்.பி.வி) மூலமாக தொழில்முனைவோர்கள், வங்கிகள், அரசு ஆகியன அபிவிருத்தி செய்து வருகின்றன. இந்தப் பூங்காவில் நேரடியாக 2,500 பேர் வேலை செய்கின்றனர். மறைமுகமாக 3,500 பேர் வேலை செய்கின்றனர். இந்தப் பூங்காவில் ரூ.230 கோடிக்கு முதலீடு செய்யப்பட்டுள்ளன. இப்போது ஆண்டுத்தொழில் தொகை ரூ.1,150 கோடியாகும். வரும் காலத்தில் ஆண்டுத் தொழில் தொகையானது ரூ2,000 கோடியாக உயரும் வாய்ப்பும் உள்ளது.

## (5) எதிர்கால வழி

அ). மரபு சாரா ஜவுளித் தொழில் பரவலாக உள்ள பகுதிகளில் எஸ்.ஐ.டி.பிக்கு பசுமைப் பரப்பு தொழிலகத் தொகுப்புகளை உருவாக்க முடிந்துள்ளது. உதாரணமாக விசாகப்பட்டினத்தில் பிராண்டிக்ஸ் இந்தியா அப்பேரல் சிட்டி லிமிடெட் (பி.ஐ.ஏ.சி) நிர்மாணிக்கப்பட்டதைக் கூறலாம். அதே போன்று மரபார்ந்த ஜவுளித் தொழில் குவிந்துள்ள பகுதிகளில் பரப்பு தொழிலகத் தொகுப்புகளை உருவாக்கவும் முடிந்துள்ளது. உதாரணமாகத் திருப்பூருக்கு அருகில் பல்லடம் ஹைடெக் நெசவுப் பூங்கா அமைக்கப்பட்டதைக் கூறலாம். பல பூங்காக்கள் எஸ்.எம்.இ அலகு களை விட மேம்பட்டதாக உள்ளன. இத்தகைய தொழிலகத் தொகுப்புகளில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற தொழில் முனைவோர்களின் விரிவாக்கப்பட்ட முதலீடு களாக இத்தொழில் அலகுகள் உள்ளன. இவர்கள் இத்தகைய பூங்காக்கள் மூலம் தங்களது தொழில் நடவடிக்கைகளை விரிவு படுத்துகின்றனர். பூங்காவில் உள்ள தொழில் அலகுகள் மூலப்பொருட்களைப் பெற, சந்தைப்படுத்த, மனித வளத்துக்கு எனப் பல நடவடிக்கைகளுக்கு அருகில் உள்ள ஜவுளித் தொழிற்சாலைகளையே தொடர்ந்து சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. பிராண்டிக்சைப் பொருத்து (பி.ஐ.ஏ.சி), செயல்படும் மாதிரி வித்தியாசமானது ஆகும். இது ஒரு ஒருங்கிணைந்த மதிப்புத் தொடரைப் பெற்றுள்ளது. பூங்காவிற்குள்ளேயே அனைத்துப் பிரிவு களுக்கும் தேவையான சூழல் அமைப்பு உள்ளது. தொழில்திறன் மேம்பாடு, போக்கு வரத்து வசதிகள் முதலான சமூக நல நடவடிக்கைகளில் எஸ்.பி.வி அதிக அளவு முதலீடுகளைச் செய்துள்ளது. இதனால் திறன் பெற்ற தொழிலாளர் அடித்தளத்தை உருவாக்க முடிந்துள்ளது. பூங்காவானது ஏறத்தாழ ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு உதவும் ஒரு துறைமுகம் போன்று செயல்படுகின்றது.

ஆ). நாட்டில்பெரிய அளவில் ஒருங்கிணைந்த ஜவுளி உற்பத்திக்கான வசதிகளை உருவாக்க எஸ்.ஐ.டி.பியிடம்இருந்து அனுபவங்களை இன்னமும் மேலெடுத்துச் செல்ல வேண்டியது தேவையாகின்றது. மனிதவளமானது ஜவுளித் தொழிலில்தான் அதிகமாகும். இத்துறையானது லட்சக்கணக்கான இளைஞர்களுக்கும் பெண் களுக்கும் ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளைத் தர முடியும். போட்டியாளர் களோடு ஒப்பிட இந்தியாவுக்கு குறிப்பிடத்தக்க சில அனுகூலங்கள் இருக்கவே செய்கின்றன. இத்தொழிலில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு



முதலீடுகளை ஈர்த்து, தக்க வைக்கும் வகையில் தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கும் போது மான சூழலியல் அமைப்பைத் தரவேண்டியது அவசியமாகும். மேலும் இத்தொழில் பிரிவுக்கு சலுகைகள் அளிப்பதன் மூலம் முதலீட்டின் மீதான வருவாய் பெருகும் போது அது முதலீட்டாளர்களை ஈர்ப்பதாக அமையும். எனவே செங்குத்தான ஒருங்கிணைந்த வசதி களை மேலும் கூடுதலாக கட்டமைக்க வேண் டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது. இது சர்வதேச அளவில் போட்டியாளர்களுக்கு ஈடு கொடுப்பதாக இருக்க வேண்டும். நூற்பு, சாயம் தோய்ப்பு, பதப்படுத்துதல், வெட்டுதல், தைத்தல், லேபிள் இடுதல் மற்றும் பேக்கேஜிங் போன்ற வசதிகளுடன் பெரிய அளவு திறன் கொண்ட வசதிகள் அடிப்படை தேவை களாகும். ஒரே இடத்தில் ஒட்டுமொத்த மதிப்புத் தொடர்கள் கிடைப்பதை இது உறுதிப்படுத்தும்.

இ). இத்தகைய சூழலில்தான் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைப் பிரிவுக்கு உற்பத்தி பிராந்தியங்களை மேம்படுத்துதல் (எம்.ஆர்.டி.ஏ) முக்கியத்துவம் பெறுகின்றது. ஆயத்த ஆடை மற்றும் பிற ஜவுளி தொடர்புடைய பிரிவுகளில் உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி உற்பத்திக்கான தொழிற்சாலை உற் பத்தி வசதிகளை நிறுவுவதற்கு இப்பிரிவில் முதலீடுகளை அதிகரித்து தக்க வைக்க வேண்டும். இதனை செங்குத்து மற்றும் கிடைக்கோட்டு முறையில் மதிப்புத் தொடரை ஒருங்கிணைக்க வேண்டும். 1500 முதல் 2500 ஏக்கர் வரையான பரப்பில் சுயமாக நிலைத்து இருக்கக் கூடிய முதலீட்டு முனைகளாக இவை மேம்படுத்தப்பட வேண்டும். உற்பத்தி அலகுகள், பொது வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறைகள், குடியிருப்புப் பகுதிகள், சுகாதார உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை இவை உள்ளடக்கி இருக்கும்.

ஈ). ஜவுளி உற்பத்தி பிராந்தியங்கள் என ஒரு குறிப்பிட்ட மாவட்டம் அல்லது ஒன்றியங்களை ஒதுக்கி மாநில அரசுகள் எம்.ஆர்.டி.ஏக்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைத் தயாரிப்பதை ஊக்கப்படுத்த இவை ஒரு சூழலியல் அமைப் பாக மேம்படுத்தப்பட வேண்டும். தேவை யான உள்கட்டமைப்பு வசதிகள், துறைமுக / விமான நிலைய இணைப்பு வசதி முதலானவற்றை பெற்றுள்ள பிராந்தியத்தை மாநில அரசு முறையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். தற்போது நடைமுறையில் இருக்கும் கொள்கை மற்றும் இருக்கின்ற விதிகளுக்கு மேலாக அல்லது கூடுதலாக பிற பலன்களையும் சேர்த்து முதலீடுகளை

ஈர்க்க வேண்டும். உள்கட்டமைப்பு வசதிகளுக்கு ஆதரவு, நிறுவனத் தொடர்பு, நிதிசார்ந்த சலுகைகள், மனிதவள மேம்பாடு மற்றும் திறன் கட்டமைப்பு ஆகியவற்றை அளிப்பதற்கு மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும். இந்தப் பிராந்தியத்தில் தொழில் திறன் இடைவெளியை எதிர்கொள்வதாகவும் தொழில்திறன் பெற்ற ஊழியர்கள் கிடைப்பதை உறுதி செய்வதாகவும் இந்தப் பிராந்தியத்தில் மாநில அரசின் ஆயத்த ஆடை மையங்கள் முன்மொழியப்படலாம். ஐடிஐ மூலம் ஜவுளிப் பொறியியல் படிப்புகள் மற்றும் பிற நிறுவன ஆதரவை மாநில அரசுகள் முன் மொழியலாம்.

உ). முன்மொழியப்படும் பிராந்தியம் மத்திய அரசின் ஆதரவுடன் மேலும் வலுப்படுத்தப் படலாம். பொதுவான உள்கட்டமைப்பு மற்றும் பொதுவான வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் ஆகிய அம்சங்களில் இந்த வலுப்படுத்துதல் அமையலாம். தற்போது அமலில் உள்ள திட்டங்கள் மற்றும் இத் தகைய பிராந்தியங்களை உருவாக்குவதற்கு தேவைப்படும் கூடுதல் ஆதரவு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் இதனைச் செயல் படுத்தலாம். அத்தகைய உள்கட்டமைப்பு வசதிகள் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்கும். அதே போன்று உள்நாட்டு முதலீடு களையும் ஈர்க்கும். மேலும் இந்திய அரசின் “இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள்” திட்டத்தின் தொடக்க நடவடிக்கைகளும் விரைவு பெறும். இவ்வாறான தொடக்கநிலை நடவடிக்கைகள் ஜவுளித் தொழிலில் உலகளவில் முன்னணி பங்குதாரராக இந்தியாவை உருவாக்க நிச்சயம் உதவும். ●


## New Rates for Subscription of Journals

| S.No | Name of the Journal | Subscription Price Per Copy Rs | Subscription Price for 1 Year Rs | Subscription Price for 2 Years Rs | Subscription Price for 3 Years Rs | Subscription Price for Special Issue Rs |
|---|---|---|---|---|---|---|
| 1 | Yojana * | 22 | 230 | 430 | 610 | 30 |
| 2 | Kurukshetra * | 22 | 230 | 430 | 610 | 30 |
| 3 | Ajkal * | 22 | 230 | 430 | 610 | 30 |
| 4 | Bal Bharti * | 15 | 160 | 300 | 420 | 20 |
| 5 | Employment News # | 12 | 530 | 1000 | 1400 | NA |

* The prices of Journals are being revised from April 2016 issue onwards
# The price of Employment News is being revised from 6th February 2016 issue onwards

# தமிழகத்தின் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் நலத்திட்டங்கள் ஒரு பார்வை

– முனைவர் கா. செல்வகுமார்

இந்திய திருநாட்டில் விவசாயத்திற்கு அடுத்ததாக அதிக வேலைவாய்ப்பு வழங்கும் இரண்டாவது மிகப்பெரிய தொழிலாக ஜவுளித் தொழில் சிறப்பாக விளங்குகிறது. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றினை வழங்குவததோடு ஜவுளித் தொழிலானது, தொழில் உற்பத்தியில் 14 விழுக்காடு அளவிற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 விழுக்காடு அளவிற்கும், நாட்டின் ஏற்றுமதி வருவாயில் 11 விழுக்காடு அளவிற்கும் பங்களித்து, நாட்டின் தொழில் உற்பத்தி, வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி வருவாய் ஈட்டுதல் போன்றவற்றில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்தொழில் 45 மில்லியன் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கிவருகிறது. இத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருவதோடு, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பல இலட்சம் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வரும் பருத்தி, கம்பளி, பட்டு போன்ற முக்கிய இழைப்பயிர்கள் மற்றும் கைத்தொழில்களின் பொருளாதாரமும் ஜவுளித்தொழிலையே சார்ந்துள்ளது.

ஜவுளித்தொழிலின் உட்பிரிவுகளான நூற்பு, கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு, தானியங்கித்தறி நெசவு, பதனிடுதல், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தயாரிப்பு போன்றவற்றில் மிகப்பெருமளவிலான இடத்தினைப் பெற்றிருப்பதன் மூலம் தமிழ்நாடு பல ஆண்டுகளாக இந்திய ஜவுளித்தொழிலில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், பின்னலாடை ஏற்றுமதிக்கு திருப்பூர், நூல் ஏற்றுமதிக்கு கோயம்புத்தூர், வீட்டு உபயோக ஜவுளிகளுக்கு கரூர் மற்றும் ஆயத்த ஏற்றுமதிக்கு சென்னை போன்ற ஏற்றுமதி மையங்களுடன் தமிழ்நாடு செயல்படுகிறது. தமிழ்நாடு மாநிலம் மட்டுமே முழுமையான ஜவுளி மதிப்பு தொகுப்பாக இருப்பதால், ஜவுளித்தொழிலில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு பங்களிப்பதோடு, 47 விழுக்காடு நூற்புத்திறனுடனும், 20 விழுக்காடு விசைத்தறித் திறனுடனும், 50 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

இந்திய திருநாட்டிலேயே, தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டும் என்ற உன்னதமான குறிக்கோளை எய்திட, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்காவும், ஜவுளித் தொழிலின் உட்பிரிவுகளான நூற்பு, ஆயத்த ஆடை, பின்னலாடை மற்றும் பதனிடுதல் பிரிவுகளின் வளர்ச்சிக்காகவும் எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்தொழிலைச் சார்ந்துள்ள அனைத்து பிரிவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சரியான சூழலை ஏற்படுத்தவும், தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை வழங்கவும், அரசு முயற்சி எடுத்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பகுதி நெசவாளர்களை ஒரு குழுவாக சேர்த்து, அரசுக்கு ஒரு குறிப்பிட்ட சிறுதொகையை சேர்த்தும் சங்கத்தின் பெயர், முத்திரை, இடம் ஆகியவற்றை துணை இயக்குநர் மூலம் பதிவு செய்யப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட நெசவாளர்களின் சங்கம் சரக உதவி இயக்குநர் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு, பின்பு உதவி இயக்குநர் மூலம் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கப்படுகிறது. மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. அந்த கடன் தொகை மூலம் அரசு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் நிலையங்களில் நெசவுத் தொழிலுக்கு தேவையான மூலப் பொருள்களை தரமாகவும்

**முனைவர் கா. செல்வகுமார்,** உதவி பேராசிரியர், அரசியல் அறிவியல் மய்யம், பெரியார்மணியம்மை பல்கலைக்கழகம், வல்லம், தஞ்சாவூர்.

நியாயவிலையிலும் ஜரிகை, பட்டு, பாதை போன்றவற்றை நெசவாளர் உறுப்பினர்களுக்கு அந்த சங்கத்தின் பெயர் மூலம் வழங்கப்படுகிறது. தரமான சேலை உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் நெச வாளர்களின் தொழிலை நம்பி இருக்கும் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கியும் நெசவுத்தொழில் நசிந்து போகாமல் பாது காக்கவும் பல்வேறு சலுகைகளை சங்கங்கள் மூலம் நெசவாளர்களுக்கு அரசு வழங்கி யுள்ளது. இதன் மூலம் பல்வேறு பயன்களை நெசவாளர்கள் பெறுகின்றனர். தமிழக அரசு 2016ல் ஆண்டில் சில சலுகைகளை முன் வைத்துள்ளது. அவை பின்வருமாறு; கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கட்டண மில்லா மின்சாரம் 200 யூனிட்டுகளாக உயர்வடைந்தது. இதன் மூலம் 78, 378 கைத்தறி மின் நுகர்வோர்கள் பயன்பெற்றுள்ளனர். விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மின்சாரம் 750 யூனிட்டுகளாக உயர்வடைந்து இதன் மூலம் 98,712 விசைத்தறி மின் நுகர்வோர்கள் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள 1,161 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் வகையிலும், அவர்களின் வாழ்க்கைச் செல வினங்களைக் கருத்தில் கொண்டும் 01.04.2016 அன்று முதல் கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்கள் பெறும் அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து பல நல்ல பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தி உள்ளன. அவற்றை பற்றி பின்வருமாறு மேலும் அறிந்துகொள்ள முடிகிறது. அவை:

### 1. கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்

இத்திட்டத்தில் ஓராண்டு தொடர்ந்து நெசவு செய்யும் நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் பெறும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா பிடித்தம் செய்யப்படுகிறது. தமிழக அரசும் 8 பைசா வழங்குகிறது. இவ்விரு தொகையும் நெசவாளர் பெயரில் அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது. இத்தொகைக்கு 6.5 சதவீத வட்டியும் வழங்கப்படுகிறது.

### 2. கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

இத்திட்டம் 01.01.2012 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் சேர்ந்து செயல்பட்டு வந்த நெசவாளர் உறுப்பினர் 60 வயது பூர்த்தி அடைந்த பின்னர் அவரது வாழ்நாள் முழு வதும் மாதம் ரூ. 1,000/– முதியோர் ஓய்வூதிய தொகை வழங்கப்படுகிறது.

### 3. கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

இத்திட்டம் 01.01.2012 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் 60 வயதை அடைவதற்கு முன்னர் இயற்கை எய்தினால் அவரின் நியமனதாரருக்கு 10 ஆண்டுகளுக்கு அல்லது நெசவாளர் உயிருடன் இருந்தால் 60 வயது பூர்த்தியாகும் வரை இதில் எது அதிகமோ அதுவரை மாதம் தோறும் ரூ.1,000 வீதம் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

### 4. நெசவாளர் நலக்காப்பீட்டுத் திட்டம்

நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சங்க உறுப் பினர்கள் மற்றும் தனியார் நெசவாளர்களுக்கு ஏற்படக் கூடிய நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் நல்வாழ்வுக் காப்பீட்டு திட்டம் செயல்பட்டு வருகிறது. ஓராண்டிற்கு ரூ.37500 வரை சிகிச்சை பெறலாம்.

### 5. புங்கர் பீமா யோஜனா திட்டம்

இத்திட்டத்தின் கீழ் உள்ள நெசவாளர் 60 வயதுக்கு முன்னர் இயற்கை எய்தும் பட்சத்தில் நெசவாளர்களின் வாரிசுக்கு காப்பீட்டு தொகையாக ரூ.60,000 வழங்கப்படுகிறது. விபத்தில் நிரந்தர ஊனமடையும் நெசவாளர் களுக்கு ரூ.1,50,000மும் பகுதி ஊனமடையும் நெசவாளர்களுக்கு ரூ.75,000மும் விபத்தில் மரணமடையும் நெசவாளர் நியமனதாரருக்கு ரூ.1,50,000மும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தில் பிரிமியத் தொகை

ரூ.330ல் மத்திய அரசு ரூ.150ம் ஆயுள் காப்பீடு கழகம் ரூ.100ம் நெசவாளர்கள் ரூ.80ம் செலுத்துகின்றனர். நெசவாளர்கள் பிரிமியத் தொகையை மாநில அரசே செலுத்துகிறது.

### 6. சிக்ஷா சஹாயோக் யோஜனா கல்வி உதவித் தொகை திட்டம்

இத்திட்டத்தில் உள்ள நெசவாளர்களின் குழந்தைகளுக்கு 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.1200 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 7. விலையில்லா பெடல்தறிகள் வழங்கும் திட்டம்

நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து நெசவு செய்யும் கைத்தறி நெசவாளரின் வருமானத்தை அதிகரித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட ரூ.35000 மதிப்பிலான விலையில்லா பெடல்தறிகள் வழங்கப்படுகிறது.

### 8. விலையில்லா மின்தார் சுற்றும் கருவி வழங்கும் திட்டம்

தார் சுற்றும் பணியினை இலகுவாக்கவும், தார் சுற்றுபவர்களுக்கு அதிக கூலி கிடைக்கவும் ரூ.2000 மதிப்பிலான விலையில்லா மின்தார் சுற்றும் கருவி வழங்கப்படுகிறது.

### 9. இலவச மின்சாரம் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒருமுறை 200 யூனிட் இலவச மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின் சாரமும் வழங்கப்படுகிறது.

### 10. மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் வீடு இலவசம் கிராமபுற நெசவாளர்களுக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய மற்றும் தறியோட வசதியாக 365 சதுர அடியில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. இதற்காக தமிழக அரசு ரூ.26000 முழு மான்ய மாக வழங்கிட உள்ளது.

### 11. நெசவாளர் கடன் அட்டை வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு தொழிலை மேம்படுத்த ரூ.25,000 கடன் வழங்கப்படுகிறது. இதில் ரூ.4200 விளிம்புத் தொகையாக அரசு வழங்குகிறது.

### 12. பிரதம மந்திரி நெசவாளர் முத்ரா திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு தொழிலை மேம்படுத்த ரூ.50,000 கடன் வழங்கப்படுகிறது. இதில் ரூ.10,000 விளிம்புத் தொகையாக மைய அரசு வழங்குகிறது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் வளர்ச்சியால் உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதர வளர்ச்சிக்கு மிகச்சிறந்த பங்களிப்பினை வழங்கக் கூடிய ஒரு வலிமையான மற்றும் உயிரோட்டமாக உள்ளது. ஜவுளித் தொழிலை வளர்ப்பதிலும் நுகர்வோருக்கு தரமான கைத்தறி மற்றும் பட்டு புடவையை தருவதில் மிகச் சிறந்த சேவையை அரசு செய்கிறது. இதன் மூலம் 'விற்பதை நெய்வோம் நெய்வதை விற்போம்' என்ற உயர்ந்த எண்ணங்களுக்கு ஏற்ப பல வண்ணங்களில் நெய்யும் நெசவுத் தொழிலை பாதுகாக்கும் நலத்திட்டங்கள் காலத்துக்கு ஏற்ப செவ்வனே மத்திய அரசும் மற்றும் தமிழக அரசும் செய்துவருகிறது. கைத்தறி மற்றும் பட்டுப் புடவைகளை வாங்கி நெசவாளர்களை பாதுகாப்பதில் அரசுடன் மக்களும் மிகுந்த ஆதரவு அளித்தால் இத்துறை மிகச் சிறந்த துறையாக பன்மடங்கு வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை.

### துணைநூல்கள்


1. கைத்தறி மற்றும் துணிநூல்துறை மானியக் கோரிக்கை எண். 17. 2016.
2. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தினமணி, 31 ஆகஸ்ட் 2016.
3. தமிழக அரசு கைத்தறி மற்றும் துணி நூல்துறை நலத்திட்டங்கள்.
4. சங்கரவடிவேலு, தஞ்சாவூர்; பட்டு சொசைட்டி, தொலைபேசி - 9789429670.

# காதி: இந்திய சுதந்திரத்தின் ஒரு அடையாளம்

– A. அண்ணாமலை

"காதி உணர்வு என்பது உலகில் வாழும் எல்லா ஜீவராசிகளுடன் சகோதர உணர்வு காட்டுவதாகும். மற்ற உயிர்களை துன்புறுத்தும் எதையும் முழுமையாக கைவிடுவது என்ற பொருளாகும். அந்த உணர்வை, நம்முடைய கோடான கோடி மக்களிடைய வளர்த்தால் நம் இந்திய நாடு எப்படி இருக்கும்!" (மகாத்மா காந்தியின் அனைத்து கருத்துக்களின் பதிப்பு, தொகுப்பு 34 பக்கம் 520). எல்லோருக்கும் காதி உணர்வும் மற்ற மக்களோடு ஒன்றினைந்த உணர்வும் இருக்க வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். காதி உடலை மறைக்க மட்டும் தேவைப்படும் உடையல்ல, ஏற்றுக்கொண்டு பின்பற்ற வேண்டிய சித்தாந்தம்.

1917ல் சம்பாரண் சத்தியாகிரகத்தின் போது காந்திஜி பிஹார் மாநில விவசாயிகளின் துயரங்களை கண்டறிந்தார். பில்வாரா கிராமத்தில் ஒரு பெண்ணோடு பேசும்போது அவர் கட்டியிருந்த சேலையை மாற்ற அவரிடம் வேறொரு சேலைக்கூட இல்லை என்பதை அறிந்தார். சம்பாரண் சத்தியாகிரகம் நடைபெற்றதற்கு முக்கிய காரணம் ஆடைக்கு வண்ணம் கொடுக்கும் நீலச்சாய உற்பத்திக்கு தேவையான ஒரு தாவரமாகும். விவசாயிகளுக்கு அந்த உடை மிகவும் விலை அதிகமானதாக இருந்ததே காரணமாகும். கடந்த காலத்தில் ஒரு சமயம் உலகில் அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்தது நாம் தான். ஆனால், பயிரிட்டவர்களுக்கு பருத்தி கிடைக்கவில்லை. நம்முடைய பருத்தி இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு மான்செஸ்டர் மற்றும் லாங்கஷயரிலிருந்து ஆடையாக இறக்குமதி செய்யப்பட்டது.

நம்முடைய பழம் புகழ் எங்கே? காந்திஜிகூட நூற்பிற்கும் நெசவிற்கும் புகழ்பெற்ற பகுதியிலிருந்து வந்தவர்தான். இந்தியச் சந்தையை



கிழக்கிந்திய கம்பெனி கைப்பற்றியபின்தான் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டன. தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்திய கிராம மக்களின் ஜவுளிப் பண்பாட்டை குலைத்தனர்.

### பண்டைக்காலத்து புகழ்மிக்க ஜவுளிசார் அறிவு:

பண்டைய எகிப்தியர்களின் கல்லறையில் இந்திய நீலச்சாயத்தால் தயாரிக்கப்பட்ட இகாத் என்ற ஆடை காணப்பட்டது. மொகஞ்சதரோ அகழ்வாய்வில் இப்படிப்பட்ட ஒரு ஆடையும் நூற்புக் கதிர்களும் கண்டெடுக்கப்பட்டன. கிரேக்க, ரோமானிய வியாபாரிகளின் எழுத்துக்களில் இந்திய துணைக் கண்டத்தின் இந்த அரிய ஆடை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அஜந்தா மற்றும் எல்லோரா ஓவியங்களில் பண்டைய ஆடைகளின் வெவ்வேறு வடிவமைப்புகளையும், மாதிரிகளையும் காணலாம். இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு விதமான ஆடை வடிவமைப்பு முறையைக் காணலாம் நெசவு செய்வதில் வண்ணம் சேர்ப்பதில் மற்றும் அச்சிடுவதில்

**A. அண்ணாமலை**, இயக்குனர், தேசிய காந்தி அருங்காட்சியம், ராஜ்காட், புதுடெல்லி – 110002.

பலவகையான வடிவமைப்புகளை காணலாம். துணியின் தரமும், பகுதிக்கு பகுதி வேறுபட்டது. உண்மையில், ஜவுளி தொழில்நுட்பத்தில் நாம் முன்னோடியாக இருந்திருக்கிறோம்.

இந்திய ஆடைகளுக்கு மதிப்பும் கவுரவவும் இருந்தது. அதனாலேயே சில நாடுகள் இந்திய துணியின் இறக்குமதிக்கு தடைகளை விதித்தார்கள். நம் ஆடைகள் பல நாட்டு ராஜ குடும்பத்தினருக்கு அழகு சேர்த்தது. அந்த ஆடை கையால் நெசவு செய்யப்பட்ட பழங்காலத்து காதியாகும். தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட தீய விளைவுகளில் ஒன்று இங்கிலாந்தின் விசைத்தறிகள் இந்திய ஜவுளி உற்பத்தியை குலைத்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலணி கொள்கையால் ஏற்படுத்தப்பட்ட புதிய சட்டங்களினால் ஒரு புது வகையான வர்த்தகப் பழக்க வழக்கங்கள் தோன்றின. இந்தியாவில் விளையும் அனைத்து பருத்தி ரகங்களும் இங்கிலாந்திற்கு மிகக்குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். பிரிட்டிஷ் ஆலைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆடைகள் இந்திய சந்தையில் குவிக்கப்பட்டு நமக்கு வேறு வழியில்லாமல் செய்தனர். இந்தியாவின் லட்சோபலட்ச நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் வேலை இழந்து வீதிக்கு தூக்கியெறியப்பட்டார்கள். இந்தியாவின் புகழ் மிக்க கையால் நெசவு செய்யப்பட்ட ஆடை தயாரிப்பு தொழில்நுட்பம் சாகடிக்கபட்டு இந்தியாவின் வளமிக்க பரம்பரை ஜவுளி அறிவு மறைந்தது.

### காதி இயக்கம்

இங்குதான் காந்திஜி தோன்றுகிறார் "1908ல் லண்டனில்தான் நான் சர்க்காவை கண்டு பிடித்தேன். அப்போது நான் தென்னாப்பிரிக்க குழு ஒன்றை தலைமையேற்று சென்றிருந்தேன். அப்போதுதான் மாணவர் உள்ளிட்ட பல துடிப்பான இந்தியர்களை சந்தித்தேன். இந்தியாவின் நிலைமை பற்றி நீண்ட நேரம் விவாதித்தோம். சர்க்கா இல்லாமல் சுவராஜ் கிடையாது என்று அப்போதுதான் எனக்கு பெரி தட்டியது. இந்தியர் எல்லோரும் நூற்க



வேண்டும் என்று உடனே நான் உணர்ந்தேன். அப்போது எனக்கு சர்க்காவுக்கும், தறிக்கும் உள்ள வித்தியாசம் தெரியவில்லை. ஆகவே, ஹிந்த் ஸ்வராஜ் பத்திரிக்கையில் சர்க்காவை குறிப்பிடும்போது தறி என்று குறிப்பிட்டிருந்தேன்." (மகாத்மா காந்தியின் அனைத்து கருத்துக்களின் பதிப்பு, தொகுப்பு 37 பக்கம் 288).

கோகலேயின் கருத்துப்படி இந்திய மக்களின் நிலைமையை நேரடியாக கண்டறிய காந்திஜி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். கிராமங்களில் ஏழை மக்களிடம் இருந்த ஏழ்மையை நேரடியாக கண்டார். விவசாயிகளுக்கு வருடத்தில் பாதி நாட்களுக்கு வேலை இல்லை. சம்பாரண் நிகழ்வும் அவருடைய எண்ணத்திற்கு வலுவூட்டியது. விவசாயிகளுக்கு பகுதி வேலையாக அவர்களுடைய நேரத்தையும், உழைப்பையும் ஒரு நல்ல வேலை வாய்ப்புக்காக பயன்படுத்த நினைத்தார். நூற்பும், நெசவும் அவர் கவனத்திற்கு வந்தது. தன்னுடைய ஆசிரமத்தில் அகமதாபாத் ஆலை முதலாளிகளின் துணையோடு நெசவு தொழிலை ஆரம்பித்தார். இந்த முயற்சியும் இந்திய தொழிற்சாலைகளுக்கே லாபகரமாக இருப்பதை விரைவில் உணர்ந்தார். ப்ரோச்சில் நடைபெற்ற இரண்டாவது குஜராத் கல்வி மாநாட்டில் துடிப்பு மிக்க அம்மையார் கங்காபென் மசூம்தாரை சந்தித்த காந்திஜி இந்தியாவின் பாரம்பரிய நூற்பு முறையையும் அதற்கான உபகரணங்களை கண்டுபிடிக்க அவரிடம் வேண்டினார். அதுதான் அன்றைய

இந்திய நிலைமை.

"குஜராத் மாநிலத்தில் பல இடங்களுக்கு சென்ற கங்காபென் கடைசியில் பரோடா மாநிலத்தில் விஜாப்பூர் என்ற இடத்தில் நூற்புக்கான சக்கரத்தை கண்டறிந்தார். பல வீடுகளில் இந்த நூற்பு சக்கரம் இருந்தாலும் அது தேவையற்ற ஒரு மரப்பொருளாக கருதப் பட்டு பரணையில் எறியப்பட்டிருந்தது. அந்த மக்கள் தங்களுக்கு நூற்பதற்கு வேண்டிய சில உபகரணங்களைக் கொடுத்து, அவர்கள் நூற்கும் நூலை வாங்கிக் கொள்ள முடியும் என்றால், அவர்கள் மீண்டும் நூற்பு செய்ய விரும்புவதாக கூறினர். இந்த மகிழ்ச்சியான செய்தியை கங்காபென் எனக்குத் தெரி வித்தார்." (மகாத்மா காந்தியின் அனைத்து கருத்துக்களின் பதிப்பு, தொகுப்பு 39 பக்கம் 391).

கங்காபென், மகன்லால் காந்தி மற்றும் பிற நம்பத்தக்க ஆசிரம நண்பர்கள் மூலம் காந்திஜி கையால் நூற்பது மற்றும் நெசவு செய்வது ஆகியவற்றிற்கு புத்துயிர் அளித்தார். காதியை முதலில் ஆசிரம வாசிகள் பயன்படுத்தினர். பிறகு அதை ஒரு தேசிய இயக்கமாக எடுத்துச் செல்ல காந்திஜி முடிவு செய்தார்.

இந்த புதிய கையால் நூற்கப்பட்டு கையா லேயே, கையாலேயே நெசவு செய்யப்படும் ஆடைக்கு காந்திஜிக்கு காதி என்ற பெயரை சூட்டினார். காதிக்கு, ஒரு தத்துவ அடித் தளத்தையும் அமைத்து காங்கிரஸ் கட்சியின் புதிய திட்டமாக அறிமுகப்படுத்தினார்.

**காதி உணர்வு:**

"சுதேசி கருத்தின் மையமாக காதி விளங்கு கிறது. காதி அல்லாத சுதேசி கருத்து உயிரற்ற உடலைப் போன்றது ஒழுங்காக அடக்கம் செய்யப்படுவதற்கு மட்டுமே தகுதியானது. உண்மையான சுதேசி ஆடை, காதிதான். காதி ஆடை, பல கோடி மக்களின் வெளிப்பாடாக சுதேசியை விளக்க வேண்டுமானால், காதியை ஒரு உயர்ந்த பொருளாக நாம் சுவாசிக்கும் காற்றைப் போன்று கருத வேண்டும். இதை சுவதேசி என்று கூறுவது இந்தப் பொருளை அனைத்து இந்திய மக்களும் பயன் படுத்துகிறார்கள் என்பதில் இல்லை, அதை உற்பத்தி செய்வதில் அனைவரும் பங்கு பெறு கிறார்கள் என்பதே ஆகும். அப்படி பார்க்கும் போது, இந்தியாவில் ஜவுளி ஆலையில் உற்பத்தி செய்யப்படும் ஆடை ஒரு அளவில்தான் சுதேசி. அந்த உற்பத்தியில் இந்தியாவின் பல கோடி மக்களில் ஒரு சிலரே பங்கு பெறுகின்றனர். ஆனால், காதி உற்பத்தியில் பல கோடி மக்கள் பங்கு பெறலாம்." (யங் இந்தியா, 17.6.1926) இப்போது மகாத்மா காந்தி சுதேசி இயக்கத்தின் அடித்தளத்தை அமைத்து விட்டார். நாட்டு மக்கள் அந்நிய ஆடைய புறக்கணிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். சுதேசி இயக்கத்தின் மூலம் அவர் நாட்டுப்பற்று உணர்வை உயிர்ப்பித்தார், நாட்டுபற்றின் அடையாளமாக காதியை உருவாக்கினார். காதி இயக்கம் என்ற அஹிம்சை ஆயுதத்தை கையில் எடுத்த அவர் ஏகாதிபத்திய சுரண்டலின் அடித்தளத்தையே தாக்கினார்.

கிராமிய பொருளாதாரத்தை பரவலாக்கி புத்துயிரூட்டும் திட்டத்தில் காதியை அவர் இணைத்தார். அதுவே, இந்திய சுதந்திர போராட்டத்தின் ஒரு பகுதியாகும். அவர் நாடெங்கிலும் பயணித்து காதி இயக்கத்தை பிரபலப்படுத்தினார்.

காதியை அறிமுகம் செய்தபோது அதனு டைய வெள்ளை வண்ணம் ஒரு பெரிய சவாலாக இருந்ததது. அதனால் பெண்களுக்கு மற்ற வண்ணங்களில் சேலையை உற்பத்தி செய்ய முடியவில்லை. வண்ணக்கரைக்கூட இல்லாத வெள்ளை சேலையை

குடும்பப் பெண்கள் அணிய விரும்பமாட் டார்கள். ஏனென்றால், அதை உடுப்பவரை விதவை என்று பொருள் கொள்ளலாம். ஆகவே, வெண்மைக்கு புதிய அடையாளமாக சுத்தமான மற்றும் எளிய என்ற கருத்தை வலியுறுத்தினார். முதலில் தன் மனைவி

கஸ்தூரிபாய் இந்த வெள;ளை காதி சேலையை உடுத்த வேண்டும் என்று பணித்த காந்திஜி, பிறகு, ஆசிரமத்தின் பிற மகளிரும் இதனை உடுத்தி நாட்டு மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

### காதி பொருளாதாரம்

காதி இயக்கத்தினால், கிராம மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் முயற்சி உருவாகியது. இந்த காதி இயக்கத்தினால்தான் நிச்சயமாக இந்திய விடுதலை இயக்கத்தில் பல பெண்கள் பங்கு பெற்றனர்.

“ஒவ்வொரு நிலத்திலும், வீட்டிலும் தொழிற்சாலையிலும், இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் பதினாறு வயதிற்கு மேற்பட்ட உழைக்கும் மக்கள் அனைவருக்கும் வேலையும் உரிய ஊதியமும் கிடைக்கும் அளவிற்கு ஒரு நல்ல முறை ஏற்படும் வரையில், அல்லது கிராமங்களுக்கு பதிலாக தேவையான அளவு பெரிய நகரங்கள் உருவாகி இந்த கிராமப்புற மக்களுக்கு அவர்களுக்குத் தேவையான போதிய வசதிகளை அளிக்க முடியும் வரை, கிராமப்புற கோடான கோடி மக்களுக்கு உண்மையான பொருளாதார நடவடிக்கை காதியாகத்தான் இருக்க முடியும். ஆகவே, காதி நீண்ட நாள் நிலைக்கும் என்பதைத்தான் நான் கூறுகிறேன்.” *(காதி ஏன், எப்படி பக்கம் 35)*

பரவலாக்கப்பட்ட உற்பத்தி முறையின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் நிச்சயமாக சமமாக பிரித்தளிக்கப்படும். “வளத்தை உற்பத்தி செய்த பிறகு, அதை சமமாக பிரித்தளிக்க முடியாது. மக்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகவே, பொருளை உற்பத்தி செய்வதற்கு முன்பாகவே, வளத்தை சமமாக பிரித்தளிக்கும் வகையில் செய்ய முடியும், அதுதான் காதி”.

“ஒரு கிராமத்தின் சூரிய குடும்பத்தில், சூரியன் என்பது காதியாகும். கோள்கள் என்பது, சூரிய வெப்பத்திற்காக செயல்படும் காதி உற்பத்தியின் உப தொழில்களாக கூறலாம். அந்த வெப்பமும் உயிர்ப்புத் தன்மையும் இல்லாமல் மற்ற தொழில்கள் வளர முடியாது. ஆனால், என்னுடைய கடைசி பயணத்தின் போது, நான் கண்டது பிற தொழில்களை புதுப்பிக்காமல் காதியில் நாம் முன்னேற்றம் அடைய முடியாது என்பது. கிராம மக்கள் தங்களுடைய வேலையில்லா பொழுதை லாபகரமாக பயன்படுத்த கிராமிய வாழ்க்கை அனைத்தையும் நாம் தொட்டாக வேண்டும்.” *(ஹரிஜன், 16.11.1934)*

காங்கிரஸ் இயக்கத்தின் உள்ளிருந்த அழுத்தத்தை உணர்ந்த காந்திஜி காங்கிரசின் அமைப்பிலிருந்து காதியை பிரித்து வைத்தார். 1925ல் அவர் அகில இந்திய நூற்போர் சங்கத்தை உருவாக்கினார். அகில இந்திய நூற்போர் சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்ட காதி, இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கு பரவி, புதிய ஆதரவாளர்களையும் இந்தியாவெங்கும் ஆதரவையும் பெற்றது.

### இந்திய சுதந்திர இயக்கத்தின் ஒரு அடையாளம்

இந்திய சுதந்திர இயக்கத்தின் ஒரு அடையாளமாக, சர்கா உருவெடுத்து காதி நாட்டுப் பற்றின் அடையாளமாக விளங்கிற்று. அப்போது இந்தியாவில் ஆதிக்க அதிகாரம் மரி மக்கள் அதிகாரம் உருவானது. ஒரு காலத்தில் காவலர்களுக்கு பயந்த சாமானியர்களின் நிலைமை மரி காந்திஜி துவக்கிய அஹிம்சை முறையில் விளைந்த “காதி மக்களை”க் கண்டு காவலர்கள் பயந்தனர். ஒரு பொருளாதார நடவடிக்கை, ஒரு மிகப்பெரிய அரசியல் ஆயுதமாக உருவெடுத்தது!

“காந்திய தேசத்திற்கு ஆடை” என்ற தனது புத்தகத்தில் லிசா திரிவேதி கூறியுள்ளபடி “காதி அந்நிய ஆதிக்கத்தின் கீழிருந்த மக்களை மாற்றி தேசிய உணர்வு கொண்ட குடிமக்களாக மாற்றியது. ஒரு எளிய ஆடையை உருவாக்கியதன் மூலம் மேன்மக்கள் பரவலான தேசிய சமுதாயத்தோடு தங்களை அடையாளம்



கண்டுகொள்ள சுதேசி ஆதரவாளர்களின் இந்த உத்தி உதவியது. இந்த புதிய ஆடையை உடுத்துவதன் மூலம் அந்நிய ஆதிக்கத்திற்கும், பாரம்பரிய முறைகளுக்கும் பெரிய சவால் ஏற்பட்டது. "என்றும் காதி அணிபவர்கள், உழைப்பின் மகத்துவத்தையும், தன்னிறைவும் ஒரு அரசியல் சமுதாயத்தின் அடையாளமாக வெளிப்படுத்திக் கொண்டாடினர். மிக எளி தாக கூற வேண்டுமானால், அந்நிய ஆதிக் கத்தில் அடைபட்டிருந்த இந்திய மக்கள் அனைவரும் காதியை அணிந்து ஓர் இன மக்களாக உருவெடுத்தனர். எல்லா மக்களை யும் இந்தியர்களாக உருவகப்படுத்த முடியா விட்டாலும், காதி என்பது, அந்நிய ஆதிக்கம் மற்றம் பரம்பரை முறைகளை நிராகரிப்பது என்பதாயிற்று."

*"காதி இயக்கம் என்பது நகர மக்களுக்கு ஜவுளி ஆலை தயாரிப்புக்கு மாற்றாக அழகிய காதி ஆடையை வழங்குவது அல்ல. அதனால் சில கைவினைஞர்களுக்கே வேலை கிடைக்கும். காதி என்பது விவசாயிகளின் துணை வேலை வாய்ப்பாக அமைய வேண்டும். அந்த எண்ணம் இன்னும் ஈடேறவில்லை.*

*"இந்த எண்ணம் நிறைவேற இந்த இயக்கம் சுயமாக இயங்க வேண்டும். அப்படி இயங்க இது கிராமங்களுக்கு செல்ல வேண்டும். கிராம மக்கள் தங்களுடைய உணவுத் தேவைகளை தாங்களே சமைத்துக் கொள்வது போல தங்களுடைய காதி ஆடையை தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். கூடுதலாக இருக்குமானால் வெளியே விற்கலாம்." (ஹரிஜன், 6.7.1935)*

**நம்மை எதிர்நோக்கும் சவால்கள்**

காதி அடிப்படை கொள்கைகளான தன் தொழிலின்மீது பெருமிதம், பரவலான செயலாக்கம், அஹிம்சை மற்றும் எளிமை ஆகியவற்றை விட்டுக் கொடுக்காமல் காதியை மக்களின் செலவுத் தன்மைக்கு ஏற்பவும் கவர்ச்சியாகவும் எப்படி தயாரிப்பது என்பது இப்போது நமக்குள்ள முக்கிய சவாலாகும். சுதந்திர போராட்டம், சுதேசி இயக்கம், போன்ற வலுவான காரணங்கள் இல்லாத இன்று காதி தன்னுடைய சுய வளத்திலும் தத்துவத்தின் அடிப்படையிலும் நிற்க வேண்டும்.

பருத்தித் துணி சுற்றுச்சூழலுக்கு ஏற்பவும், எல்லா பருவ நிலைக்கு ஏற்பவும் தோலுக்கும், நம் உடம்பிற்கும் ஏற்பவும் இயற்கையான பொருளாக இருப்பது உண்மைதான். இது, ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி ஆடைகளுக்கும் பொருந்தும். ஆனால், நாம் சோதித்து பார்க்க வேண்டியது, உற்பத்தி, விற்பனை மற்றும் நுகர்வு. காதியை எடுத்துக் கொண்டால், தயாரிப்பாளர்களுக்கு உகந்த சுற்றுச் சூழல் சார்ந்த தகுந்த தொழில் நுட்ப மாகும். காதி பரவலான வகையில் உற்பத்தி செய்யப்படுவதால் அதனால் வரும் வருமானம் கோடான கோடி மக்களுக்கு பயன்பட்டு அவர்களின் வாங்கும் திறன் அதிகரிக்கும்.

நாம் தொடர்ந்து நிலைத்து நிற்கும், சுற்று சூழலுக்கு உகந்த முன்னேற்றத்தை விரும்பினால் நம்முடைய அனைத்து முன்னேற்றங்களுக்கும் காதி அடிப்படையாக இருக்கிறது. காதி இயக்கம் மக்கள் இயக்கமாக மாறி காதி தேசிய உடையாக மாற வேண்டும். மக்களின் எண்ண ஓட்டம் பெருமளவில் உருவாக்கப்படுகிறது என்ற நிலையில் நம்முடைய ஆடைத் தேவைக்கு காதியை அணிவோம் என்ற நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். காதியை பயன்படுத்துவதால், மனித இனத்தின் மிகத் தொன்மையான திறன் ஒன்றை நாம் பாது காக்கிறோம். ●

## வளர்ச்சிக்கான செயல்திட்டப் பாதை

### கைத்தறி துணிக்கடை ஒதுக்கீட்டுக்கான ஆன்லைன் தளம்

கைத்தறித் துணிக்கடைகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஆன்லைன் தளத்தை மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் அண்மையில் தில்லியில் அறிமுகம் செய்தது. கைத்தறி விற்பனை செய்யும் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதை ஒழுங்குபடுத்துவதற்கான இந்த தளம் தங்களுக்கு பெரிதும் உதவுவதாக நெசவாளர்கள் கூறியுள்ளனர். இந்தியாவில் கைத்தறிப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக ஆண்டு தோறும் 340 நிகழ்வுகள் கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகத்தின் ஆதரவில் நடத்தப்படுகின்றன. கைத்தறிப் பொருட்களை சந்தைப்படுத்துவதை மேம்படுத்தும் வகையில் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சிகளில் கடைகளை ஒதுக்கீடு செய்வதில் எளிமையான நடைமுறைகள், எளிதாக அணுகுதல், மற்றும் புதிய விண்ணப்பதாரர்கள், விவசாயிகள், அமைப்புகள் ஆகிய அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்குதல், வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கு இந்த புதிய இணையதளம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆன்லைன் தளம் எவ்வாறு செயல்படுகிறது?

சந்தைப்படுத்தும் நிகழ்ச்சிகளில் கடைகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஆன்லைன் விண்ணப்பங்களைக் கோரி முன்னணி செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளியானவுடன் நெசவாளர்களும், நெசவாளர் சங்கங்களும் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க முடியும். கடைகளுக்காக முதல்முறை விண்ணப்பிக்கும் போது நெசவாளர்களும், நெசவாளர் சங்கங்களும் தங்களை ஆன்லைன் தளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன்பின் அவர்களின் தகவல் விவரங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும். அவர்கள் விண்ணப்பங்களை தாக்கல் செய்வதற்கு, ஆன்லைனில் நுழைவதற்காக நுழைவு அடையாளமும், கடவுச் சொல்லும் வழங்கப்படும். அவர்கள் ஆன்லைன் தளத்தில் பதிவு செய்தவுடன், ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியும். ஆன்லைனில் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நெசவாளர்கள் சேவை மையத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும். நெசவாளர்கள் சேவை மையத்தின் ஆளுகைக்கு கீழ் தான் விண்ணப்பதாரர்கள் வருவர் என்பதால் இவ்வாறு செய்யப்படுகிறது. அந்த விண்ணப்பங்களை நெசவாளர்கள் சேவை மையம் குறிப்பிட்ட காலத்திற்குள் பரிசீலிக்கும். ஏதேனும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணங்களை நெசவாளர்களுக்கு சேவை மையம் தெரிவிக்க வேண்டும். அனைவரிடமிருந்தும் பெறப்பட்ட தகுதியுடைய விண்ணப்பங்கள் கணினியில் தொகுக்கப்பட்டு, கணினி மூலமான குலுக்கலுக்கு தயார் நிலையில் வைக்கப்படும். குலுக்கல் முடிந்த பின்னர் மாநில வாரியாகவும், ஸ்லாட் வாரியாகவும் தேர்வு செய்யப்பட்டவர்கள் பட்டியலும், காத்திருப்போர் பட்டியலும் தயாரிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்குரிய கடை எண்ணுடன் (ஸ்டால்) கூடிய தகவல் கணினியில் இருந்து குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படும். ஆன்லைன் தளத்தில் உள்நுழைந்து கடை ஒதுக்கீடு ஆணையை நெசவாளர்கள் அச்சிட்டுக் கொள்ள முடியும். இந்தக் கடிதத்தைக் கொண்டு சென்று நிகழ்ச்சி அமைப்பாளர்களிடம் காட்டி தங்களுக்குரிய கடைகளை பெற்றுக் கொள்ளலாம். இதை http://handloomstall.gov.in/HEMS/pages/hems_home.action என்ற இணையதளத்தின் மூலமாகவும் அணுக முடியும்.


### இந்தியாவில் இயற்கை எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான #Gas4India பரப்புரை:

இந்தியாவில் இயற்கை எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான #Gas4India பரப்புரை அண்மையில் தொடங்கப்பட்டது. இயற்கை எரிவாயுத்துறையின் வளர்ச்சிக்காக அத்துறையில் பணியாற்றும் பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்த பரப்புரையில் கைகோர்த்துள்ளன. #Gas4India என்பது இயற்கை எரிவாயுவை சமையல், போக்குவரத்து, விளக்குகள், வணிகப் பயன்பாடு ஆகியவற்றுக்கு பயன்படுத்தி வருபவர்கள், இனிவரும் நாட்களில் பயன்படுத்த இருப்பவர்கள் என அனைவருக்கும் அதன் தேசிய, சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் பயன்களை விளக்கி, அனைத்து குடிமக்களுக்கான எரிபொருளாக மாற்றுவதற்காக நாடு தழுவிய அளவில் நடத்தப்படும் பல்லூடக, பல நிகழ்வுகளை உள்ளடக்கிய பரப்புரை ஆகும். டுவிட்டர், பேஸ்புக், யூ டியூப், லிங்க்டு இன் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாகவும், இதற்காக உருவாக்கப்படுள்ள தனி வலைப்பூ தளம் மூலமாகவும், உள்ளூர் நிகழ்வுகள் மூலமாகவும் கலந்துரையாடல்கள், பயிலரங்குகள், கலாச்சார நிகழ்வுகள் ஆகியவற்றின் வழியாக மக்களைத் தொடர்பு கொள்வதும் இந்த பரப்புரையின் அங்கமாகும். இதற்கான இணையதளம், டுவிட்டர், பேஸ்புக் பக்கம், மையக்கரு பாடல் ஆடல் ஆகியவற்றை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) திரு. தர்மேந்திர பிரதான் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்திய எரிசக்தி பயன்பாட்டில் 6.5% ஆக இருக்கும் இயற்கை எரிவாயுவின் பங்கை அதிகரிக்க வேண்டும் என்பது தான் இந்த பரப்புரையின் நோக்கம் ஆகும். அதுமட்டுமின்றி, எரிவாயு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நாடுமுழுவதும் எரிவாயு தொகுப்புகளையும், எரிவாயு உட்கட்டமைப்பு வசதிகளையும் இந்திய அரசு ஏற்படுத்தி வருகிறது. எரிவாயுத் தொகுப்பு அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை இந்திய எரிவாயு ஆணையம் (கெயில்) இறுதி செய்து விட்டது. எரிவாயுக் குழாய்களை அமைக்கும் பணி விரைவில் தொடங்கவுள்ளது. நிலக்கரி படுகைகளில் கிடைக்கும் மீத்தேனில் இருந்து செயற்கை எரிவாயுவை உருவாக்கவும், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு, குழாய் மூலம் கொண்டு செல்லப்படும் இயற்கை எரிவாயு ஆகியவற்றின் பயன்பாட்டை அதிகரிக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 3 புதிய திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு முனையங்களும் விரைவில் அமைக்கப்படவுள்ளன. நியாயமான விலையில் தடையில்லாத எரிவாயு வினியோகத்தை உறுதி செய்வதற்காக வெளிநாடுகளுடன், நீண்டகால ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதுடன், இயற்கை எரிவாயு சுரங்கங்களையும் இந்திய அரசு வாங்கியிருக்கிறது. ●

# பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள தயாராக வேண்டும் – குடியரசுத்தலைவர்

– தி. சண்முகம்




சென்னை ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தின் (ஓ.டி.ஏ) 102வது பிரிவின் பயிற்சி நிறை விழா அணிவகுப்பு செப்டம்பர் 10–ம் தேதி நடைபெற்றது. குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

பயிற்சி முடித்த 269 பேரும் (32 பெண்கள் உள்பட) பயிற்சி நிறைவு விழா அணிவகுப்பில் கலந்து கொண்டனர். இதில் 19 பேர் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் ஆவார்கள். பூடான், ஆப்கானிஸ்தான், பாபு நியூகினியா ஆகிய நாடுகளின் வீரர்களும், ஒரு வீராங்கனையும் பயிற்சி முடித்தவர்களில் அடங்குவார்கள்.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்த குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் சம்பிரதாய முறைப்படி அழைத்து வரப்பட்டார். பின்னர் திறந்த ஜீப்பில் சென்று பயிற்சி முடித்த ராணுவ அதிகாரிகளின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார். அதன்பின்னர் சிறப்பு அணிவகுப்பு மேடையில் நின்று அதிகாரிகளின் மிடுக்கான அணிவகுப்பையும் சம்பிரதாய முறைப்படி ஏற்றுக்கொண்டார்.

பயிற்சியின் போது சிறப்பாக செயல்பட்டதற்கான பதக்கம் வருண்சிங் சவுகானுக்கும், படை பிரிவில் சிறப்பிடம் பெற்றதற்கான தங்கப்பதக்கம் ஆலா ஸ்ரீதருக்கும், வெள்ளிப்பதக்கம் திவ்யா தியாகிக்கும், வெண்கலப் பதக்கம் ராசீகசுக்கும் குடியரசுத் தலைவர் வழங்கினார்.



பின்னர் பயிற்சி முடித்த அனைவரும் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி முன்னிலையில் உறுதிமொழியை ஏற்றனர். பயிற்சி வீரர் என்ற நிலையில் இருந்து ராணுவ அதிகாரி நிலைக்கு உயர்ந்ததற்கான அடையாளமாக அவர்களின் தோள் பட்டையில் இருந்த கருப்பு நிற துணி அகற்றப்பட்டு, பொறுப்பு அளிப்பதற்கான ஸ்டார் அந்தஸ்து கொடுக்கப்பட்டது. சிறப்பிடம் பெற்ற சவுகானுக்கு குடியரசுத் தலைவர் ஸ்டார் அந்தஸ்தை வழங்கினார்.

ராணுவத்திற்கான பிரத்யேகப் பாடலை பயிற்சி முடித்தவர்கள் உணர்ச்சிகரமாக பாடியது அனைவரையும் கவர்ந்தது எனலாம்.

---

**தி.சண்முகம்,** பாதுகாப்புத்துறை மக்கள் தொடர்பு அதிகாரி.

## விழாவில் பிரணாப் முகர்ஜி பேசியதாவது:




நமது நாடு 122 மொழிகளையும், 1600க்கு மேற்பட்ட பேச்சு மொழிகளையும் கொண்டது ஆகும். இது போன்ற பல்வேறு பன்–முகத்தன்மை கொண்ட நம்நாட்டில் தேசிய கொடியும், அரசியல் அமைப்பும்தான் நம்மை ஒற்றுமைப்படுத்துகிறது. 21–ஆம் நூற்றாண்டில் பாதுகாப்பு தொடர்பான கடுமையான சவால்களை நாம் சந்தித்து வருகிறோம். இந்த காலகட்டத்தில் தன்னலமற்ற நாடு பற்று கொண்ட இளைஞர்கள், இளம் பெண்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் நாட்டிற்கு சேவை செய்ய முன்வரவேண்டும்.

இந்தியனாக இருப்பது பெருமைதான் என்றாலும், ராணுவத்தில் சேர்ந்து சேவை செய்வது என்பது மிகவும் பெருமைக்குரியது ஆகும். இவர்கள் தங்களது உழைப்பு மற்றும் தன்னலமற்ற பணியால் இந்த சவால்களை எதிர்கொள்வோம். இவ்வாறு அவர் பேசினார். ●